பக்கங்கள்: இருபத்து எட்டு

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 கார்த்திகை 5 திங்கட்கிழமை (21.11.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 360



14 நீதித்துறையில் நம்பிக்கை இழந்த இலங்கை மக்கள்



21 கூடங்குளம் அனுமின் நிலையம் ஏன்?



25 அசத்தினார் அப்ரிடி

# தமிழர்கள் கொல்லப்பட்டனர் எனக்கூறிய 'சிறிலங்காவின் கொலைக்களம்' போலி

## நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையில் தெரிவிப்பு
## அலரி மாளிகையில் ஜனாதிபதியிடம் நேற்று கையளிப்பு


கொழும்பு, நவம்பர் 21

போரின் இறுதிக் கட்டத்தில் இலங்கை இராணுவத்தினர், தாம் கைது செய்த போராளிகளை விசாரணை ஏதுமின்றிச் சுட்டுக் கொன்றார்கள் என்றும் பொதுமக்களின் இருப்பிடங்கள் மருத்துவமனைகள் என்பவற்றின் மீது கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடத்தினார்கள் என்றும் குற்றஞ்சாட்டி 'சனல் 4' தொலைக்காட்சி வெளியிட்ட 'சிறிலங்காவின் கொலைக்களம்' ஆவணப்படத்திலும் அதன் பின்னர் போராளிகள் சுட்டுக் கொல்லப்படுவதாக அது வெளியிட்ட மற்றொரு காணொளியும் முற்றிலும் போலியானவை என்று நல்லிணக்கத்துக்கான படிப்பினைகள் ஆணைக்குழு தனது இறுதி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நல்லிணக்கத்துக்கான படிப்பினைகள் ஆணைக்குழு ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாக நடத்தி வந்த விசாரணைகளின் இறுதி அறிக்கையை நேற்று மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளித்தது. அலரி மாளிகையில் மாலையில் நடைபெற்ற நிகழ்வில் ஆணைக்குழுவின் தலைவரும் முன்னாள் நீதியரசருமான சி.ஆர்.டி.சில்வா அறிக்கையைக் கையளித்தார்.

அந்த அறிக்கையில், போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்றிருக்கக் கூடிய சம்பவங்கள் தொடர்பாக விசாரணை நடத்துமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக

பக் 27



நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையின் வெற்றி அதனை அரசு நடைமுறைப் படுத்துவதிலேயே தங்கியிருக்கிறது என ஜனாதிபதியிடம் அறிக்கையைக் கையளித்த பின்னர் தலைவர் சி.ஆர்.டி.சில்வா தெரிவித்தார்.

## ரணில் மீது எதிர்த்தரப்பு பாலியல் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 21

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஓர் ஓரினச்சேர்க்கையாளர் என்று அவருக்கு எதிரான குழுவினர் குற்றஞ்சாட்டி உள்ளனர். அது குறித்து விசாரிக்குமாறும் அவர்கள் கட்சியைக் கோரி உள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்கவை ஐ.தே.கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து அகற்ற முனையும் அணியினரால், அவருக்கு

பக் 27

# அடுத்த ஆண்டுக்கான பட்ஜட்டை இன்று சமர்ப்பிக்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, நவ. 21

2012 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றில் இன்று சமர்ப்பிப்பார்.

பிற்பகல் 1.30 மணியளவில் 'பட்ஜட்' திட்டத்தை சபையில் சமர்ப்பித்து அது தொடர்பில் ஜனாதிபதி விசேட உரையொன்றையும் நிகழ்த்தவுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்றபின்னர் அவரால் சமர்ப்பிக்கப்படும் 6 ஆவது வரவு - செலவுத் திட்டம் இதுவாகும்.

பல்வேறு தரப்பினர்களிடமிருந்தும் கருத்துகள் பெறப்பட்டு இந்த முறை தயாரிக்கப்பட்டுள்ள வரவு - செலவுத்திட்டம் நாளை செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றில் விவாதத்திற்கு விடப்படும்.

வரவு - செலவுத்திட்டம் மீதான இரண்டாம் வாசிப்பு எதிர்வரும் 30 ஆம் திகதி புதன் கிழமைவரை நடைபெறும். அத்துடன், அன்

பக் 27

## எதிர்க்கட்சி எம்.பிக்கள் சிலர் அரசு பக்கம் இன்று தாவுவர்

கொழும்பு, நவ. 21

வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றில் இன்று சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அரசு பக்கம் தாவ உள்ளனர் என நம்பகரமாகத் தெரியவருகிறது.

அரச தரப்பு முக்கியஸ்தர்களுக்கும், கட்சி தாவ உள்ளோர்களுக்குமிடையே இடம்பெற்ற

பக் 27

### மீன் விலை கிலோ 8 ரூபா



மன்னாரில் காரை மீன் அதிகம் பிடிபடுகிறது. அதனால் தற்போது 5 முதல் 8 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. (செய்தி 4 ஆம் பக்கத்தில்)

# பொன்சேகாவை விடுவிக்க இனி மக்கள் போராட்டங்கள்

## முன்னெடுப்போம் என்கிறார் ரணில்

கொழும்பு, நவ. 21

மூன்று வருடங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் விடுதலைக்காக உள்நாட்டில் மக்கள் போராட்டங்களை முன்னெடுப்பதுடன், வெளிநாடுகளிலும் பிரசாரங்களை மேற்கொண்டு ஒத்துழைப்பைக் கோரவுள்ளோம் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு தெமட்டகொடை சந்தியில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து

பக் 27

# சம்பூர் மின் ஒப்பந்தத்தை நிறைவேற்ற கூடங்குளம் அணு மின் நிலையம் 'ஈடு'

## அது இல்லையேல் அனல் மின் நிலையமும் இல்லை என்கிறது அரசு

கொழும்பு, நவ. 21

தமிழ்நாடு, கூடங்குளம் அணு மின்நிலையத்திலிருந்து கடல் வழியாக இலங்கைக்கு மின்சாரம் வழங்கப்படும் திட்டம் தாமதமாகும் பட்சத்தில் திருகோணமலை சம்பூர் அனல்மின் நிலையத்திற்கான இறுதி ஒப்பந்தத்தைக் கைச்சாத்திடுவதிலும் தாமதம் ஏற்படலாமென்று நம்பகரமாகத் தெரியவருகிறது.

இலங்கைக்கு மின்சாரம் வழங்குவதற்காகவே கூடங்குளத்தில் அணு மின் நிலையம் அமைப்பதில் இந்திய அரசு விடாப்பிடியாக இருக்கிறது என்று மறுமலர்ச்சித் திராவிடர்

பக் 27

## முல்லைத்தீவில் 2 சபைகளுக்கு டிசெம்பர் 31 இல் தேர்தல்

கொழும்பு, நவ. 21

முல்லைத்தீவில் உள்ள இரண்டு உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் எதிர்வரும் டிசெம்பர் 31 ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.


எனினும் கண்ணிவெடியகற்றல் மற்றும் மீள்குடியமர்வை பொறுத்தே குறித்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் திகதி உறுதி செய்யப்படும் என்றும் தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

புதுக்குடியிருப்பு மற்றும் கரைத்துறைப்பற்று

பக் 27

உதயன்

தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம்: 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/பக்கங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய காலநிலை நிலவுவதற்கான சாத்தியம் உள்ளது.

# ஜனாதிபதித் தேர்தலில் ரணில் நின்றிருந்தால் கூடுதலான வாக்குகளைப் பெற்றிருக்கலாம்

## அவரிடமே கோத்தா தெரிவித்ததாக 'விக்கிலீக்ஸ்' தகவல்

கொழும்பு,நவ.21

ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளராக நீங்கள் நின்றிருக்க வேண்டும். அவ்வாறு நின்றிருந்தால் கூடுதலான வாக்குகளைப் பெற்றிருக்க முடியும். இவ்வாறு கோத்தபாய ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்கவுக்கு கூறியுள்ளார். இந்தக் கலந்துரையாடல் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவரிடம் தெரிவித்தார் இதனைத் தற்போது விக்கிலீக்ஸ் வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பற்றீஸியா புட்டினன்ஸ் மற்றும் இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இடையில் கடந்த 2010 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பு தொடர்பாக புட்டினன்ஸ் அமெரிக்காவின் இராஜாங்கத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்ட 'கேபிள்' மூலமான தகவலை விக்கிலீக்ஸ் கசியவிட்டுள்ளது.

அனுப்பப்பட்டுள்ள கேபிளில் இரகசியமானது எனக் குறிப்பிட்டு அனுப்பப்பட்டவற்றையே விக்கிலீக்ஸ் இப்போது வெளியிட்டு வருகிறது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பின் போது, அரசின் நடவடிக்கைகள், செயற்பாடுகள் குறித்து யாரும் பயப்படத் தேவையில்லை. பொன்சேகா நாட்டில் குழப்பம் ஏற்படுத்த சதித்திட்டம் தீட்டியுள்ளார். அதன் போது எனக்கு இந்த விடயம் தொடர்பில் எதுவும் தெரியாது. எல்லாம் பொன்சேகாவும், ஜே.வி.பியினரும் தான் என்று என்னிடம் ரணில் தெரிவித்தார். ரணில் தொழில் முறையிலான அரசியல்வாதியும் நியாய பூர்வமாக செயற்படுபவரும் கூட.

மேலும் ஜே.வி.பி-யு.என்.பி கூட்டானது நிலைத்து நிற்கக் கூடியதல்ல. இரண்டு கட்சிகளுக்கிடையேயும் காலம் காலமான பகையுணர்வு இருக்கின்றது. 1980 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக்கட்சி அரசுக்கு எதிராக ஆயுதக் கிளர்ச்சியில் ஜே.வி.பி ஈடுபட்டது. ஜே.வி.பி யானது மிகவும் பயங்கரமான கட்சியாகும்.

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின் போது கிராமப் புறங்களில் ஜே.வி.பி மிகவும் கீழ்த்தரமான முறையில் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டது. இவ்வாறு கோத்தபாய ராஜபக்ஷ சந்திப்பின் போது தன்னிடம் தெரிவித்ததாக அமெரிக்கத் தூதுவர் தமது கேபிள் தகவலில் குறிப்பிட்டுள்ளார். (ஒ-15)



மனம் தளராத மாணவர்கள்: முல்லைத்தீவு உடையார் கட்டில் அமைந்துள்ள குரவில் தமிழ் வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற ஜி.சீ.ஈ.சாதாரணதர முன்னோடிப் பரீட்சையின்போது மழை குறுக்கிட்டதால் மாணவர்கள் குடை பிடித்தவாறு பரீட்சை எழுதும் அவலத்தை இங்கு காணலாம். (555)

# நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை பற்றி வெளிநாட்டு இராஜதந்திரிகள் ஆலோசனை

கொழும்பு, நவ.21

இலங்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ள நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாக கொழும்பிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகள் ஆலோசனைக் கூட்டம் ஒன்றை நேற்றுநடத்தியுள்ளனர்.

கொழும்பிலுள்ள பிரிட்டன் தூதரகத்தில் இந்த ஆலோசனைக் கூட்டம் இடம்பெற்றதாக கொழும்பு இராஜதந்திர வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இந்தக் கூட்டத்தில் கருத்து வெளியிட்டுள்ள அமெரிக்க மற்றும் பிரிட்டன் இராஜதந்திரிகள், தாம் முக்கியமாக அறிக்கையின் பரிந்துரைகளை எதிர்பார்த்திருப்பதாகவும், மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக் கூறப்படுவது அவசியமானது என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

அத்துடன் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு வருத்தம் தெரிவிப்பது குறித்தும் இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் வழங்குவது குறித்தும் அறிக்கையில் பரிந்துரைக்கப்படுவதும் அவசியமானது.

இல்லையேல், உலகத்தை ஏமாற்ற செய்யப்பட்ட முயற்சி என்றே நல்லிணக்க ஆணைக்குழுவை அனைத்துலக சமூகம் கருதும் என்றும் அமெரிக்க, பிரிட்டன் இராஜதந்திரிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அதேவேளை, இந்த அறிக்கை பகிரங்கப்படுத்தப்பட வேண்டும் என்பதிலும் அவர்கள் ஒத்த கருத்தை வெளிப்படுத்தியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது ஒரு பகிரங்கப்படுத்தப்படும் ஆவணமாக இல்லாத போதும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் அறிக்கையில் உள்ள விவரங்கள் வெளிப்படுத்தவுள்ளதாக இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியிருந்தார்.

இதேவேளை, அமெரிக்கா, பிரிட்டன், கனடா, அவுஸ்ரேலியா, ஐரோப்பிய ஒன்றியம், மற்றும் இந்தியா போன்ற நாடுகள் இந்த அறிக்கையின் உள்ளடக்கங்களை அறிந்து கொள்வதற்கு விருப்பம் கொண்டுள்ளன. அத்துடன் இந்த அறிக்கை இரகசியமாக வைக்கப்படக் கூடாது என்றும்அவை வலியுறுத்தியுள்ளன.

வெடி கொளுத்தி ஆரவாரமின்றி

# யாழ்.நகரில் அமைதியான முறையில் நேற்று நடந்த இரு சாவு ஊர்வலங்கள்

யாழ்ப்பாணம், நவ.21

யாழ்.நகருள் நேற்று நண்பகலுக்கு முன்னர் இரு மரண ஊர்வலங்கள் மிக அமைதியான முறையில் இடம்பெற்றன. இவை கடந்த சில காலமாக இடம்பெறும் இறுதி ஊர்வலங்களுக்கு மாறாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

தற்போது குடாநாட்டில் சாவுகள் இடம்பெற்றால் இறுதி ஊர்வலம் ஆரம்பமாகும்போதே அந்த வீட்டின் வாசலிலேயே சீன வெடிகள் கட்டுக் கட்டாக கொளுத்தப்படும். அது பிரதான வீதி, பாடசாலைகள் இருக்கும் இடங்கள், வர்த்தக நிறுவனங்கள் உள்ள பகுதி என்று பார்ப்பதில்லை. செவிப்பறைகள் வெடிக்கும் அளவுக்கு அவை நாலாபுறமும் சிதறிச் சீறி வெடிக்கும்.

இளைஞர் கூட்டம் அங்கு கூடி நின்று பட்டாசுகளை அட்டகாசமாகக் கொளுத்தி மகிழ்வார்கள். இது அண்மைக்காலத்தில் வந்த புதிய 'பஷன்' என்றுதான் சொல்ல வேண்டும். பொதுவாக வெடி கொளுத்துவது மகிழ்ச்சியை வெளிப்படுத்தவே. ஆனால் நம்மவர்கள் 'செத்த வீட்டிலும்' இவ்வாறு ஆரவாரிப்பது ஏன் என்பதுதான் புரியவில்லை.

மரணமானவர் அல்லது அவரது குடும்பத்தார் 'பசை'யுள்ளவர்கள் என்றால் சொல்லத் தேவையில்லை. வீதி நெடுகிலும் 'சரை சரை'யாகக் கட்டி தாங்கள் செல்வாக்கு மிக்கவர்கள் என்பதைக் காட்டுவதற்காக வெடிகளை அட்டகாசமாகக் கொழுத்துவர்.

சூழல் மாசுபடுவது குறித்தோ பாடசாலை மாணவர்கள், முதியவர்கள், மாற்று வலுவுடையோர் என்றோ அவர்கள் பொருட்படுத்துவதில்லை. இளைஞர் கூட்டத்தின் ஒரே குறிக்கோள் வெடி கொழுத்தி ஆரவாரிப்பதே.

சந்திகள், சன நடமாட்டம் கூடிய பகுதிகள் என்றால் அவர்களின் 'கெட்டித்தனம்' இன்னும் கூடிவிடும்.

இவ்வாறான ஒரு கால கட்டத்தில் நேற்றைய இறுதி ஊர்வலங்கள் இரண்டும் யாழ். நகர மக்களை 'விழிக்க' வைத்தன.

நேற்றைய இறுதி ஊர்வலத்தில் ஒன்று யாழ்.நகர பிரபல வர்த்தகரான 'வெங்கடேஸ்வரா சைக்கிள் விற்பனை நிலைய' உரிமையாளரின் மனைவியினது ஆகும். அன்னார் அண்மையில் இடம்பெற்ற விபத்தில் சிக்கி உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

# ஆசனப்பட்டி அணியாத சாரதிகளுக்கு தலா 1,500 ரூபா அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம்,நவ.21

ஆசனப்பட்டி அணியாமல் வாகனம் செலுத்திய ஐந்து பேரை தலா ஆயிரத்து 500 ரூபா அபராதம் செலுத்துமாறு யாழ்.நீதிவான் உத்தரவிட்டார். யாழ். நகரின் வெவ்வேறு பகுதிகளில் ஆசனப்பட்டி அணியாமல் வாகனம் செலுத்தியவர்கள் ஐவர் யாழ்ப்பாண போக்குவரத்துப் பொலிஸாரிடம் சிக்கிக் கொண்டனர். கடந்த வெள்ளியன்று யாழ் நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராசா முன்னிலையில் இவர்கள் ஆஜர்படுத்தப்பட்டனர். அதன்போதே தலா 1, 500 ரூபா அபராதம் செலுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம், வாகனப் பதிவுப் பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய இருவரை 8 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு யாழ். நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஒ-14-04)

# நிகழ்வுகள் இன்று

## பாராட்டு விழா

கிளிநொச்சி,நவ.21

கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரியின் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான பாராட்டு விழா முற்பகல் 10.30 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ம-313)

## கூட்டம்

சாவகச்சேரிநகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் 14 ஆவது வருட பூர்த்தியையொட்டிய கூட்டம் பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி புவேந்தன் பாலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

சங்கத் தலைவி திருமதி போ.நவரத்தினம் தலைமையில் நடைபெறும் கூட்டத்துக்கு சங்கத்தின் அனைத்து அங்கத்தவர்களையும் கலந்து கொள்ளுமாறு செயலாளர் திருமதி ம.கீர்த்திநாதன் அறிவித்துள்ளார். (ம-207)

## தியான யோகா பயிற்சி

வாழும் கலைப்பயிற்சி நிலையத்தின் மூச்சுப் பயிற்சி, பிரணாயாமம் சுதர்சனகிரியா, தியானம், யோகாசனம் போன்ற பயிற்சிநெறிகள் இன்று திங்கட்கிழமை முதல் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை வரை முற்பகல் 10 மணிதொடக்கம் பிற்பகல் 12.30 வரையும் மாலை 5 மணிமுதல் இரவு 7.30 வரையும் இடம்பெறவுள்ளன.

இந்தப் பயிற்சி நெறிகள் நல்லூர் மகேஸ்வரன் மணிமண்டபத்தில் இடம்பெறும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஒ-323)

# கிழக்கு மாகாண முதலமைச்சராக முஸ்லிமா? ஈரோஸ் கட்சி ஒருபோதும் அனுமதியாதாம்

கொழும்பு, நவ.21

கிழக்கு மாகாணசபையின் முதலமைச்சராக ஒரு முஸ்லிம் வருவதை எமது கட்சி ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது. கிழக்கு மாகாணத்தில் பூர்வீகக் குடிகளான தமிழர் ஒருவரே முதலமைச்சராக வரவேண்டும். அதுவே கிழக்கின் நிரந்தரமான இருப்புக்கு வழிகோலும் இவ்வாறு ஈரோஸ் கட்சியின் தலைவர் பிரபா தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மட்டக்களப்பில் நடைபெற்ற, ஈரோஸ் இயக்கத்தை மக்கள் மயப்படுத்தல் சம்பந்தமான கருத்தரங்கில் உரையாற்றும்போதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழ் மக்களின் பூர்வீக தாயகம். எமது இந்தத் தாயக பூமிக்காக தமிழ் மக்கள் சிந்திய இரத்தம் வீண் போகக் கூடாது. எம்மை நாமே ஆள வேண்டும். வடக்கு, கிழக்கு மாகாணங்களின் முதலமைச்சராக ஒரு தமிழ் மகன் தான் வரவேண்டும். இதை விடுத்து ஒரு முஸ்லிம் உறுப்பினர் ஒருவர் முதலமைச்சராக வருவதை எமது கட்சி ஒருபோதும் அனுமதிக்காது.

தமிழர் ஒருவர் முதலமைச்சராக வருவதற்காக எமது கட்சி எந்தக் கட்சியுடனும் சேர்ந்து செயற்படத் தயாராக உள்ளது. தற்போதுள்ள கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சந்திரகாந்தன் தமிழ் மக்களை பேரினவாதிகளுக்கு விற்று விட்டார். தமிழ் மக்களைக் காட்டிக் கொடுத்ததற்காக அரசாங்கம் அவருக்கு கொடுத்த பரிசுதான் முதலமைச்சர் பதவி. தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தனது வயிற்றுப் பிழைப்புக்காக அரசின் சலுகைகளைப் பெற்றுக் கொண்டு மறைமுகமாக ஆயுதங்களையும் வைத்துக்கொண்டு தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை நசுக்க முனைகிறது.

ஆனால் எமது ஈரோஸ் கட்சி அரசுடன் சேர்ந்துகொண்டு தமிழ் மக்களுக்கு விரோதமாக ஒருபோதும் செயற்படாது. எமது ஈரோஸ் கட்சியில் போட்டியிட்டு தமிழ் மக்களின் வாக்குகளால் முதன் முதலாக நாடாளுமன்றம் சென்ற தற்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் உள்ள அமைச்சர் பசீர் சேகுதாவூத் கிழக்கு மாகாண சபைக்கு முதலமைச்சராக ஒரு முஸ்லிம் தான் வரவேண்டும் என்று கூறுகிறார்.

இவர் நாடாளுமன்றம் செல்வதற்கான பாதையைக் காட்டியவர்களே தமிழர்கள்தான் என்பதை மறந்துவிட்டார். கடந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தலிலும் இவர் ஈரோஸ் கட்சியில் இருந்ததற்காகத் தான் தமிழ் மக்கள் இவருக்கு வாக்களித்தார்கள். ஆனால் தற்போது இவர் தமிழ் மக்களுக்கு விரோதமாகச் செயற்பட்டுக்கொண்டிருக்கிறார்.- என்றார். (ங)

# இரசாயனத் தொழிற்சாலையை இயக்கினால் நாளொன்றுக்கு 25 தொன் குளோரின் உற்பத்தி

பரந்தன், நவ.19

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டால் தினமும் 25 தொன் குளோரின் மற்றும் 'கோஸ்ரிக் சோடா' என்பவற்றை உற்பத்தி செய்ய முடியும். தற்போது நாட்டுக்குத் தேவையான அளவு குளோரின் வெளிநாடுகளிலிருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றது.

இவ்வாறு அரச வளங்கள் மற்றும் நிறுவன அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

மூன்று தசாப்த கால இன வன்முறை காரணமாக முற்றாக அழிவடைந்திருந்த பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையை மீள நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகளை அரசு தற்போது மேற்கொண்டு வருகின்றது.

முன்னர் இருந்த அதே இடத்தில் 217 ஏக்கர் நிலப் பரப்பிலேயே இதனைமீள இயக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பதற்கு 3 மில்லியன் ரூபா நிதி தேவைப்படுவதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இரசாயனத் தொழிற்சாலையில் இந்தியா, அயர்லாந்து மற்றும் டுபாயைச் சேர்ந்த முதலீட்டாளர்கள் முதலிட முன் வந்துள்ளதாக அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை மீளவும் ஆரம்பிக்கப்பட்டால் நாளொன்றுக்கு 25 தொன் குளோரின் மற்றும் 'கோஸ்ரிக் சோடா' என்பவற்றை உற்பத்தி செய்ய முடியு மென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அரச புள்ளி விவரங்களின் படி இலங்கைக்குத் தற்போது 2 ஆயிரம் மெற்றிக்தொன் குளோரின் மற்றும் 15 ஆயிரம் மெற்றிக் தொன் 'கோஸ்ரிக் சோடா' என்பன ஆண்டொன்றுக்கு தேவைப்படுவதாகவும் இவை வெளிநாடுகளிலிருந்தே தற்போது இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (க-15)

# ரோந்து சென்ற கொன்ஸ்டபிளின் துப்பாக்கி திருட்டு


கொழும்பு, நவ.21

அம்பாந்தோட்டை மாவட் டத்தின் மித்தெனிய நகரில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவரின் ரி-56 ரக துப்பாக்கியை மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருநபர்கள் பறித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

குறித்த கொன்ஸ்டபிள் மற்றொரு கொன்ஸ்டபிள் சகிதம் ரோந்து நடவடிக்கைக்காக நடந்துசென்று கொண்டிருந்தார். அப்போது திடீரென மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் கொன்ஸ்டபிளிடம் இருந்த துப்பாக்கியைப் பறித்துக் கொண்டு விரைந்து சென்று விட்டனர்.

துப்பாக்கிக் கொள்ளையர்களை கைது செய்வதற்காக தங்காலை பொலிஸ் அத்தியட்சகர் சி.ஏ. வீதிசிங்கவின் பணிப்புரையின் பேரில் விசேட பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ங)



புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள இலங்கையின் முதலாவது அதிவேக நெடுஞ்சாலையைப் பார்வையிடப் பொதுமக்கள் நேற்று அனுமதிக்கப்பட்டனர். இதன்போது யானை நடனம், கண்டிய நடனம் போன்ற களியாட்டங்களோடு அதிவேக நெடுஞ்சாலையைப் பார்த்துப் பொதுமக்கள் ஆச்சரியமடைந்தனர்.

# இந்தியாவிலுள்ள சமஷ்டி நடைமுறையை பிற நாடுகள் கற்றுக் கொள்ள வேண்டும்

## இப்படிக் கூறுகிறார் அமைச்சர் பீரிஸ்

கொழும்பு, நவ.21



பல்லின மக்களைக் கொண்டிருக்கும் நாடான இந்தியா, சமஷ்டி முறைமூலம் இனங்களை நிர்வகிக்கும் நடைமுறை குறித்து இலங்கையின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜி.எல். பீரிஸ், ஆச்சரியத்தை வெளியிட்டுள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகரகம் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் முன்னாள் வெளியுறவுச் செயலாளரான சியாம் சரணின் சிறப்புரை ஒன்று இந்திய இலங்கை நிதியத்தில் இடம்பெற்றபோதே பீரிஸ் இந்தக் கருத்துக்களை பகிர்ந்துகொண்டார்.

உலகில் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவிடம் இருந்து அபிவிருத்தி மற்றும் ஜனநாயக பண்புகள், இனங்களுக்கு இடையிலான பகிர்வுகள் என்பவற்றை பிறநாடுகள் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியம் என்றும் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு சமஷ்டி முறையில் அமைய வேண்டும் என்று எண்ணத்தை கொண்டிருந்த பீரிஸ் பின்னர் சிங்கள தேசியவாதிகளின் கருத்துக்களால் அந்தக் கொள்கையை கைவிட்டு, இனப்பிரச்சினைக்கு உள்ளக ரீதியான தீர்வே தேவை என தற்போது கூறி வருவது குறிப்பிடத்தக்கது. (ங)

# சிங்கள இனத்தைச் சேர்ந்தவன் என்று எண்ணுகையில் வேதனையடைகிறேன்

கொழும்பு, நவ.21

அர்ஜுனா ரணதுங்க



நாட்டை விடுவித்த ஒரு வீரருக்கு சிறைத் தண்டனையை பரிசளித்ததன் மூலம் சிங்கள மக்கள் மிலேச்சத்தனமானவர்கள் என்ற நிலை உருவாகியுள்ளது. இதனால் சிங்கள இனத்தைச் சேர்ந்தவன் என்பதை எண்ணும்போது நான் வேதனைப்படுகிறேன். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க ஆதங்கம் வெளியிட்டுள்ளார்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு மூன்றாண்டு கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டமை தொடர்பில் கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

அனைவரும் இணைந்து செயற்பட வேண்டிய காலம் உதயமாகியுள்ளது. இந்த நாட்டுக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுத்த வீரருக்கு நேர்ந்துள்ள நிலைமைகள் இலங்கையர் என்ற வகையில் அதிருப்தி அளிக்கின்றன. இதனால் சிங்கள இனத்தைச் சேர்ந்தவன் என்ற ரீதியில் நான் வேதனைப்படுகின்றேன்.

தொடர்ச்சியாக ஏகாதிபத்திய ஆட்சியை மேற்கொள்ள முயற்சித்தால் சதாம் ஹூசெய்ன் மற்றும் லிபிய தலைவருக்கு ஏற்பட்ட நிலைமையே இலங்கைக்கும் ஏற்படும் -என்றார். (ங)

**Golden Business Opportunity for Professional Training Educational Institutions in Jaffna**

We are a well-established and unique **Abroad Universities Pathway Provider** for undergraduate and postgraduate students with established centres in more than fifteen locations in India, Pakistan, China and Nepal.

We are currently running career courses in IT, Management Studies, Accounting and Hospitality Management.

Students can complete the first year of the degree course in the local institute and then transfer to institutes/universities in Australia, UK and New Zealand or complete their degree in the Australian University of Ballarat in Colombo.

We are looking for partners having existing infrastructure with classrooms and computer labs in the city of Jaffna.

The initial investment depends on the present infrastructure available with the applicant. Applicants presently operating training institutes and having ready infrastructure will be preferred.

Those interested should contact us through **auslinks@gmail.com** with brief details about themselves and present business activities.

AUPP EDUCATION
ABROAD UNIVERSITY PATHWAY PROGRAM

# மீள்குடியமர்த்தப்பட்ட 4 ஆயிரம் குடும்பங்கள் புதுக்குடியிருப்பில் மோசமான அவல வாழ்வு

சண்டிலிப்பாய்,நவ.21

மழைகாலம் ஆரம்பித்துள்ளதால் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் அவசர அவசரமாக மீள்குடியமர்த்தப்பட்ட குடும்பங்களில் 50 வீதத்துக்கும் அதிகமான குடும்பங்கள் வீட்டு வசதிகள் செய்து கொடுக்கப்படாததால் மழை வெள்ளத்தில் வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

கிடுகுகளையும் உடைந்த சீற் துண்டுகளையும் பொருத்தி அமைக்கப்பட்ட குடிசைகள் எல்லாம் மழை வெள்ளத்தால் சேதமடைந்துள்ளன. இதனால் நிம்மதியாகப் படுத்துறங்க முடியாமலும் சமைக்க முடியாமலும், விரக்தி மனப்பான்மையுடன் துன்பங்களை அனுபவித்து வருகின்றார்கள்.

போர் நடவடிக்கை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் நான்கு உதவி அரச அதிபர் பிரிவுகளிலிருந்து இடம்பெயர்ந்த பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வெளிநாடுகளின் அழுத்தம் காரணமாக அவசர அவசரமாகச் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டன.

சகல வசதிகளும் உடனடியாகச் செய்து தரப்படும் என்று ஆசை வார்த்தை கூறியதால் மீள்குடியமர்ந்த இவர்கள் தற்போது இருப்பிட வசதிகள் செய்து கொடுக்காததால் மழை ஆரம்பித்துள்ளதைத் தொடர்ந்து விரக்தியடைந்த நிலையில் செய்வதறியாது திண்டாடுகின்றார்கள்.

புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபர் பிரிவில் இதுவரை 7 ஆயிரத்து 23 குடும்பங்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளார்கள். இவர்களில் 671 குடும்பங்களுக்கு நிரந்தர வீட்டு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. 2 ஆயிரம் குடும்பங்களுக்குத் தற்காலிக வீடுகள் அமைப்பதற்கான கூரைத்தகடுகள் உட்படப் பல பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

எஞ்சியுள்ள 4 ஆயிரத்துக்கும் அதிகமாக குடும்பங்களுக்குக் குடிசைகள் அமைப்பதற்குக்கூட எந்தவித வசதிகளும் இதுவரை வழங்கப்படவில்லை.

இதனால் இவர்கள் தங்கள் வசதிக்கு ஏற்றவாறு கிடுகுகள், கூரை விரிப்புக்கள், உடைந்த சீற் துண்டுகள் போன்றவற்றைச் சேகரித்து சிறுசிறு குடிசைகளை அமைத்து வாழ்ந்து வருகிறார்கள். மழை ஆரம்பித்துள்ளதால் குடிசைகள் எல்லாம் படுத்து உறங்க முடியாதவாறு ஈரத்தன்மையுடன் காணப்படுகின்றன.

அத்துடன் சமைத்து உண்ண முடியாமல் திண்டாடும் இவர்கள் பல துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள்.

மேலும் வெள்ளநீர் தேங்கி நிற்பதால் பல்வேறு நோய்கள் பரவும் அபாயநிலையும் தோன்றியுள்ளது.

போதிய வைத்திய வசதிகள் எதுவுமற்ற நிலையில் வாழ்ந்து வரும் இந்த மக்கள் இந்த மழைக் காலத்தில் பெரும் அவலங்களைச் சந்திக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

அவசரஅவசரமாக இந்த மக்களை எதுவித அடிப்படை வசதிகளுமின்றி மீள்குடியமர்த்தியவர்கள் இவர்களின் நிலை தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுத்து இவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்பது அனைவரதும் வேண்டுகோளாகும்.(க-115)

# வங்கிக் கடனை திருப்பிச் செலுத்தாததால் புதிய கடன்களைப் பெறுவதில் அலைச்சல்

கிளிநொச்சி,நவ.21

கிளிநொச்சி மாவட்டத்தில் வர்த்தக வங்கியில் விவசாயக் கடன்களைப் பெற்ற பல விவசாயிகள் அவற்றைச் செலுத்தாததால் புதிதாகக் கடன்பெற விண்ணப்பித்த விவசாயிகள் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

யுத்தம் முடிவடைந்து கிளிநொச்சி மாவட்டத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்த பின்னர் வங்கிகளில் கடன்களைப் பெற்றே தமது விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். இதனடிப்படையில் சுமார் ஆயிரத்து 800 இற்கும் மேற்பட்ட விவசாயிகள் கிளிநொச்சியில் அமைந்துள்ள வர்த்தக வங்கியில் கடந்த ஆண்டு காலபோக நெற் செய்கைக்கெனக் கடன்களைப் பெற்றிருந்தனர். இவர்களில் சுமார் 600 பேர் வரையில் கடன்களை மீளச் செலுத்தவில்லை.

தற்போது ஏராளமான விவசாயிகள் கடன்களைப் பெறுவதற்கு விண்ணப்பித்தபோதும் நிலுவையாகவுள்ள கடன்களை வசூலித்த பின்னரே புதிய கடன்களை வழங்க முடியுமென வங்கி நிர்வாகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-6)

# தலைமன்னார் பியர் பகுதியில் குவியும் கரட்டை இன மீன்கள்!

மன்னார் மாவட்டத்தில் தற்போது கரட்டை என அழைக்கப்படும் மீன் அதிகளவில் பிடிபட்டு வருகின்றது. -தற்போது குறித்த மீன் தலைமன்னார் பியர் கடற்பரப்பில் அதிகம் பிடிக்கப்பட்டு வருகின்றது.

தற்போது அந்த மீனின் விலை மிகவும் குறைந்த நிலையிலேயே காணப்படுகின்றது. ஒரு கிலோ கரட்டை மீன் 5 ரூபாய் முதல் 8 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இதனால் மீனவர்கள் நஷ்டத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

தற்போது அந்த மீனைக் கருவாடு போடுவதற்கான நடவடிக்கையில் பெண்கள் ஈடுபட்டு வருகின்ற போதும் மன்னாரில் தொடர்ந்து மழை பெய்து வருவதனால் அவர்கள் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றமையும் குறிப்படத்தக்கது. (க-601)

# ஒட்டுசுட்டான் பிரதேச வீதிகள் தரமற்ற முறையில் புனரமைப்பு

முல்லைத்தீவு,நவ.21

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் தரமற்ற முறையில் வீதிப் புனரமைப்பு நடைபெறுவதால் அவை சீக்கிரமே பாதிப்புக்கு உள்ளாகி விடுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஒட்டுசுட்டான் - புதுக்குடியிருப்பு பிரதான வீதியிலிருந்து முத்துஐயன்கட்டு 2 ஆம் கண்டம் வரை செல்லும் வீதி ஒப்பந்தகாரர் ஒருவரால் பொறுப்பேற்கப்பட்டு ஒரு வருட காலமாக இழுபறிநிலையில் நின்றது. பின்னர் மக்களின் வற்புறுத்தலின் பேரில் தரமற்ற வகையில் புனரமைக்கப்பட்டது. ஆனால் ஒரு மாதம் செல்வதற்குள் அந்த வீதி மோசமாகப் பாதிக்கப்பட்டு பிரயாணத்தை மேற்கொள்ள முடியாத நிலைக்கு வந்துள்ளது.

தற்போது பேருந்துகள் செல்ல முடியாத நிலைக்கு-அந்த வீதி வந்துள்ளது. மேலும் சிதறிக் கிடக்கும் கற்களை ஒன்று கூட்டித் தார் பூசும் வேலையும் நடைபெறுகின்றது. இது எத்தனை நாள்களுக்கு நிலைத்திருக்குமென மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இந்த வீதி கிரவல் வீதியாக இருந்தபோது விவசாயத் தேவைக்குரிய வாகனங்கள் உட்படப் பேருந்துகளும் பிரயாணித்துள்ளன. ஆனால் பெரும் நிதி செலவிட்ட போதிலும் இந்த வீதியின் தற்போதைய நிலை பரிதாபமாகக் காணப்படுகின்றது.

எனவே இந்த வீதியை மீண்டும் கிளறியெடுத்துப் புதிதாகத் தரமான முறையில் புனரமைக்கப்பட வேண்டுமென்பதே பிரதேச மக்களின் வேண்டுகோளாகும்.

(க-500)

## பாராட்டுக்குரியவர்கள்...



சாதனை தொடரட்டும்: கிளிநொச்சி கனகாம்பிகைக்குளம் அ.த.க. பாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மற்றும் உயர் புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் துறக்களிக்கப்பட்ட பாராட்டு விழாவின்போது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் விருந்தினர்களுடன் காணப்படுகின்றனர். (421)

# நிர்வாக அலுவலராக பதவியுயர்வு

வடமாகாணச் சுகாதார அமைச்சினால் மன்னார் மாவட்டப் பொது வைத்தியசாலையின் நிர்வாக அலுவலகராக எஸ்.என்.ஏ.எம்.அப்துல் சஜானி என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்பு மன்னார் மற்றும் முருங்கன் பகுதிகளில் உள்ள மாவட்ட வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இவர் லிகிதராகப் பணியாற்றி வந்தார். இவருக்கு அண்மையில் வட மாகாணச் சுகாதார அமைச்சினால் மன்னார் மாவட்டப் பொது வைத்தியசாலையின் நிர்வாக அலுவலராகப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

இவர் மன்னார் மூர்வீதியைப் பிறப்பிடமாகவும் மன்/அல்-அஸ்ஹர் ம.வி,மன்/புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை ஆகிய பாடசாலைகளின் பழைய மாணவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க-601)

# கலையும் கலாசாரமும் மனித வாழ்வுடன் பின்னிப் பிணைந்த சிறப்பு அம்சமாகும்

## கிளிநொச்சி மேலதிக அரச அதிபர் கருத்து

முள்ளியவளை,நவ.21

கலையும் கலாசாரமும் மனித வாழ்வுடன் பின்னிப் பிணைந்துள்ள ஒரு சிறப்பு அம்சமாகும் எனக் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாசன் தெரிவித்தார்.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலகப் பிரிவின் கலாசார விழா கடந்த திங்கட் கிழமை கிளிநொச்சியில் நடைபெற்றபோது கலாசாரப் பேரவையால் வெளியிடப்பட்ட நூலுக்கு வழங்கியுள்ள வாழ்த்துச் செய்தியில் அவர் இதனைத் தெரிவித்தார்.

கலையும் கலாசாரமும் மனித வாழ்வுடன் பின்னிப்பிணைந்துள்ள அம்சங்களாகும். சங்க காலத்துக்கு முன்பே மன்னர்களாலும் மக்களாலும் வளர்த்தெடுக்கப்பட்டவை நம் கலைகளும் கலாசாரமும் ஆகும். நமது மாவட்டமும் இக்கலைகளைச் சிறப்புடன் கட்டிக் காத்து வளர்த்துள்ளது. ஆனால் கடந்த காலப் பகுதியில் இவை புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளமையால் எமது மக்களின் வாழ்வியலிலும் பிறழ்வுகள் ஏற்படத் தொடங்கியுள்ளன.

ஆகவே இவற்றுக்கு மீண்டும் வாழ்வு கொடுப்பதுடன் எமது வாழ்வையும் செழிப்புற வைக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (க-6)

# நுளம்பு வலைகள் விநியோகம்

வவுனியா,நவ.21

வவுனியா செட்டிகுளம் பகுதியிலுள்ள மக்களுக்கு மலேரியா ஒழிப்புத் திட்டத்தின்கீழ் நுளம்பு வலைகள் வழங்கப்பட்டன.

சர்வோதய நிறுவனத்தால் முதல் கட்டமாக 165 குடும்பங்களுக்கு இந்த நுளம்பு வலைகள் வழங்கப்பட்டன. வவுனியாவில் தொடர்ந்து பெய்துவரும் கடும் மழை காரணமாக நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதிலிருந்து கிராமப்புற மக்களைக் காப்பாற்றும் வகையிலும், நுளம்பிலிருந்து அவர்கள் எவ்வாறு பாதுகாப்புத் தேடலாம் என்பதை அறிவுறுத்தும் வகையிலும் மலேரியா ஒழிப்புத் திட்டத்தின் கீழ் இந்த நுளம்பு வலைகள் வழங்கப்பட்டுள்ளதாக சர்வோதய அமைப்பினர் தெரிவிக்கின்றனர். (க-421)

# முல்லைத்தீவு வர்த்தக நிலையங்களில் விலைகள் ஏதும் குறிக்கப்படாத பலகைகள்

முல்லைத்தீவு,நவ.21

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியல் பலகைகள் உள்ள போதும் அவற்றில் விலைகள் குறிக்கப்படுவதில்லையென மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் பொருள்களை வாங்குவதற்குச் செல்வோர் ஒவ்வொரு பொருளினது விலையையும் கேட்டுப் பெறவேண்டிய நிலையில் உள்ளனர். அத்துடன் கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க அதிக விலை கொடுத்துப் பொருள்களை வாங்க வேண்டியுள்ளதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் அநேகமான வர்த்தக நிலையங்களிலும் சிமெந்து அதிக விலைக்கே விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இதனால் மீள்குடியமர்ந்த மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

அத்துடன் இங்கு விற்பனை செய்யப்படும் பாணும் நிறை குறைந்து காணப்படுகின்றது. 450 கிராம் இருக்க வேண்டிய ஒரு பாண் 350 கிராமே உள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். இதனால் மக்களின் பணம் சுரண்டப்படுவதோடு அவர்களின் தேவையும் பூர்த்தியாவதில்லை.

எனவே விலைக்கட்டுப் பாட்டு அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்பதே அனைவரதும் விருப்பமாக உள்ளது. (க-500)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இன்றைய வரவு - செலவுத் திட்டம் மக்களுக்கு விமோசனம் தர வழிவிடுமா?

அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிப்பினால் நாட்டில் வாழ்க்கைச் செலவு 'ரொக்கெட்' வேகத்தில் உயர்ந்துள்ளது. சாதாரண மக்கள் மட்டும் அன்றி நடுத்தர வகுப்பு மக்களும் பெரும் பாதிப்புக்கு ஆளாகி உள்ளனர்.

இப்படியான ஒரு நிலையிலேயே 2012ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகிறது. பதவி ஏற்ற பின்பு நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்படும் 6ஆவது வரவு - செலவுத் திட்டம் இதுவாகும். இந்த வரவு - செலவுத் திட்டமும் முன்னைய வரவு - செலவுத் திட்டங்கள் போன்று வெறும் வாக்குறுதிகளாகவே இருக்கப்போகின்றன என்றே பொதுவாக எதிர்வு கூறப்படுகிறது; நிச்சயமாக அவ்வாறே அமையும்.

2011 வரவு - செலவுத் திட்டத்தில் அரச, தனியார் ஊழியர்களுக்கான சம்பள உயர்வு, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு என்று பல வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. இந்த வாக்குறுதிகள் பூரணமாக நிறைவேற்றப்படாமலேயே 2012ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டமும் வந்துவிட்டது!

முன்னைய காலங்களைப் போல் அன்றி வரவு - செலவுத் திட்டங்களில் நாட்டு மக்கள் ஆர்வம் இழந்து போவதற்கு நிறைவேற்றப்படாத வாக்குறுதிகளும் ஒரு காரணம் என்பதில் சந்தேகம் இல்லை.

2012ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு நாளை இரண்டாவது வாசிப்பு மீதான விவாதம் நடைபெறும். 30ஆம் திகதி வாக்கெடுப்பு நடத்தப்படும். மூன்றாவது வாசிப்பு மீதான விவாதம் டிசெம்பர் 21ஆம் திகதிவரை நடைபெறும். அன்றே வாக்கெடுப்பு நடத்தப்படும்.

வரவு - செலவுத் திட்டம் குறித்து பொருளாதார விவகார அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கருத்துத் தெரிவிக்கையில், நாட்டு மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதே முக்கிய நோக்கம் என்று கூறுகிறார். அரச, தனியார் துறை ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்துவதை விட வாழ்க்கைச் செலவைக் குறைப்பதிலேயே அரசு கூடிய கவனம் செலுத்தும் என்றும் அவர் கூறுகிறார். அவ்வாறு செய்வதற்கு அரசிடம் உள்ள மந்திரக்கோல் தான் என்ன?

இன்று அரச, தனியார் துறை ஊழியர்கள் வாழ்க்கைச் செலவு உயர்வால் குடும்பம் நடத்த முடியாத நிலையில் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர். அவர்கள் சம்பள உயர்வு கோருவதற்கான முக்கிய காரணமே வாழ்க்கைச் செலவு உயர்வுதான். ஆகவே அரசு வாழ்க்கைச் செலவைக் குறைப்பதன் மூலமே நாட்டு மக்களின் குடும்பச் சுமைகளைக் குறைக்க முடியும்.

விடுதலைப் புலிகளுடனான போர் நடைபெற்ற காலத்தில் அரசு பாதுகாப்புக்கே கூடுதல் பணத்தை ஒதுக்கி வந்தது. போரை மனதில் கொண்டு மக்கள் பொறுத்து வந்தனர். ஆனால், போர் முடிவடைந்த பின்பும் பாதுகாப்புக்கே கூடுதல் பணம் செலவிடப்படுகிறது. போர் முடிவுற்று மூன்று வருடங்கள் ஆகும் நிலையிலும், பாதுகாப்புச் செலவினம் மட்டும் வரவு - செலவுத் திட்டத்தில் சுமார் பதினைந்து வீதத்துக்கு மேல் விழுங்கிவிடுகிறது.

ஏற்கனவே பெற்ற கடன்களைச் செலுத்துவதற்கும் போர் நடைபெற்ற காலத்திலும் அது முடிவுற்ற அடுத்த வருடத் திலும் பாதுகாப்புச் செலவுகளுக்கு அதிக நிதி ஒதுக்கியதைப் புரிந்து கொள்ளலாம். படைக் கட்டமைப்புகளைப் பலப்படுத்துவதற்கான செலவுகளுக்குமாக அதிக நிதி தேவைப்பட்டதாக நியாயப்படுத்தலாம்.

ஆனால் போர் முடிவுற்று நான்காவது வருடமாகும் 2012 ஆம் ஆண்டிலும் பாதுகாப்புத் துறைக்கான செலவுகளுக்கு முதலிடம் கொடுத்து, அதிது அதிதாகப் பணம் ஒதுக்கப்படுவது, நாட்டைப் பாதுகாப்பதற்கன்றி வேறு உள்நோக்கங்களுடனேயே என்று கொள்ளலாம்; மக்களின் சந்தேகமும் அதுவே.

வடக்கு, கிழக்கைப் படைகளின் கிடுக்குப் பிடியில் கொண்டுவரும் உள்ளார்ந்த திட்டத்தின் தேவைக்கே இந்த அதிக நிதி பயன்படுத்தப்படுமா? அல்லது-

தன்னை விட அதிக விஸ்தீரணமுள்ள அயல்நாடுகளின் இராணுவ பலத்தை இலங்கை கொண்டிருக்க வேண்டும் என்ற ஏதாவது திட்டம் உண்டா என்பதனை வெளிப்படுத்த வேண்டும்.

பாதுகாப்பு இரகசியம் பேணப்படுவது போன்று, பாதுகாப்பு அமைச்சின் செலவு விவரங்களிலும் இரகசியம் பேணப்படும் புதிய விதி நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதா என்ற சந்தேகமும் எழுகிறது.

மக்களுக்காக, மக்களால் நடத்தப்படும் மக்களுடைய அரசே ஜனநாயக அரசு. அவ்வாறெனின் பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கப்படும் மக்களது நிதியின் பயன்பாடு அல்லது பரம்பல் குறித்த விவரம், விளக்கம் என்பவற்றை வரவு - செலவுத் திட்ட விவாதத்தின்போது மட்டுமன்றி, செலவுகள் செய்யப்படுவதற்கு முன்னரும் அவ்வப்போதும் மக்களுக்கு வெளிப்படுத்துவது அவசியம்.

ஏனெனில் மக்களின் வாழ்க்கைச் செலவுகளையும் ஏனைய பிரதான தேவைகளையும் சாராசரியாகவேனும் நிறைவேற்றுவதற்கு வசதி செய்யாதவேளை -

வைச்சுக்கட்டிய அல்லது வெறும் டம்மியான காரணங்களைக் கூறி, பாதுகாப்புச் செலவுகளை மட்டும் அதி உயரத்தில் வைப்பது சரியானதா என்பதனை மக்கள் அறிந்து கொள்வதற்கு வாக்களித்த அவர்களுக்கு உரிமை உண்டு.

நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு உருப்படியான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. மக்கள் மீதான சுமைகளைக் குறைக்கும் வழிகளுக்குப் பதிலாக பாலங்கள், வீதிகள் அமைப்பதில் மட்டுமே அரசு கூடுதல் அக்கறை காட்டி வருகிறது. வாழ்க்கைச் செலவைக் குறைக்க நடவடிக்கை எடுப்போம் என்று கூறிக் கொண்டு எரிபொருள் விலையை உயர்த்தினால் வாழ்க்கைச் செலவு எப்படிக் குறையும்?

ஆகவே, வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர் அமைச்சர்கள், அதிகாரிகள், பிரதானிகளின் வெளிநாட்டுப் பயணங்களுக்கான செலவுகள் குறைக்கப்படவேண்டும். இவற்றுக்கு பல கோடி ரூபா விரயமாக்கப்படுகிறது.

தேர்தல்களில் தொடர்ந்து பெற்றுவரும் வெற்றிகள் நிரந்தரமானவை அல்ல. 1970ஆம் ஆண்டு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் பதவிக்கு வந்த சிறிமாவோ பண்டாரநாயக்கா 1977ஆம் ஆண்டுத் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கூடப் பிடிக்க முடியவில்லை.

1977இல் ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் வந்த ஜே.ஆர். அரசும் பின்பு படுதோல்வியை அடைந்தது.

ஆகவே இந்த அரசின் தேர்தல் வெற்றிகளும் நிரந்தரமானவை அல்ல. நாட்டு மக்களின் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலேயே அதன் எதிர்கால வெற்றி தங்கி இருக்கிறது என்பதனை அரசு எப்போது உணரப்போகிறது.

# நான் கூறியதாக பெட்றிக்கா எழுதுவதற்குமுன்பே பலர் அதுபற்றி செய்திகள் வெளியிட்டிருந்தார்கள்

நேற்று 20-11-2011 அன்று 'சண்டே ரைம்ஸ்' எழுதியிருந்த அரசியல் விமர்சனத்திலிருந்து ஒரு பகுதி.

* நான் சொன்னதாக பெட்றிக்கா ஜோன்ஸ் தனது பத்திரிகையில் எழுதுவதற்கு முன்பே நாட்டில் உள்ள பலரும் அதுபற்றி கேள்விப்பட்டிருந்தார்கள்.
* நீதிபதிகளும் கூட கேள்விப்பட்டிருக்கலாம்.
* வேறு பத்திரிகைகளும் எழுதியிருந்தன.
* அவை மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு எவரும் ஜெயிலுக்கு போகவில்லை.

இரண்டரை வருடங்களுக்கு முன்னர் தமிழீழவிடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதின் எதிர் விளைவுகள் கடந்த வாரம் பல மாதிரிகளிலும் பல விடயங்களில் எதிர் ஒலிப்பதாக இருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. அவைகளில் பிரதானமான ஒன்று என்னவென்றால் முன்னாள் இராணுவத்தளபதி ஜெனரல் சரத்பொன்சேகாவுக்கு வெள்ளைக் கொடி வழக்கில் மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பாகும். அந்த வழக்கில் முன்னாள் தளபதி குற்றவாளியாகக் காணப்பட்டு மூன்று வருடங்கள் சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டது. அத்துடன் ரூ.5000 குற்றப்பணமும் விதிக்கப்பட்டு அதனை செலுத்தத் தவறின் மேற்கொண்டும் ஆறுமாதங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

வெள்ளிக்கிழமையன்று மூன்று நீதியரசர்களின் மேல் முறையீட்டு நீதிமன்றின் - தீர்பனி விஜய சுந்தர (தலைவர்) சல்பிகார் றஸீன், மற்றும் டபிள்யு. ரி.எம்.பி.பி வரவெவா ஆகியவர்களைக் கொண்ட ஆயம் கூடியபோது முதலியார் சவுக்கட் அலி முகம்மது நாஸ்லி தீப்பாலி முக்கிய விவரத்தை வெளியிட்டிருந்தார்.

இரண்டு நீதிவான்கள் விஜய சிங்கா மற்றும் ரஸீன் ஆகியவர்கள் பொன்சேகாவை முதல் குற்றச்சாட்டில் குற்றவாளியாக கண்டிருந்தனர். அவசரகால சட்டத்தை மீறியமை - பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷ பிரிகேடியர் சவேந்திர சில்வாவிடம் புலிகள் உறுப்பினர் எவராவது வெள்ளைக் கொடியுடன் சரணடைய வந்தால் அனுமதிக்க வேண்டாம் அவர்களைச் சுட்டுக்கொன்று விடுங்கள் என்று கூறியிருந்தார் என்பதாக மற்ற இரு குற்றச்சாட்டுக்களிலும் பொன்சேகா குற்றமற்றவர் என்று அவர்கள் தெரிவித்திருந்தனர்.

இரண்டாவது குற்றச்சாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்திருந்ததின் மூலம் நேரடியாகவோ, மறைமுகமாகவோ இன உணர்வுகளை மக்கள் மத்தியில் தூண்டிவிட முயன்றுள்ளார். என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

மூன்றாவது குற்றச்சாட்டில் பொதுமக்கள் மத்தியில் அரசுக்கெதிரான உணர்வுகளைத் தூண்டி அவர்களுக்கிடையில் பிரச்சினைகளை உருவாக்கி விட முனைந்துள்ளார் என்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. நீதிபதி வரவெலா இந்த தீர்ப்புகளிலிருந்து மாறுபட்டு மூன்று குற்றச்சாட்டுக்களிலும் பொன் சேகாவை குற்றமற்றவர் என தெரிவித்து அவர் தீர்ப்பளித்திருந்தார். என முதலியார் மஸ்லி தெரிவித்திருந்தார்.

அதன் பிறகு பொன்சேகா தமது கூண்டிலிருந்தபடியே அறிக்கையொன்றை விடுப்பதற்கு அனுமதிக்கப்பட்டார். பொன்சேகா கையால் எழுதப்பெற்ற மூன்று பக்க சிங்களத்திலான அறிக்கையை வாசித்தார். அவர் கூறியதாவது:

இந்தத் தீர்ப்பு குறித்து நான் ஆச்சரியப்படவில்லை. நான் மட்டுமல்ல பொதுமக்களில் பலரும், சட்ட நிபுணர்களும் இந்த அமைப்பின் கீழ் நீதி கிடைக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. இந்தத் தீர்ப்பு நியாயமானது என்று நான் ஏற்றுக் கொள்ளவில்லை. நான் சொன்னதாக பிரெட்றிக்கா ஜோன்ஸ் இந்த

## வெள்ளைக் கொடி வழக்கு தொடர்பாக கூண்டில் இருந்தபடி பொன்சேகா விடுத்த அறிக்கை

பொய்களை பிரசுரிப்பதற்கு முன்பே அனேகர் அதுபற்றி அறிந்திருந்தார்கள்.

நீதிபதிகள் கூட அது பற்றி அறிந்திருப்பார்கள் என்று நான் நினைக்கின்றேன். பிரெட்றிக்காஜான்ஸ் தனது பத்திரிகையில் எழுதுவதற்கு முன்பே டெய்லி மிறர் அதேபோன்றதொரு அறிக்கையை வெளியிட்டிருந்தது. சண்டே ரைம்சும் கூட கடந்த வாரம் அதைப்பற்றி எழுதியிருந்தது. இவைகளை எழுதியவர்கள் மீதும் அவர்களுக்குக் கூறியவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படுமா. சர்வாதிகாரத்தின் கீழ்தான் அவ்வாறான நடவடிக்கை எடுக்கப்படும் ஜனநாயகத்தின் கீழ் அல்ல.

ஒரு மனிதன் தம்மிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு தம் அறிவுக்கு எட்டிய அளவில் எதிர்தரப்பு ஜனாதிபதி வேட்பாளர் என்ற முறையில் தனது அறிவுக்கு எட்டிய அளவில் பதிலளித்தமைக்காக சர்வாதிகாரத்தால் தான் நடவடிக்கை எடுத்திருக்கமுடியும். இராணுவ வெற்றியின்போது என்னால் கட்டளையிடப்பட்ட படைகள் எவையும் போர்க் குற்றம் இழைக்கவில்லை. யுத்தத்தின்போது எனது கட்டளைகளை ஏற்று அவர்கள் செயல்பட்டார்கள்.

மனிதாபிமான சட்டங்களை மதித்து மனிதர்களை அவர்கள் பாதுகாத்தார்கள். அவ்வாறு நடந்து சுமார் 12 ஆயிரம் பயங்கரவாதிகளைக் கூட அவர்கள் பாதுகாத்தார்கள்

### எவராவது கட்டளை விடுத்திருந்தால்

ஒரு மதிக்கப்படும் இராணுவ தளபதி என்ற முறையில் எனது அபிப்பிராயம் என்னவென்றால் சரணடையும் எந்த ஒரு பயங்கரவாதியும் கொல்லப்பட வேண்டும் என்று எவராவது கட்டளையிட்டிருப்பாரேயானால் அப்படியானவர் சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும் என்பதாகும். கடந்த காலத்தில் கிரிஷாந்தி குமாரசுவாமி வழக்கு, பிந்துனுவெவவில் தமிழர்கள் படுகொலைக்குள்ளானமை, எம்பிலிபிட்டியாவில் மாணவர்கள் கொலை செய்யப்பட்டமை போன்ற குற்றச் செயல்கள் இடம்பெற்றுள்ளன. இவை பற்றி அறிக்கையிட்டவர்கள் கருத்து வெளியிட்டவர்கள் மீதெல்லாம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளனவா. இல்லை குற்றம் புரிந்தவர்கள் மீது தான் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சட்ட விரோதமாக எதுவும் நடந்தால் மக்கள் அதுபற்றி கேட்க உரிமையில்லையா? அப்படி பேசுபவர்கள் சிறையில் அடைக்கப்படுவார்களா? அந்த சம்பவம் பற்றி இரண்டு ஊடகவியலாளர்களிடமிருந்து கேள்விப்பட்டதை தான் பிறெட்றிக்காவிடம் நான் கூறியிருந்தேன். தாம் இதைக் கூறினார் என்பதை உறுதியளித்து அறிக்கையிடவும் ஒருவர் ஆயத்தமாய் இருக்கிறார். அதன் உண்மையைக் கண்டறிய வேண்டியது நீதித்துறையின் பொறுப்பு. கடைசியாக இந்த நீதியற்ற தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த அநீதியை இயற்கையால் கூட ஏற்றுக் கொள்ள முடியாது. எனது இரண்டு பிள்ளைகள் மனைவியிடமிருந்து நான் பிரித்துவைக்கப்பட்டுள்ளேன். என் மீது பொய்க் குற்றச்சாட்டுகளை சுமத்தி அரசியலிலிருந்தும் பொதுமக்களிடமிருந்தும் பிரித்துவைக்க விரும்பியவர்களுக்கு அவர்களின் எண்ணம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. ஆனால் மக்களின் எண்ணம் நொறுக்கப்பட்டுவிட்டது மக்கள் உரிமைகளைப் பாதுகாக்கப் பாடுபடுபவனாகிய எனக்கு இது ஒரு மறைமுக ஆசீர்வாதமாகும். நீதிபதிகள் குழாமுக்கு

தமிழில்: கோகுலன்

அதற்காக நன்றி கூறுகிறேன்.

இந்தத் தீர்ப்பினை வெறுப்போடு நான் நிராகரிக்கின்றேன். மக்கள் அபிப்பிராயமும் நீதியான சமூகத்தின் அபிப்பிராயமுமே எனக்கு அவசியமானது. இந்த அநீதியை அவர்கள் ஒரு நாள் திருத்தி அமைப்பார்கள். இல்லையெனில் எமது நீதித் துறை வரலாற்றில் ஒரு கரும் புள்ளியை இது ஏற்படுத்தி விடும்.

எனக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்று மக்கள் கருதுவார்களானால், அவர்களை அநீதிக்கு எதிராக கிளர்ந்து எழும்படி கோருகின்றேன்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## நாளை

கார்த்திகை 06, செவ்வாய்க்கிழமை 22.11.2011
திதி: துவாதசி முன்னிரவு 7.23 வரை
நட்சத்திரம்: அத்தம்
மு.ப. 8.52 வரை
சுபநேரம்: 10.40-12.10 வரை, ராகு காலம்: 3.10-4.40வரை

# இருளில் மூழ்கும் அனலைதீவு

யாழ்ப்பாணம், நவ.21

அனலைதீவுக்கு இன்னமும் மின்பிறப்பாக்கிக்கான பற்றரி வந்து சேரவில்லை. இதனால் அங்குள்ள மக்கள் இரவு நேரங்களில் பெரும் சிரமங்களுக்கு ஆளாகுவதாகக் கூறப்படுகின்றது.

கடந்த பதினைந்து நாள்களுக்கு மேலாக சுன்னாகம் மின்சார நிலையத்தில் இருந்து ஜெனரேட்டருக்கான பற்றரி வந்து சேரும் என எதிர்பார்த்த போதும் இன்னமும் பற்றரி எடுத்து வரப்படவில்லை.

இதனால் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் உள்ளனர். மின்விநியோகம் சீர்குலைந்துள்ளதால் இம்முறை சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதாகவும் மின்சார சபை இது தொடர்பாக உடன் கவனம் செலுத்த வேண்டும் எனவும் பொதுமக்கள் கூறுகிறார்கள். (ம-7)

# உதவி வழங்கக் கோரிக்கை

காரைநகர்,நவ.21

காரைநகர் பாலாவோடை இ.த.க பாடசாலையின் அடிப்படை வசதிகளை மேம்படுத்த நிதி உதவி வழங்குமாறு பாடசாலை அதிபர் கனடா காரை கலாசார மன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாகக் கனடா காரை கலாசார மன்றத்துக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், பாடசாலை வகுப்பறைகளுக்கான கதவுகள் அமைத்தல், களஞ்சிய அறை புனரமைத்தல், மழைநீர் சேமிப்புக்கு வேண்டிய வசதிகளை ஏற்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு வேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்கான நிதி உதவியை வழங்குமாறு பாடசாலை அதிபர் கேட்டுள்ளார். (ம-250)

# பச்சை மிளகாய் விலை உயர்வு

யாழ்ப்பாணம்,நவ.21

யாழ்ப்பாணத்தில் பச்சை மிளகாய்க்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

திருநெல்வேலி சந்தையில் நேற்று ஒரு கிலோ பச்சை மிளகாய் 400 ரூபா முதல் 450 வரை விற்பனை செய்யப்பட்டது.

தற்போது பெய்து வரும் மழையால் மிளகாய் கன்றுகளில் உள்ள பூக்கள் கொட்டுவதால் மிளகாய் விலை உயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-26)

# வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் மூன்று மணிக்கூட்டு கோபுரங்கள்

## விரைவில் அமைக்கத் தீர்மானம்

சண்டிலிப்பாய், நவ.21

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் பொதுமக்களின் நலன் கருதியும் பிரதேசத்தை அழகுபடுத்தும் நோக்குடனும் மூன்று இடங்களில் மணிக்கூட்டுக் கோபுரங்கள் அமைக்கப்படவுள்ளன. இதற்கான இடங்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் தலைவர் அ.ஜெபநேசன் தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்ற போது மணிக்கூட்டுக் கோபுரம் அமைப்பது குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

அத்துடன் இதற்கான தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. அடுத்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் இதற்கான அடையாள நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் நகரம், மானிப்பாய் கிராமம், பண்டத்தரிப்பு நகரம், பண்டத்தரிப்பு கிராமம் ஆகிய நான்கு உப அலுவலகங்களைக் கொண்ட வலி. தென்மேற்குப் பிரதேச சபை இரண்டாகப் பிரிக்கப்பட்டு ஒரு பகுதி நகரசபையாகத் தரமுயர்த்தப்படவுள்ளது.

நகர சபையாகத் தரமுயர்த்துவதற்குத் தேவையான சகல வளங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதால் கடந்த இரு வருடங்களுக்கு முன்பிருந்தே இதற்கான வேலைத் திட்டங்கள் சம்பந்தப்பட்டவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மணிக்கூட்டுக் கோபுரங்கள் அமைக்கப்படவிருக்கும் இடங்களாக மானிப்பாய் ஆலடிச் சந்தி, மானிப்பாய் மருதடிச் சந்தி, பண்டத்தரிப்புச் சந்தி ஆகிய மூன்று இடங்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளன. கோபுரங்கள் அமைப்பதற்கான இடவசதி இந்த மூன்று இடங்களிலும் இருப்பதால் இவை தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம- 115)




மானிப்பாய் அரசினர் வைத்தியசாலைக்குச் செல்வதற்கு ''வைத்தியசாலை வீதி'' என எழுதப்பட்டு ஆனைக்கோட்டையில் அமைக்கப்பட்டிருந்த வழிகாட்டிக் கல் விஷமிகளால் உடைக்கப்பட்ட நிலையில். (ம- 100)

# வரைபடங்கள் தயாரித்த பின்பே யாழ். பல்கலையில் கட்டடம் அமைப்பு

## இனிவரும் காலத்தில் நடைமுறைக்கு

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் நிலப் பயன்பாடுகள் மற்றும் கட்டங்கள் சம்பந்தமான வரைபடம் தயாரிக்கும் வரை எந்தவொரு புதிய கட்டடங்களும் எதிர்காலத்தில் அமைக்கப்படமாட்டாது. யாழ்ப்பாணம் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்த மேலும் தெரிவிக்கையில்:

யாழ். பல்கலைக்கழகத்தில் கடந்த காலங்களில் கட்டப்பட்ட கட்டங்கள் துணைவேந்தர்கள் மற்றும் பீடாதிபதிகள் தாம் நினைத்தவாறு நன்கு திட்டமிடப்படாத முறையில் அமைக்கப்பட்டுள்ளன.

வீடுகளில் ஆடு, மாடுகள், நாய்களுக்கு போடும் கொட்டில்கள் போன்று இவை அமைந்துள்ளன. எதிர்காலத்தில் இத்தகைய நிலை காணப்படமாட்டாது. இதற்கென நன்கு திட்டமிடப்பட்டு உரிய வரைபடம் பெறப்பட்ட பின்னரே புதிய கட்டங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும். - என்றார்.(ம-86)

# மலசலகூட 'பிளேற்'றை அடித்து உடைத்து இரும்புக் கம்பிகளை அபகரிக்கும் ஆசாமிகள்

சண்டிலிப்பாய், நவ.21

குடாநாட்டில் பழைய இரும்புக்கு ஏற்பட்ட மவுசு காரணமாக மலசலகூடத்துக்குப் பயன்படுத்தப்பட்ட இரும்புக் கம்பிகள் மட்டுமல்ல பாதுகாப்பாக மறைத்து வைக்கப்பட்டிருந்த இரும்புகளையும் திருடிச் செல்லும் அளவுக்கு நிலைமை மாறியுள்ளது.

திருடர்களின் இந்தத் துணிகரச் செயல் குறித்துப் பொதுமக்கள் செய்வதறியாது திண்டாடுகின்றார்கள்.

வலி.வடக்குப் பிரதேசத்தில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட வறுத்தலைவிளான் பகுதியிலுள்ள வீடொன்றில் மலசலகூடக் குழியை மூடியிருந்த கொங்கிறீட் பிளேட்டை உடைத்து அதிலிருந்து இரும்புக் கம்பிகளையும் பாதுகாப்புக்காக பழைய கிணறு ஒன்றில் மறைத்து வைத்திருந்த பெறுமதியான இரும்புகளையும் திருடிச் சென்றுள்ளார்கள்.

இதேபோல் இந்தப் பகுதியில் ஆள்கள் இல்லாத வீடுகளுக்குச் செல்லும் திருடர்கள் கூரையில்லாத வீடுகளின் யன்னலில் பொருத்தப்பட்டிருக்கும் கம்பிகளையும் தந்திரமாகத் திருடிச் செல்கின்றார்கள்.

இந்த நிலை குறித்து அதிர்ச்சியடைந்துள்ள பொதுமக்கள் இதைத் தடுத்து நிறுத்துவதற்குப் பொலிஸாரின் ஒத்துழைப்பைக் கோரியுள்ளனர். (ம- 115)

# கட்டாக்காலிகள் அட்டகாசம் காரைநகரில் தீரவில்லை

காரைநகர், நவ.21

காரைநகர் பிரதேசத்தில் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லையால் பாடசாலை மாணவர்கள், விவசாயிகள், வர்த்தகர்கள், பொதுமக்கள் எனப் பல தரப்பட்டோரும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

காரைநகரில் பெருகி உள்ள கட்டாக்காலி கால்நடைகள் விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்ட நூற்றுக்கணக்கான ஏக்கர் நெல் வயல்களை தினமும் அழித்து வருகின்றன.

இதனால் விவசாயிகள் பெரும் நஷ்டம் அடைந்து வருகின்றனர்.

உரிய காலத்தில் பருவ மழை கிடைப்பதால் நெற் பயிர்கள் செழித்து வளரும் இந்த வேளையில் அவற்றைக் கட்டாக்காலி கால்நடைகள் அழித்து வருகின்றன என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

அத்துடன் கட்டாக்காலியாகத் திரியும் ஆடுகள் மற்றும் மாடுகள் ஆலய மண்டபங்கள், பாடசாலை வளாகம், வர்த்தக நிலையங்களின் முன்பகுதிகளில் கூட்டம் கூட்டமாக உறங்குகின்றன. அத்துடன் அவ்விடங்களை அசுத்தப்படுத்துகின்றன. இதனால் அதிகாலை வேளைகளில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

காரைநகருக்கான தனியான பிரதேச சபை, பிரதேச செயலகம், கமநல சேவைகள் நிலையம் ஐந்துக்கு மேற்பட்ட கமக்கார அமைப்புக்கள் என்பன இருந்தும் கால்நடைகளைக் கட்டுப்படுத்த முடியாத நிலை காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே, கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கு உரியவர்கள் காத்திரமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம- 250)

# விதைக்காத வயல் நிலத்தில் முளைவிட்ட நெற் பயிர்கள்

தென்மராட்சி, நவ.21

தென்மராட்சி தெற்கு மறவன்புலோ பகுதியில் நெற்செய்கை மேற்கொள்ளப்படாத வயல்களில் திடீரென நெற்பயிர்கள் காணப்பட்டதால் நெற் செய்கையாளர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

அந்தப் பகுதி குளமொன்றுக்கு அருகில் ஆலயத்துக்குச் சொந்தமான 100 பரப்பு நெல் வயல்கள் இவ்வருடம் எவரும் குத்தகைக்கு எடுக்கப்படாததால் அவ்வயல்களில் விதைப்பு மேற்கொள்ளப்படவில்லை.

அந்த வயல்களில் வெள்ளம் காணப்பட்டது. திடீரென இந்த வயல்களில் நெற்பயிர்கள் காணப்படுகின்றன.

இதனை அதிசயமாகப் பொதுமக்கள் பார்வையிட்டு வருகின்றனர்.

அந்தப் பகுதியில் உள்ள விதைக்கப்பட்ட வயல்களில் நெற்பயிர்கள் இரவோடிரவாக பிடுங்கப்பட்டுள்ளதாக நெற் செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

இந்த வயல்களில் திருடப்பட்ட நெற்பயிர்கள் அந்த வயல்களில் இரவிரவாக நடப்பட்டிருக்கலாமென மற்றொரு தகவல் தெரிவிக்கிறது.

தென்மராட்சி தெற்குப் பகுதியில் பயிரிடப்பட்ட நெற் பயிர்களை தனங்கிளப்பில் கட்டாக்காலி மாடுகள் அழிப்பதும் மறவன்புலோப் பகுதியில் திருடர்கள் அபகரிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம- 207)

# வீதிகள் சேதமடைந்துள்ளதால் விபத்துக்கள் அதிகரிக்கும் நிலை

யாழ்ப்பாணம், நவ.21

யாழ்.நகரின் பிரதான வீதிகள் சேதமடைந்து காணப்படுவதால் வீதியில் பயணிக்கும் வாகனங்கள் அதிகளவில் விபத்துக்களை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது.

யாழ். நகரின் பிரதான வீதியான யாழ். ஆஸ்பத்திரி வீதி, -பருத்தித்துறை வீதி, வேம்படி வீதி, கண்டி வீதி, உட்பட நகரின் பிரதான வீதிகள் குன்றும் குழியுமாகவே காணப்படுகின்றன.

தற்போது பெய்து வரும் மழையால் வீதியில் காணப்படும் பள்ளங்கள் மழை நீரால் மூடப்பட்டுள்ளன.

இதனால் வாகன சாரதிகள் வாகனத்தை சடுதியாகத் திசை திருப்ப முடியாமல் அதிகளவான விபத்துக்களை சந்திக்க நேரிட்டுள்ளது.

யாழ். குடாநாட்டில் தற்போது பிரதான வீதிகள் வீதி அகலிப்புப் பணிகள் எனும் பெயரில் புனரமைக்கப்பட்டு வரும் நிலையில் நகரின் பிரதான வீதிகளின் புனரமைப்புத் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதது ஏன் என்று மக்கள் கேட்கின்றனர்.

நகருக்குள் அதிகளவான வாகனங்கள் வந்து போகும் நிலையில் வீதி சீரின்மையால் இடம்பெறும் விபத்துக்களைக் குறைப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. (ம- 313)

# யாழ். பல்கலைக்கழக ஆய்வுகூடங்களுக்கான உபகரணக் கொள்வனவுக்கு ரூ.110 மில்லியன்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் ஆய்வு கூடங்களுக் கான உபகரணங்களைக் கொள் வனவு செய்வதற்கென 110 மில்லியன் ரூபாவை பல் கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வழங்கியுள்ளது.

இந்தத் தகவலை யாழ். பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்துள் ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நாட்டிலுள்ள ஏனைய பல் கலைக்கழகங்களோடு ஒப்பி டும் போது யாழ்ப்பாணப் பல் கலைக்கழகம் கற்றல் செயற் பாடுகளுக்குரிய வசதி வாய்ப்பு களைக் கொண்டிராத ஒரு பின் தங்கிய நிலையிலேயே காணப் படுகிறது.

எனவே இந்தநிலையை மாற் றியமைத்து மாணவர்களுக் கான கற்றல் வசதிகளை ஏற் படுத்துவதற்காக பல்கலைக் கழகத்துக்கு நவீன கற்றல் உபகரணங்களை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

குறிப்பாக ஆய்வுகூடங்க ளுக்குத் தேவையான உப கர ணங்களை கொள்வனவு செய் வதற்கு மானியங்கள் ஆணைக் குழு 110 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது. இந் நிதியை உரிய முறையில் பயன்படுத்து வது தொடர்பாக வும், உபகர ணங்களைக் கொள்வனவு செய் வது தொடர்பாகவும் பீடாதி பதிகள், பேராசிரியர்கள் என் போருடன் கலந்து ரையாடி நட வடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடம் மற்றும், விஞ் ஞானபீடம்,வவுனியா வளாக முகாமைத்துவ பீடம் என்ப வற்றுக்கான ஆய்வுகூட உப கரணங்களை கொள்வனவு செய்யப்படவுள்ளன. இதன் பின்னர் கற்றலின் போது மாண வர்கள் எதிர்நோக்கும் நெருக் கடிகள் பெருமளவு குறைவ தோடு நாட்டின் ஏனைய மாண வர்கள் பெறுகின்ற வசதி வாய்ப் புக்களை எமது மாணவர்களும் பெற்றுக் கொண்டு அறிவை விருத்தி செய்ய முடியும்.- என் றார். (ங-86)

மரவளம் காப்போம்....



உலக அஞ்சல் தினத்தையொட்டி ஆனைக்கோட்டை உபதபாலக அலுவலர்கள் மானிப்பாய் பிரதேச அரசினர் வைத்தியசாலையில் மரக்கன்றுகளை நட்டனர். இதில் முதலாவது மரக்கன்றை வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி ஜானகி நித்தியானந்தன் நடுகின்றார். (த- 100)

# கோலாகலமாக இடம்பெற்ற கலாசாரப் பெருவிழா



யாழ்ப்பாணம், நவ.21

தீவகம் வடக்கு ஊர்காவற் றுறை உதவி அரச அதிபர் பணி மனையின் கலை இலக்கியப் பெருவிழா நேற்று ஞாயிற்றுக் கிழமை உதவி அரச அதிபர் பணி மனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபரும் கலாசார பேரவைத் தலைவருமான க.ஸ்ரீ மோக னன் தலைமையில் நடை பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதி பர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்துகொண்டார்.

பிரதம விருந்தினரும் ஏனைய விருந்தினர்களும் ஊர்காவற் றுறை வைத்தியசாலை முன்றிலி லிருந்து ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர். அதைத்தொடர்ந்து அரச அதிபர் தம்பதியினர் மங்கள விளக்கேற்றி நிகழ் வைத் தொடங்கிவைத்தனர். நிகழ்வில் சிறப்புவிருந்தினர் களாக யாழ்.மாவட்டச் செயலக பிரதம கணக்காளர் சு. சண் முகரட்ணம், கரவெட்டிப் பிர தேச செயலர் சி. சத்தியசீலன் ஆகி யோர் சிறப்புரையாற்றினர்.

கலைஞர்கள், விருந்தினர் கள் கௌரவிப்பு, கலை இலக் கியப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ் கள், பரிசில்கள் வழங்கல் என்பனவும் இடம்பெற்றன.

செழிப்புச்செம்மையோன் என் னும் கலாசாரப் பேர வையின் பட்டத்தை உதவி அரச அதிபர். க.ஸ்ரீமோகன னுக்கு யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் வழங்கிக் கௌரவித்தார்.

ஊர்காவற்றுறை கடற் படைப் பொறுப்பதிகாரி கப்டன் டி.எம். எல்.ஏ.திசநாயக்க, இராணுவப் பொறுப்பதிகாரி லெப். கேணல் ஏ.எம்.எஸ். பிரேம வன்ச, உத விப் பொலிஸ் அத்தி யட்சகர் டி.எச்.எம்.ஹேரத் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ம-7)

# தற்காலிகமாகத் திருத்தப்படும் இராசவீதி

யாழ்ப்பாணம், நவ.21

பெரிய குழிகள் காணப் படும் கோப்பாய் இராச வீதி இடிந்த கொங்கீறீற் கற்களால் சீர் செய்யப்படுவதால் வீதி யால் பயணிக்கும் பொதுமக்கள் பல சிரமங்களை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது.

தற்போது மேற்கொள்ளப் பட்டு வரும் இந்தத் திருத்தப் பணிகள் பொதுமக்களின் பாவ னைக்கு உகந்ததாக இல்லை என்று கூறப்படுகிறது.

இராசவீதி குன்றும் குழி யுமாக சேதமடைந்து காணப் பட்ட நிலையில் புனரமைப்பு எனும் பெயரில் உடைந்த கொக்கிறீற் கற்களை குழி களுக்குப் போட்டு நிரப்பட்டுள் ளன.

இதனால் வாகனங்களும், பாதசாரிகளும் இந்த வீதியைப் பயன்படுத்த முடி யாத நிலை யில் மாற்று வழிப் பாதைக ளைப் பயன்படுத்தி வருகின் றார்கள். (ம- 26- 313)

# சிறுவர்களுக்கு சிகரெட் விற்றவருக்கு அபராதம்

21 வயதுக்கு உட்பட்ட சிறு வர்க ளுக்கு சிகரெட் விற்பனை செய்த கல்வியங்காட்டுப் பகுதி யிலுள்ள வர்த்தக நிலைய உரிமையாளர் ஒருவர் யாழ். நீதிவான் நீதிமன்றில் முன்னி லைபடுத் தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ். நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா அவருக்கு 4 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு உத்தர விட்டுள்ளார். (ம-14-4)

# மணல் ஏற்றும் வாகனங்களின் பாதையை அனுமதி வழங்கும் நிறுவனமே வழங்கவேண்டும்

## ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் தீர்மானம்

வடமராட்சி, நவ.21

வடமராட்சி கிழக்கிலுள்ள குடத்தனையில் மணல் ஏற்றச் சென்று வரும் கனரக வாக னங்களான டிப்பர் மற்றும் லொறிகள் சென்று வரும் பாதையை, மணல் பெறுவதற் கான அனுமதியை வழங்கும் நிறுவனமே வகுத்துக் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு கரவெட்டி, வடம ராட்சி தெற்கு, மேற்குப் பிர தேசசெயலர் பிரிவு ஒருங்கிணைப் புக் குழுக் கூட்டத்தில் தீர் மானிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலென்ரின் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சத்திய சீலன், உதவித் திட்டமிடல் பணிப் பாளர் வீ.ஸ்ரீபாஸ்கரன் மற்றும் திணைக்களங்கள் சபையின் அதிகாரிகள், பொது அமைப் புக் களின் பிரதிநிதிகள் பிரதேச சபைத் தலைவர் எஸ்.வியாகேக உட் படப் பலர் கலந்து கொண் டனர்.

யாழ்ப்பாணம்-பருத்தித்துறை பிரதான வீதியில் நெல்லியடி, மந்திகை ஆகிய இடங்கள் ஊடாக மணல் ஏற்றச் சென்று வரும் டிப்பர் வண்டிகள் மற்றும் லொறி வண்டிகள் பயணிப்பதால் பெரும் போக்குவரத்து நெருக்கடி ஏற் படுவதாகச் சுட்டிக்காட்டப்பட் டது.

இதற்குப் பதிலளித்த நெல்லி யடி பொலிஸ் நிலைய அதி காரி, வீதியில் சென்று வரும் வாகனங்களின் போக்குவரத்து நாம் எந்தவிதத் தடையும் விதிக்க முடியாது. குறிப்பிட்ட வாகனங்களான வழிப் பாதையை நிர்ணயித்து அனுமதி வழங் கப் பட்டால் மாத்திரமே நடவடிக்கை எடுக்க முடியும் என்று கூறினார்.

இந்த அனுமதியை மணல் பெற அனுமதிக்கும் நிறுவ னமே வழங்க வேண்டும் என வும் கூறினார். இதனையடுத்து இந்தத் தீர்மானம் எடுக்கப் பட்டது. (ம- 236)

# பருத்தித்துறையில் பள்ளிவாசல் ஒன்றை அமைக்க தமிழர் ஒத்துழைக்க வேண்டும்

## நீதியமைச்சர் ஹக்கீம் கோரிக்கை

வடமராட்சி, நவ.21

பருத்தித்துறைப் பிரதேசத் தில் போருக்கு முந்திய காலத் திலும் போர்க் காலத்திலும் கூட இன, மத பேதங்களின்றி தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் வாழ்ந்து வந்தார்கள். மீண்டும் அந்த நிலையைக் கட்டி யெழுப்ப பருத்தித்துறையில் பள்ளிவாசல் ஒன்றை அமைப் பதற்கான நடவடிக்கைக்கு இந்தப் பிரதேச மக்கள் ஒத்து ழைப்புத் தரவேண்டும்.

இவ்வாறு கோரியுள்ளார் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம்.

யாழ்ப்பாணத்துக்கு அண் மையில் உத்தியோகபூர்வ விஜ யம் ஒன்றை மேற் கொண்டு பருத்தித்துறையில் புனரமைக் கப்பட்ட நீதிமன்றத் திறப்பு விழாவுக்கு வந்த போது, பருத் தித்துறை நகரில் வர்த்தகத் தில் ஈடுபடும் முஸ்லிம் மக்கள் சார்பில் வரவேற்புபசாரம் ஒன்று நடைபெற்றது. பருத்தித்துறை. பிரதான வீதியில் உள்ள முஹை தீன் ஹமீதியா பள்ளிவாசலில் நடைபெற்ற இந்த வரவேற்பு நிகழ்வில் கலந்துகொண்டு பேசு கையிலேயே அவர் மேற் கண்ட கோரிக்கையை விடுத்தார்.

இதன் போது அவர் தெரிவித் தவை வருமாறு:

போதிய முன்னறிவித்த லின்றி- சுடுகுது மடியைப் பிடி என்பதைப் போல- அவசரமான நிலையிலேயே என்னுடைய யாழ்ப்பாண விஜயம் அமைந்துள் ளது.

கடந்த காலத்தில் போரால் பல்வேறு அவலங்கள் ஏற்பட்ட போது தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் எவ்வித பேதங்களை யும் பார்க்காமல் இந்தப் பகுதியில்- பருத்தித்துறையில் - கூடி வாழ்ந்தார்கள். தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையி லான உறவுப் பாலமாக இந்தப் பகுதி விளங்கியுள்ளது. இந்த நிலையை மீண்டும் ஏற்படுத்த வேண்டும். அதுவே இன நல் லிணக்கத்துக்கும் முரண்பாடு களைக் களைவதற்கும் சரியான வழியாக இருக்கும்.

இதற்காக பருத்தித் துறையில் முஸ்லிம் மக்கள் தொழுவதற்குரிய பள்ளிவாசல் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கவுள்ளேன். இதற்கு தமிழ் மக்கள் ஒத்துழைப்புத் தர வேண்டும்; தருவார்கள் என வும் நம்புகிறேன்- என்றார்.

இந்த நிகழ்வில் பருத்தித் துறை நகரசபை உபதலைவர் சி.பத்மநாதன் உரையாற்றுகை யில்:

அறுபது ஆண்டுகளுக்கு முன்னரே இங்கு முஸ்லிம் மக்கள் வியாபாரத்தில் ஈடுபட் டதை நான் அறிவேன். அவ் வாறு வியாபாரம் செய்துவந்த முஸ்லிம் மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையே நெருக்க மான உறவு இருந்தது. எமக்கும் முஸ்லிம் மக்களுக்குமிடையே எந்தவித வேறுபாடுகளும் இருக்கவில்லை. ஒரே குடும் பமாக வாழ்ந்தோம்.

எனினும் நாட்டில் அசாதாரண நிலை ஏற்பட்ட காலத்தில் இங்கிருந்த முஸ்லிம் பலரும் இடம்பெயர்ந்து சென்று விட்டனர். ஒரேயொரு முஸ் லிம் மட்டுமே இங்கு எஞ்சி யிருந்தார். அவருக்கு எவ்வித உறவுகளும் இல்லாத நிலை யில் இங்குள்ள தமிழ் மக்களே அவரைப் பராமரித்து வந்தனர்.

பருத்தித்துறை நகரின் இட வசதியைக் கருத்தில் கொண்டு பொருத்தமான இடத்தில் பள்ளி வாசலை அமைப்பதே சரியான தாக இருக்கும்.- என்றார்.

யாழ்.நகரசபையின் முன் னாள் பிரதி மேயர் எம்.சி.பசீர் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் முஸ்லிம் நாடாளு மன்ற உறுப்பினர் பாரூக்கும் கலந்து கொண்டார். (ங-236)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். ஒட்டுமடம் வீதியைச் சேர்ந்த
அருளானந்தசோதி ஜெகசக்தி
தம்பதியரின் புதல்வி

**திருமதி அச்சுதன் கலைவாணி**

பேராதனைப் பல்கலைக்கழகத்தின்
கலைமாணிப் பட்டத்தை கொழும்பு
பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச
மாநாட்டு மண்டபத்தில் (B.M.I.C.H)
21.11.2011 அன்று பெறுவதையிட்டு
மேலும் பல பட்டங்கள் பெற
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்கள்:
குடும்பத்தினர்.

(சி/6098) (6,22)

## வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை

நத்தார் புது வருடத்தை முன்னிட்டு
21.11.2011 - 31.12.2011 வரை
விசேட கட்டணம்

- UK 640/=
- Swiss 840/=
- Canada 900/=
- Australia 800/=
- France 770/=
- Germany 640/=

✓ எம் ஊடாக அனுப்பப்படும் சகல பொதிகளுக்கும் 100% சுங்கதீர்வை (Customs Duty) விலக்கு உண்டு.


✓ கடலுணவுப் பொருட்கள், எண்ணை வகைகள், மருந்துப் பொருட்கள் என்பனவும் அனுப்பி வைக்கப்படும்.

**Arrul Global Express**
International Courier & Cargo Service

T.P : 021 222 6113

இல. 01 பிறவுண் வீதி
நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம்.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 29 | 02 |
| 10 | 11 |
| 1966 | 2010 |

### துரைசிங்கம் ஸ்ரீபாஸ்கரன்

ஓராண்டு ஒரு நொடியில் கழிந்தது
இருவிழிகளும் உங்கள் இருப்பிடம் தேடின
இரு செவிகளும் உங்கள் வார்த்தைகள் தேடின
இதயத்தில் வாழும் எம்குல தீபம்
இனியெங்கு காண்போம் உம் திருவுருவம்
உங்கள் ஆத்மா சாந்திபெற
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நாவலடி,
உடுப்பிட்டி.

என்றும் உங்கள் நினைவோடு
மனைவி, குடும்பத்தினர்.

(10682)(5,6)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 24 | 23 |
| 02 | 10 |
| 1942 | 2010 |

### அமரர் சரவணமுத்து வயிரமுத்து

எங்கள் குடும்பத்தின் தலைமகனே!
எங்கள் வாழ்க்கைத் தேரோட
அச்சாணியாய் நின்றவரே!
தலைமை தாங்கி வழி நடத்தி
எமை வாழ்வாங்கு வாழ வைத்தவரே!
உங்களை இழந்து தவிக்கின்றோம்
இருள் வெளியில் தடுமாறுகின்றோம்
மீண்டும் வந்து பிறப்பீர்களா?
எமக்கு நல்வழி காட்டுவீர்களா?

உடன் பிறந்தோர்,
மைத்துனர்-மைத்துனிமார்,
மருமக்கள், பெறாமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

(C/6095)(5,6,7)

# அமெரிக்காவில் இலங்கையர் கொலை

அமெரிக்காவில் பாலியல் வீடியோ கடையொன்றில் இரவுநேர கடமையில் ஈடுபட்டிருந்த இலங்கையரான ஊழியர் ஒருவர் மற்றொரு நபருடன் ஏற்பட்ட மோதலில் உயிரிழந்தார் என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

புரூக்ளின் நகரின் சன்செட் பார்க் 3 ஆவது ஒழுங்கையில் 24 மணித்தியாலமும் இயங்கும் விடியோ எக்ஸைட்மென்ட் எனும் கடையில் இடம்பெற்ற சம்பவத்தையடுத்து கொலையாளி உடனடியாகத் தப்பிச் சென்றார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இலிகிதகராக பணியாற்றிய மேற்படி ஊழியரை தாக்கிய பின்னர், விடியோ அடுக்களிலிருந்து விடியோக்களை பையொன்றுக்குள் நிரப்பிக்கொண்டிருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது என அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இச்சந்தேக நபர் பணப்பதிவு இயந்திரத்தையும் திறக்க முயன்றுள்ளர். ஆனால் அதில் அவர் வெற்றிபெறவில்லை. 54 வயதான நிமல ரந்துனு என்பவரே கொல்லப்பட்டவர் ஆவார். இவர் இக்கடையில் 3 வருடங்களாக பணியாற்றினார் என கடையின் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

கடையின் உரிமையாளரும் இலங்கையிலிருந்து சென்றவராவார். ஆனால் அவர் தனது முழுப்பெயரை வெளியிடவில்லை என நியூயோர் டைம்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது. (ஒ-சி)

---

## நான் கூறியதாக....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

குற்றங்களில் நான் நிரபராதி என்ற நிலையை எடுத்திருந்த நீதிபதியின் துணிச்சலை நான் உயர்த்திப் பாராட்டுகிறேன் அவரது துணிச்சல் நீதித்துறைக்கு ஒரு கௌரவமாகும்.

இந்த மாதிரி ஒரு சாதாரண வெளிப்படையான வழக்கில் கூட நீதிபதிகள் ஒரு ஏகோபித்த தீர்வுக்கு வரமுடியாமல் இருப்பதற்கு எமது நீதித்துறையில் ஏதும் குறைபாடுகள் இருக்கின்றனவா என்பதைப் பற்றி ஆராய வேண்டும் என்று அவர் தம் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பொன்சேகா நீதிமன்றத்திலிருந்து வெளியேற்றப்பட்டபோது கொந்தளிப்பான சில சம்பவங்கள் இடம்பெற்றன. சிறைக் காவலர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டிருந்தமையால் அவரை எவரும் அணுக முடியவில்லை. இருந்தபோதிலும் ஆதரவாளர் ஒருவர் சமாளித்துக்கொண்டு பொன்சேகாவின் கழுத்தில் ஒர்க்கிட் மலர் மாலை யொன்றை அணிவித்து மகிழ்ச்சியடைந்தார். பொன்சேகா வான் ஒன்றில் ஏற்றப்பட்டு வெலிக்கடை சிறைக்கு கொண்டு செல்லப்பட்டபோது அங்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. விமானப்படை வீரர் ஒருவரும் காவலில் நிறுத்தப்பட்டிருந்தார். நீதிமன்ற வளவிலிருந்து சிறைக் காவல் வான் புறப்படுவதற்கு சில நிமிடங்கள் வரை அந்த இடத்தில் அமளிநிலவியது. ஆதரவாளர்கள், சூழ்ந்து நின்று சுலோகங்களை எழுப்பினார்கள், அரசுக்கு எதிராக கத்தினார்கள். சிலர் வான் மீது தட்டினார்கள் - ஒரு சிறை அதிகாரி பொன்சேகாவின் தலையில் அடிப்பது தெரிந்தது.

பொன்சேகாவுக்கு எதிராக வழங்கப்பட்டுள்ள தீர்ப்பினை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்போவதாக பொன்சேகாவின் சட்டத்தரணி நளின் லதுவஹெட்டி தெரிவித்தார். (ப)


### மணமகள் தேவை

சுவிஸில் பிரஜாவுரிமை உடைய யாழ். இந்து கௌரவ குடும்பம், 1981, 5 அடி 7 அங்குலம், விசாகம் நட்சத்திரம், 1 இல் செவ்வாய், கிரக பாவம் 54 இல் உள்ள சிவில் Engineer மணமகனுக்கு அழகான, உயரமான, படித்த இந்து மணமகளை எதிர்பார்க்கின்றனர். சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது.

தொடர்பு: 0771009415

### வீடு விற்பனைக்கு

மீசாலை அல்லாரை வீதியில் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு

தொடர்பு 0779711972

(C/5749) (6-7-8)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 24 | 23 |
| 02 | 10 |
| 1942 | 2010 |

### அமரர் சரவணமுத்து வயிரமுத்து

(இளைப்பாறிய ஊழியர், நீர்ப்பாசனத் திணைக்களம்)

அன்புநிறை அப்பாவே!
அகிலத்தில் நாம் நிமிர
பண்பினையூட்டி பாசத்தைப் பொழிந்து
தென்புலத்தை அடைந்தீரோ?
தேம்பி நாம் அழுகின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடையட்டும்!

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

குடும்பத்தினர்.

(C/6096)(5,6,7)

# மரண அறிவித்தல்கள்

## அண்ணாமலை கந்தையாபிள்ளை விசுவலிங்கர்



காரைநகர், சந்தன் புளியடியைப் பிறப்பிடமாகவும் புதுறோட்டை வதிவிடமாகவும் தற்போது கொச்சிக்கடையில் வசித்தவருமான அண்ணாமலை கந்தையாபிள்ளை விசுவலிங்கம் நேற்று(20.11.2011) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: அ.க.செல்வரத்தினம் (சகோதரர்).

புது றோட், காரைநகர்.

(10687)

## வேலாயுதம் பொன்னுத்துரை

(ஓய்வுபெற்ற ஊழியர், விற்பனைத் திணைக்களம்)



கைதடி கிழக்கைப் பிறப்பிடமாகவும், புலோலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் பொன்னுத்துரை நேற்று (20.11.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம்-முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், சறோஜாமலரின் (ஆசிரியை, யா/வேலாயுதம் மகா வித்தியாலயம்) அன்புக் கணவரும், நிசாந், கோபிராஜ் ஆகியோரின் அன்புத் தந்தையும், அன்னப்பிள்ளை, ஞானம்மா, அன்னலக்ஷ்மி, கனகநாதன் (விற்பனைத் திணைக்கள ஓய்வூதியர்), ஞானமலர் (சுவிஸ்), ஞானாம்பிகை (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவசுப்பிரமணியம், பொன்னுத்துரை, ராஜரட்ணம், காலஞ்சென்ற நித்தியானந்தன் (சுவிஸ்), கணேசலிங்கம் (மாசார்), கணேசராசா (மருந்தாளர், மன்னார் வைத்தியசாலை), கணேஸ்வரன் (ஆசிரியர், யா/தாமோதர வித்தியாசாலை-கரணவாய்), மங்கையர்க்கரசி (தேவி ரீச்சர்), வசந்தமலர் (கனடா), நந்தினி ஆகியோரின் மைத்துனரும், சந்திரசேகரத்தின் (புலோலி ப.நோ.கூ.ச) சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.11.2011) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

லிங்க வாசா,
புலோலி தெற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

(C/6093)(5,6)

## பத்மலிங்கம் சந்திரகாந்தன்

ஏழாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பத்மலிங்கம் சந்திரகாந்தன் நேற்று (20.11.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் பத்மலிங்கம்-தனலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், சிவஞானவேல் (நன்நடத்தை உத்தியோகத்தர் - உடுவில் பிரதேச செயலகம்), ஜயந்தினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நாராயணி (ஆசிரியை, யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி), பாஸ்கரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும், பவப்பிரியா, தனுப்பிரியா ஆகியோரின் பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.11.2011) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக ஏழாலை காடாகரம்பை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை கிழக்கு,
ஏழாலை.

தகவல்:
இ.பத்மலிங்கம் (தந்தை).

(10684)(5,6)

## வியளம் கேட்டீர்களா?

### அரச அலுவலகங்களில் அரசியல்

எல்லாத்திலையும் அரசியல் புகுந்து விளையாடுற காலமையா இது. செத்தவனை எழுப்பிறதைத் தவிர இந்த அரசியல் எல்லாத்தையும் செய்யும் பாருங்கோ! இந்த அரசியல் சுழியோட்டத்துக்குள்ளை, எங்கை சுழிவந்து இழுக்கும் எண்டு தெரியாமல் எங்கடை உயரதிகாரிகள் திணறினம். அதை ஒரு நாடகமாய் உங்களிட்டைச் சமர்ப்பிக்கலாமெண்டு நினைக்கிறன். இந்த நாடகத்திலை இரண்டு பாத்திரங்கள். ஒருத்தர் மேலதிகாரி. மற்றவர் ஊழியர். அப்ப நாடகத்தைப் பாப்பமே?

காட்சி ஒண்டு

அலுவலகத்துக்குள் ஊழியர் நுழைகிறார். மேலதிகாரி எதையோ எழுதிக் கொண்டிருக்கிறார். அவர் எழுதி முடிக்கவும் தொலைபேசி அலறுகிறது. எடுத்து ஐந்து நிமிடங்கள் கதைக்கிறார். கதைக்கும்போது அடிக்கடி ஜெஸ் சேர், நோ சேர்... என்று சொல்லிக் கொண்டிருக்கிறார். ரெலிபோனை வைத்துவிட்டு நிமிர்ந்து பார்க்கிறார். என்ன என்பதுபோலச் சைகையால் கேட்கிறார்.

**ஊழியர் :** (பவ்வியமாக) ஐயா..வரச் சொல்லிக் கடிதம் அனுப்பியிருக்கிறியள். அதுதான்..

**மேலதிகாரி :** என்ன விசயமாக ஆ..விளங்குது. வாங்கோ.. இப்பிடி உக்காருங்கோ (வெற்றிலை கொடுத்து அழைக்காத குறையாக எழுந்து வரவேற்கிறார்.)

எப்பிடி சுகமாய் இருக்கிறியளே..

**ஊழியர் :** நல்ல சுகம் ஐயா! (என்ன இது சிடுமூஞ்சியாய் இருக்கிற இவர் கூலாய்க் கதைக்கிறார் என எண்ணிக் கொள்கிறார்)

**மேலதிகாரி :** (தயங்கியபடி) கேக்கிறன் எண்டு குறை நினைக்காதையுங்கோ. நீங்கள் ஆளுங்கட்சியிலையோ, ஆளுங்கட்சித் தொழிற்சங்கத்திலையோ அங்கத்தவராய் இருக்கிறீங்களே?

**ஊழியர்:** இல்லை ஐயா. எனக்குக் கட்சி அரசியலிலை நம்பிக்கையில்லை. தொழிற்சங்கத்திலையும் அங்கத்துவம் வகிக்கேல்லை.

**மேலதிகாரி :** (நல்லதாப் போச்சுது என்று மனதுக்குள் சொல்லிவிட்டு) அப்ப உங்கடை குடும்ப உறவினர் அல்லாட்டில் நண்பர்கள் ஆளுங்கட்சியிலை இருக்கினையே..

**ஊழியர் :** (இவருக்கு ஆரோ நான் கட்சிக்காரன் எண்டு முடிஞ்சு விட்டினை போலை என நினைத்தபடி) இல்லை ஐயா.. ஏன் கேக்கிறியள்?

**மேலதிகாரி :** சும்மாதான்.எப்பிடி உமக்கு மினிஸ்ரியிலை செல்வாக்கு? ஆரேனும் வேலை செய்யினையோ?

**ஊழியர்:** சேச்சே..எனக்கு ஒருத்தரையும் தெரியாது. இதெல்லாம் எதுக்கு ஐயா?

**மேலதிகாரி :** கவணற்றை ஒவ்பிஸிலை ஆரையும் தெரியுமோ? நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள்,பொலிஸிலை பெரியாக்கள் ஒருத்தரையுந் தெரியாதே?

**ஊழியர் :** இல்லை ஐயா..நானுண்டு. என்ரை சோலியுண்டு எண்டு திரியிற எனக்கு இவையையெல்லாந் தெரியாதையா.

**மேலதிகாரி :** கடைசிக் கேள்வி. உமக்கு ஒரு ரான்ஸ்பர் வருகுது எண்டு வைச்சுக் கொள்ளுவம். அதை எப்பிடித் தடுத்து நிறுத்துவீர்?

**ஊழியர் :** நாங்கள் எப்பிடித் தடுக்கிறது. உங்களைப் போலை அதிகாரியளைத்தான் வந்து காலைப் பிடிச்சுக் கெஞ்சவேணும்.

**மேலதிகாரி:** (சற்றுக் கடுமையாக) உமக்கு வாற மாதம் முதலாந் திகதியிலையிருந்து வன்னிக்கு ரான்ஸ்பர். கடிதம் வரும். எந்த மறுப்பும் இல்லாமல் போக வேணும்.

**ஊழியர்:** ஐயா..தயவு செய்து கருணை காட்டுங்கள். மனிசிக்குப் பெறுமாதம்.

**மேலதிகாரி:** கெற் அவுட் ஐசே.. முடிவிலை எந்த மாற்றமும் இல்லை. போகத்தான் வேணும்.

ஊழியரோ தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு வெளியே வருகிறார். ஏதாவது அரசியல் கட்சியிலை சேருவமோ என்று யோசிக்கிறார்.

மேலதிகாரி வெற்றிக்களிப்புடன் தொலைபேசியைத் தூக்குகிறார்.

(யாவும் கற்பனையே. எவரையும் குறிப்பிடுவதல்ல.)

விழிச்சான் குஞ்சு.

# கொழும்பில் மீண்டும் பொலிஸ் பதிவு; மக்கள் அச்சமடையத் தேவையில்லை

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறுகிறார்



கொழும்பு,நவ.21

கொழும்பில் மீண்டும் குடியிருப்பாளர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கை நேற்று முன்தினம் கொட்டாஞ்சேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஜம்பட்டா வீதி பகுதியில் மேற்கொள்ளப்பட்டது.நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்தப் பொலிஸ் பதிவு நடவடிக்கையில் ஓர் அம்சமாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதுகுறித்து பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹனவிடம் தொடர்புகொண்டு கேட்டபோது:

பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் 76ஆம் பிரிவின் கீழ் பொலிஸ் நிலையங்களிலுள்ள பொதுமக்கள் பொலிஸ் பிரிவினால் இந்தப் பதிவு மேற்கொள்ளப்படுகிறது.


யுத்தம் இடம்பெற்ற காலத்தில் நடைமுறையில் இருந்த அவரகாலச் சட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட குடியிருப்பாளர்விவரப் பதிவானது பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் 23 ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் 76 ஆம் பிரிவின் கீழ் இந்தப் பதிவு நடைபெறுகிறது.

இது குறித்து எவரும் அச்சம் அடையத் தேவையில்லை. தமிழ், சிங்களம், முஸ்லிம் என அனைத்து இன, மத, மொழி வேறுபாடின்றி நாட்டின் அனைத்து பகுதிகளிலும் பதிவு செய்யப்பட்டு வருகிறது.

இந்த நடவடிக்கை அண்மைக் காலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எனினும் பொது மக்கள் இந்தப் பதிவு நடவடிக்கை குறித்து பல்வேறு அச்சங்களைத் தெரிவித்து வருகின்றனர் - என்றார்.

பொது நிர்வாக அமைச்சின் கீழ் மேற்கொள்ளப்படும் பதிவு நடவடிக்கைகளுக்கு அமைவாக இந்தப் பொலிஸ் பதிவு நடவடிக்கைகள் இருக்கின்றனவா என்பதை ஒப்பிட்டுப் பார்க்கும் நோக்கிலேயே இந்தப் பதிவு நடவடிக்கை இடம்பெறுவதாக முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் 66ஆவது பிறந்த நாளான கடந்த வெள்ளிக்கிழமை 1100 குழந்தைகளுக்கு அலரி மாளிகையில் பரிசில்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் ஜனாதிபதி பரிசில்களை வழங்குகின்றார். அருகில் அவரது பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷ காணப்படுகின்றார்.

# வரவு- செலவுத் திட்டத்தில் அதிகளவு நிதி ஒதுக்கீடு

## ஹர்ஷ டி சில்வா குற்றச்சாட்டு

கொழும்பு,நவ.21

வரவு செலவுத் திட்டத்தில் கடன் மீளளிப்பதற்காக அதிகளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

2012ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் அரசினால் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்களை மீளச் செலுத்தும் நடவடிக்கைகளுக்காக அதிகளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். கடனை மீளச் செலுத்துவதற்காக 914 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட உள்ளதாகவும் இதில் தவணைக்கட்டணம் மற்றும் வட்டி செலுத்துவதற்காக 314 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட உள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

மக்களிடம் அறவீடு செய்யப்படும் வரிவருமானத்தைக்கொண்டு கடனை செலுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் அபிவிருத்தி என்ற பெயரில் அதிகளவு கடன்களை அரசு எதற்காக பெற்றுக் கொள்கின்றது என்பது இன்னமும் தெளிவுபடுத்தப்படவில்லை என்று அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (ச)

# உலோகத்தை தங்கமாகக் கூறி விற்றோர் கைது

தங்கம் என்று கூறி தங்க முலாம் பூசப்பட்ட உலோகத் துண்டுகளை விற்பனை செய்ய ஐந்து பேர் கைது செய்யப் பட்டுள்ளனர். இந்த நபர்கள் தங்க முலாம் பூசப்பட்ட 955 கிராம் நிறையுடைய உலோகத் துண்டுகளை ஆறு லட்சம் ரூபாவிற்கு காத்தான்குடியைச் சேர்ந்த ஒருவருக்கு விற்பனை செய்துள்ளனர். போலி நகைகளைக் கொள்வனவு வெய்த நபர் கொடுத்த முறைப்பாட்டின் அடிப்படையில் இந்த சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

# பாரத கொலை தொடர்பான விசாரணைகள் ஸ்தம்பிதம்

கொழும்பு,நவ.21

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமசந்திர படுகொலைச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பலபொட என்னும் பாதாள உலகக் கோஷ்டி உறுப்பினரைக் கைதுசெய்ய முடியாத காரணத்தினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் படுகொலை தொடர்பான விசாரணைகளை முன்னெடுப்பதில் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவத்திலிருந்து தப்பிச் சென்று பாதாள உலகக் கோஷ்டியில் இணைந்து கொண்ட பலபொட என்பவரே முல்லேரியா துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தின் பிரதான சந்தேகநபர் என்று புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

பாதாள உலகக் கோஷ்டி உறுப்பினர் பலபொட, முல்லேரியாத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் துமிந்த சில்வாவின் மெய்ப்பாதுகாவலராகச் செயற்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தருக்கு விளக்கமறியல்

கொழும்பு,நவ.21

கண்டி, சிலாபம் மற்றும் நீர் கொழும்புப் பகுதிகளிலுள்ள பிரபல பாடசாலைகளுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்காக போலி ஆவணங்களைக் காண்பித்துச் சுமார் மூன்று மில்லியன் ரூபா பண மோசடி செய்த முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தரை எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கண்டி நீதிவான் உத்தரவிட்டார். (ச)

# பறிமுதல் செய்யப்பட்ட நிறுவனங்களை உரிமையாளர்கள் மீளப்பெறும் வாய்ப்பு

கொழும்பு, நவ.21

'செயற்பாடு குறைந்த மற்றும் பயன்பாடு குறைவாகவுள்ள சொத்துகளுக்கு புத்துயிரளித்தல்' எனும் பறிமுதல் சட்டத்தின் கீழ் சுவீகரிக்கப்பட்ட நிறுவனங்களை அதன் உரிமையாளர்கள் மீளப்பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பும் அந்தச் சட்டத்தில் உள்ளது.

இந்த நிலையில், குறித்த நிறுவனங்களை மக்களுக்கு பயனுள்ள வகையில் வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வதற்கான செயற்றிட்டத்தை மேற்படி நிறுவனங்களின் உரிமையாளர்கள் முன்வைக்கும் பட்சத்தில் நிபந்தனைகளுக்கு அமைய அவற்றை மீளக் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரச பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

அமைச்சரவையின் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரச தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. இதன்போது, பறிமுதல் சட்டமூலம் தொடர்பில் செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அமைச்சர் மேலும் கூறுகையில்:-

மேற்படி பறிமுதல் சட்டத்தின்கீழ் நட்டத்தில் இயங்கும் 37 நிறுவனங்களை சுவீகரிக்க அரசு பட்டியலிட்டுள்ளது. இதன்படி சுவீகரிக்கப்படும் நிறு வனங்களுக்குப் புத்துயிரளித்தல், நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்தல், ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் பொதுமக்களுக்கு பயனுள்ள வகையில் உற்பத்தியைப் பெருக்குதல் உள்ளிட்ட பல விடயங்களைக் கருத்தில்கொண்டே இந்த நிறுவனங்கள் சுவீகரிக்கப்படுகின்றன.

இந்த நிலையில், மேற்படி காரணங்களை கருத்திற்கொண்டு குறித்த நிறுவனங்களை லாபத்துடன் நடத்துவதற்கான முறையான செயற்றிட்டங்களை முன்வைக்கும் நபர்களுக்கு அவை கையளிக்கப்படும்.

இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவெனில், குறித்த நிறுவனங்களின் உரிமையாளர்களும் மேற் கண்டவாறான முறையான செயற்றிட்டத்தை முன்வைக்க முடியும் என்பதாகும்.

இதேவேளை, அரசால் சுவீகரிக்கப்படும் நிறுவனங்களைக் கையாள்வதற்காக தகுதிவாய்ந்த அதிகாரிகள் குழுவொன்று இன்னும் ஓரிரு வாரங்களில் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது-என்றார்.



அனலைதீவு வடலூர் அ.த.க. பாடசாலையில் இருந்து புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த சத்தியசீலன் கீர்த்திகா (155), பாக்கியநாதன் ரஜீவன் (154) ஆகியோர் பாடசாலை அதிபர் திருமதி கௌரி கேதீஸ்வரநாதன், ஆசிரியை செல்வி ஆறுமுகம் ரஞ்சிதவாணி ஆகியோருடன் உள்ளனர். (வ-29)

# விபத்துக்களில் இருவர் பலி

மொரட்டுவ, கட்டுபெத்த ராகுல மாவத்தைக்கு அருகில் பஸ் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்று முன்தினம் இரவு 7.45 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கட்டுபெத்த தேவால வீதியை வசிப்பிடமாகக் கொண்ட நபரே, விபத்தில் காயமடைந்து அருகிலுள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்ததாக மொரட்டுவை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை நாத்தாண்டிய, குளியாபிட்டிய பிரதான வீதியில் ஏற்பட்ட விபத்தொன்றில் மற்றுமொருவர் உயிரிழந்துள்ளார்.

லொறி ஒன்றுடன் மோட்டார் சைக்கிளொன்றும் சைக்கிளொன்றும் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

மோட்டார் சைக்களில் பயணித்த ஒருவரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இன்னுமொருவரும் சைக்கிளில் பயணித்த வரும் கடும் காயங்களுக்கு உள்ளான நிலையில் மாரவில வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# யாழ். மாநகர சபை மாதாந்த கூட்டம்

யாழ்ப்பாணம், நவ.21

யாழ்ப்பாணம் மாநகர சபையின் பதினொராவது மாதாந்தக் கூட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில்-நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-7)

# சிறையிலிருந்து தப்பியோடியவர் கைது

பொன்னறுவை சிறையிலுந்து தப்பியோடிய கைதி ஒருவர் சில மாதங்களுக்கு பின்பு கைது செய்யப்பட்டுள்ளார்.

மாத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த குற்றத் தடுப்பு அதிகாரிகள் குழுவின ரால் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் அவிசாவளை, மதோல, உத்யான வீதியைச் சேர்ந்தவரென பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கடந்த பெப்ரவரி மாதம் சிறையிலிருந்து தப்பியோடிய குறித்த நபர் தம்புள்ளை, கொகலெல்ல, மாத்தளை, இரத்தினபுரி போன்ற பிரதேசங்களில் இடம்பெற்ற பல் வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த கைதியிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட பொருள்களுடன் மாத்தளை மாவட்ட நீதிவான் முன்னிலையில் அவர் ஆஜர்படுத் தப்படவுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (வ)


## காரைநகர் பிரதேச சபை

## 01.01.2012 முதல் 31.12.2012 வரை

## குத்தகைகளுக்கான கேள்வி அறிவித்தல்

01. கேள்விப்பத்திரம் வழங்கும் கடைசித்திகதி 28.11.2011 நண்பகல் 12.00 மணி
02. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி 05.12.2011 மு.ப. 11.00 மணி
03. கேள்வி திறக்கப்படும் திகதி 05.12.2011 நண்பகல் 12.00 மணி

### கேள்வி அறிவித்தல் அட்டவணை

| இல. | குத்தகை விபரம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (இதர வரிகள் தவிர) | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப்பத்திரக் கட்டணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|
| 01. | காரைநகர் ஆலடி மீன்சந்தை | 85,000.00 | 1,500.00 | 1,000.00 |
| 02. | காரைநகர் வலந்தலை மீன்சந்தை | 30,000.00 | 1,000.00 | 1,000.00 |

குறிப்பு:
- கேள்விப்பத்திரக் கட்டணம், கேள்வித்தொகை என்பவற்றுக்குக் காலத்துக்குக் காலம் அரசினால் விதிக்கப்படும் வரிகளை (பெறுமதி சேர்வரி (12%) நாட்டைக்கட்டியெழுப்பும் வரி(2%)) மேலதிகமாகச் செலுத்த வேண்டும்.
- கேள்விப்பத்திரங்களைக் கோருபவர்கள் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையினையும், அதன் நிழற்படப் பிரதியினையும் கொண்டு வரவேண்டும்.
- கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு மூலப்பிரதியை 'தலைவர், பிரதேசசபை, காரைநகர்' என்னும் முகவரிக்குப் பதிவுத்தபால் மூலம் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்ட கேள்விப்பெட்டியில் உரிய நேரத்துக்கு முன்னர் இடப்பட வேண்டும். இரண்டாம் பிரதியை 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்' என்னும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.
- கேள்வியில் சித்தி பெறுவோர் கேள்வித்தொகையின் 1/3 பங்கை 08.12.2011 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை மேற்கொள்ள வேண்டும். மிகுதித் தொகையின் 1/8 பங்கினை 2012 தை மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் 20 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும்.
- சந்தைக்குத்தகை எடுப்பவர்கள் மீன் விற்பனை விலையின் 5% அறவிடலாம், மேலதிகமாக எதுவித கட்டணங்களும் அறவிடலாகாது.
- போதிய காரணங்களினால் கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் கேள்விச்சபைக்கு உண்டு.
- மேலதிக விவரங்களை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

காரைநகர் பிரதேச சபை,
காரைநகர்.
18.11.2011

வே.ஆனைமுகன்,
தலைவர், பிரதேச சபை, காரைநகர்.

(C/6082)(5,6,7)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

## மு/ யோகபுரம் மகாவித்தியாலயம்



2011 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்று எமது பாடசாலைக்குப் பெருமையும் புகழும் சேர்த்த மாணவச் செல்வங்களையும் இவர்களுக்குக் கற்பித்த ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**சித்திபெற்ற மாணவர்கள்**

1. பிரேமானந் எடின்சிகா - 159 புள்ளிகள்
2. செந்தராஜன் கயூரங்கன் - 157 புள்ளிகள்

**100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்**

1.பாலசுப்பிரமணியம் திருவேரகன் - 146 புள்ளிகள்
2.இராஜசிவேந்திரன் கேசிகன் - 141 புள்ளிகள்
3.ஞானசீலன் தனுகீதன் - 135 புள்ளிகள்
4.தவசீலன் கதீஸ் - 132 புள்ளிகள்
5.யோகேஸ்வரன் தனுசன் - 130 புள்ளிகள்
6.கீதசுதன் விதுசன் - 130 புள்ளிகள்
7. ஜப்பிரகாஸ் தேனுஜன் - 128 புள்ளிகள்
8.சிவராசன் தமிழினி - 127 புள்ளிகள்
9.சற்குணராசன் சஜீபா - 122 புள்ளிகள்
10.சுவேந்திரன் ஜயிநாத் - 117 புள்ளிகள்
11.சசிகுமார் நிதர்சன் - 117 புள்ளிகள்
12. அருமைநாயகம் பிரணவன் - 114 புள்ளிகள்
13. சுவேந்திரன் சுதாஜினி - 111 புள்ளிகள்
14. சிவசுதன் மதுசன் - 110 புள்ளிகள்
15. தங்கராஜா நிஷாந் - 104 புள்ளிகள்

சித்தி பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு விழாவும் 70 புள்ளிகளுக்கு மேல்பெற்ற மாணவர்களுக்குமான பாராட்டு விழாவும் பரிசளிப்பும் இன்று( 21.11.2011) திங்கட்கிழமை பாட சாலை மண்டபத்தில் நடைபெறும்.

பாடசாலைச் சமூகம்

(10618)(6,7,3)

# இன்று சமர்ப்பிக்கப்படும் வரவு - செலவுத் திட்டம் பொருளாதார வங்குரோத்தைச் சீர்செய்யுமா?

வரவு-செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகையை எப்படி சமாளிப்பது என ஜனாதிபதிக்கு முக்காடிக்கொண்டிருக்கும் இந்தவேளையில், பேரிடிபோல் விழுந்துள்ளது பங்குச்சந்தையில் ஏற்பட்டுள்ள திடீர் வீழ்ச்சி. ஒரே வாரத்தில் 12 ஆயிரத்து 500 கோடி ரூபா நட்டம். இந்த நிலை தொடர்ந்தால் அரசு வங்குரோத்தாகிவிடும் என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை.

உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் உட்படப் பல வழிகளிலும் பெற்ற கடன்களுக்கான வட்டியைச் செலுத்துவதற்கே மீண்டும், மீண்டும் கடன் பெற வேண்டிய நிலை. கடனை செலுத்துவதற்கே கடன்பெற வேண்டிய துர்பாக்கியநிலை.

இப்படியான ஓர் இக்கட்டான நிலையில்தான் ஜனாதிபதி 2012ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தை இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளார்.

வாழ்க்கைச்செலவு அதிகரிப்பு, அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வு, பெற்றோலியப் பொருள்களின் விலை அதிகரிப்பு என்பவற்றால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கும் பொதுமக்கள் ஏதாவது விமோசனம் கிடைக்காதா என எதிர்பார்ப்புகளுடன் காத்திருக்கின்றனர்.

அதேவேளை, அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படவேண்டும் என ஏற்கனவே போராட்டங்களை ஆரம்பித்து விட்டனர்.

அப்படி அரசதுறை ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு வழங்கப்பட்டால், தனியார் துறையினருக்கும் வழங்கப்படவேண்டும் என ஜனாதிபதி தனது பட்ஜெட் உரையில் சிபார்சு செய்யமாட்டாரா எனத் தனியார் துறை ஊழியர்களும் ஏங்கி நிற்கின்றனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியான நாள் முதல் அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வாக அறிவிக்கப்பட்ட 2 ஆயிரத்து 500 ரூபா சம்பள உயர்வும் இன்றுவரை நிலுவையிலேயே இருக்கின்றது.

கடந்த காலங்களில் காலஞ்சென்ற டாக்டர் என்.எம்.பெரேரா சமர்ப்பித்த வரவு-செலவுத் திட்டங்களில் பொதுமக்களுக்கு எந்தச் சுமையையும் வைக்கமாட்டார்.

ஆனால், பட்ஜெட் உரைக்கு ஒரு வாரம் அல்லது சில தினங்களுக்கு முன் உயர்த்தவேண்டிய எல்லாவற்றையும் நள்ளிரவில் உயர்த்திவிடுவார்.

அதே பாணியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் கடைப்பிடிக்கின்றார். எரிபொருள்கள், சமையல் வாயு, மதுபான வகை, சிகரெட் எனப் பல பொருள்களின் விலைகளை நடுநிசியில் அதிகரித்து சாதனை படைத்துவிட்டார்.

குறிப்பாக பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் என்பனவற்றின் விலை அதிகரிப்பால், பொருள்களைக் கொண்டுசெல்லும் போக்குவரத்துக் கட்டணங்களும் அதிகரித்துவிட்டன. இதன் தாக்கமாக அனைத்துப் பாவனைப் பொருள்களின் விலைகளும் இரட்டிப்பாக அதிகரிக்கப்பட்டுள்ளன.

கடந்த 30 வருடங்களாகப் பெரும் அச்சுறுத்தலாக இருந்த பயங்கரவாதத்தை அடியோடு ஒழித்துக்கட்டிவிட்டோம்; யுத்தம் முடிந்துவிட்டது என்று ஜனாதிபதியும், அமைச்சர்களும் தேசம் தேசமாகச் சென்று பறையடித்து வருகின்றனர்.

யுத்தமும் இல்லை. பயங்கரவாதமும் இல்லை. இப்படியான நிலையிலும் பாதுகாப்பு அமைச்சுக்கே ஆகக்கூடுதலான தொகையாக 2 லட்சத்து 29 ஆயிரத்து 943 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டைவிட மூன்றில் ஒரு பங்கு அதிகரித்துக் காணப்படுகின்றது.

யுத்தம் இல்லாத ஒரு சிறிய நாட்டில் பாதுகாப்புச் செலவினங்களுக்காக இவ்வளவு பெரிய தொகை அவசியம்தானா என்ற கேள்வியும் எழுகின்றது.

யுத்த பூமியாகக் காணப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களைக் கட்டியெழுப்பவேண்டியது அரசின் தலையாய கடமை.

கிழக்கின் உதயம், வடக்கின் வசந்தம் என்ற திட்டங்களின் மூலம் வடக்கையும் கிழக்கையும் மீளக்கட்டியெழுப்பப் போகிறோம் என்றும், இதனை ஜனாதிபதியின் விசேட செயலணியே நடைமுறைப்படுத்துகின்றது என்றும் உலக அரங்கில் பிரசாரம் செய்கின்றது அரசு. இது ஒரு பொம்மலாட்டமே தவிர, உருப்படியாக எதையும் செய்ததாக இல்லை.

இன்றைய நிலையில் மனிதாபிமான அடிப்படையில் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டிய விடயங்கள்:-

* மீள்குடியேற்றம்
* உட்கட்டமைப்பு
* வீடமைப்பு
* புனர் வாழ்வளிப்பு
* சுகாதார சேவைகள்
* கல்வி அபிவிருத்தி
* கமநல மற்றும் நிர்மாணம்
* அடிப்படை வாழ்வாதாரம்
* தொழில் வாய்ப்புகள்
* அடிப்படை பொது வசதிகள்

ஆனால், இவை அனைத்திற்குமே கடந்த 2011ஆம் ஆண்டைவிட கணிசமான தொகை குறைக்கப்பட்டுள்ளது. இவை மீள் பரிசீலனை செய்யப்படவேண்டும்.

பட்ஜெட்டில் போதிய நிதி ஒதுக்கப்படாவிட்டாலும் குறைநிரப்பு பிரேரணைகள் மூலம் தேவையான நிதியைப் பெறக்கூடிய வாய்ப்பும் உண்டு.

இதற்கு ஒரு உதாரணமும் உண்டு. காலஞ்சென்ற முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலத்தில் அப்போது தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் கால்நடைகள் அமைச்சராக இருந்த அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியினால் குழு நிலை விவாதத்தின்போது தோற்கடிக்கப்பட்டது. ஆனால், வரவு-செலவுத் திட்டத்திற்குப் புறம்பாக குறைநிரப்பு பிரேரணை மூலம் அந்த அமைச்சுக்கான நிதி வழங்கப்பட்டது.

மக்கள் பிரதிநிதிகளான நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதனைக் கவனத்திற்கொண்டு செயல்படவேண்டும்.

இங்கு மற்றும் ஒரு விடயத்தையும் சுட்டிக்காட்டவேண்டிய அவசியமும் உண்டு.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான நிதி மாகாணசபைகளுக்கு ஊடாகவே பயன்படுத்தப்படுவது முறைமை.

சகல கருத்திட்டங்களையும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படும் நிதியையும் கட்டுப்படுத்தும் அதிகாரம் ஜனாதிபதியின் சகோதரரான பஸில் ராஜபக்ஷவின் தலைமையிலான பொருளாதார அமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் பிரதான அபிவிருத்தி மற்றும் கருத்திட்டங்கள் அனைத்தும் இந்த அமைச்சின் கீழேயே இயங்குகின்றன. 104,57,13,30,000 ரூபா மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. இது சென்ற முறையைவிட நான்கில் ஒரு மடங்கு குறைக்கப்பட்டுள்ளது. இதனால், அபிவிருத்திப் பணிகளும் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளன.

இந்த அரசின் ஸ்திரமற்ற பொருளாதார கொள்கையினால்தான் பெரிய பொருளாதார வீழ்ச்சி அடைந்துள்ளது.

* வயிற்றில் உள்ள பிள்ளையை நம்பி கைப்பிள்ளையை கைவிட்ட கதையாக 2,018ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியை நம்பி ஆயிரமாயிரம் கோடிகளை அம்பாந்தோட்டை பெரிய அபிவிருத்திக்குச் செலவிடப்பட்டது. அரசின் கனவும், திட்டமும் படுதோல்வி கண்டுள்ளது.

* இரண்டாவதாக அவசர அவசரமாக நிறைவேற்றப்பட்ட நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களை அபகரிக்கும் சட்டம். இதனால் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இங்கு முதலீடுகளைச் செய்யவும், கருத்திட்டங்களுக்கு உதவவும் பின்னடிக்கின்றனர்.

* உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் உட்பட பல வங்கிகளிடம் பெற்ற கடன்கள் திருப்பிச் செலுத்தப்படாமல் வட்டிக்கு வட்டியென குட்டி போடுகின்றன.

இதனால் அரசு எதிர்பார்க்கும் வெளி உதவிகள் கேள்விக்குறியாகி ஆச்சரியக் குறியாகித் தொங்கி நிற்கின்றன.

இப்படியான ஒரு சூழ்நிலையில்தான் ஜனாதிபதி தனது வரவு-செலவுத் திட்டத்தை முன் வைக்கப்போகின்றார்.

இதனால் வாழ்க்கைச் சுமையை குறைக்கக்கூடிய வகையில் மானியங்களையோ, சம்பள உயர்வுகளையே எதிர்பார்க்க முடியாது. கிடைத்தாலும் அது திருப்திகரமாக இருக்காது.

நாடாளுமன்றச் செய்தியாளர்
இரா.புத்திரசிகாமணி

வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கும் தினத்தில் இரண்டு பெரிய சவால்களுக்கும் அரசு முகம்கொடுக்கவேண்டி உள்ளது.

* வரவு-செலவுத் திட்டத்தைக் கண்டித்து நாடளாவிய ரீதியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள போராட்டம்.

* முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு வழங்கப்பட்ட நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக நடத்தப்படவுள்ள ஆர்ப்பாட்டம்.

இக்கட்டான இப்படி ஒரு நிலையில் துண்டுவிழும் தொகையை சமன்படுத்தும் ஜனாதிபதியின் வரவு-செலவுத் திட்டம் மக்கள் கழுத்தில் விழும் தொண்டாக இருக்கக்கூடாது. இதுவே நாட்டு மக்களின் எதிர்பார்ப்பு.

# ரிஸானாவுக்கு மன்னிப்புக் கிடைக்கும் இலங்கை தூதுக்குழுவினர் நம்பிக்கை

கொழும்பு, நவ.21

மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலானா தலைமையில் இலங்கை உயர் மட்டத் தூதுக்குழுவொன்று சவூதி அரேபியாவுக்கு மேற்கொண்டுள்ள விஜயம் இலங்கைப் பணிப்பெண் ரிஸானா நபீக் விடயத்தில் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது என "அராப் நியூஸ்" பத்திரிகை தெரிவித்துள்ளது.

சிஸானா நபீக், 2005 ஆம் ஆண்டு மே மாதம் நான்குமாதக் குழந்தையொன்றைக் கொன்ற குற்றச்சாட்டில் மரணதண்டனை தீர்ப்பளிக்கப்பட்ட நிலையில் சிறையில் உள்ளார்.

ரிஸானா நபீக்கின் விடுதலை குறித்துப் பேச்சு நடத்துவதற்காக சவூதி அரேபியாவுக்கு சென்றுள்ள குழுவில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலன்புரி அமைச்சின் செயலாளர் நிசங்க என் விஜேரட்ண, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க, வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலாளர் இப்பராஹிம் சாஹிப் அன்ஸார், நாடாளுமன்ற உறுப்பினர்களான ஏ.எச்.எம். அஸ்வர், எம்.எஸ்.எம். தௌபீக் ஜம்மியதுல் உலமாவின் பிரதிச் செயலாளர் நாயகம் எம்.எஸ்.எம். தாஸிம், இம்ரான் ஜமால்டீன், எம்.பி.எம். ஸருக் ஆகியோர் அடங்கம் வகித்தனர்.

இக்குழுவினர், பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் சார்ந்த சமூகத் தலைவர்களைச் சந்தித்து ரிஸானாவுக்கு மன்னிப்பளிக்கும்படி கோரியுள்ளனர். இறந்த குழந்தையின் பாட்டனாரான மிர்ஹாத் பஹாத் அல் ஒடாய்பியையும் இவர்கள் சந்தித்து பேசினர்.

குற்றவாளியாக காணப்பட்ட இத்துப்பணிப்பெண்ணை மனிதாபிமான அடிப்படையில் விடுவிக்கமுடியும் என்ற தீவிர நம்பிக்கையுடன் நாம் இந்த மண்ணிலிருந்து செல்கிறோம் என சவூதியிலிருந்து புறப்படுவதற்கு முன் அராப் நியூஸ் பத்திரிகைகு தாஸிம் தெரிவித்துள்ளார்.

தவாத்மி நகரிலுள்ள பைனான் என்பவர் தலைமையிலான ஒடாய்பி குடும்பத்தினர் தமக்கு பெரும் வரவேற்பு அளித்தனர் எனவும், இஸ்லாமிய சட்டத்தின் கீழ் இந்தப் பணிப்பெண்ணை விடுதலை செய்வதற்கு தன்னாலான அனைத்தையும் செய்வார் என அவர் கூறினார் எனவும் தாஸிம் தெரிவித்தார்.

இலங்கை அரசுக்கும் ஒடாய்பி குடும்பத்தினருக்கும் இடையிலான உறவில் இந்த விஜயம் புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தும் எனவும், இது மகிழ்ச்சியான முடிவுக்கு வழிவகுக்கும் எனவும் ஜமால்டீன் கூறினார்.

இருதரப்பினருக்கும் இடையிலான பேச்சு ஆரம்பமாகியமை குறித்து தாம் மகிழ்ச்சியடைகின்றனர் என ஆளுநர் அலவி மௌலானா கூறினார். அனுதாப அடிப்படையில் குறித்த குழந்தையின் பெற்றோர் ரிஸானாவுக்கு மன்னிப்பளிப்பர் என தான் நம்புகின்றார் என்றும் அவர் தெரிவித்தார்.

# அத்தியாவசிய சேவையாக தபால்

கொழும்பு, நவ.21

தபால்சேவையை அத்தியாவசிய சேவையாக்க அரசு ஆலோசித்து வருகிறது என அரசின் உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இன்னும் ஓரிரு தினங்களில் இதற்கான முடிவு எடுக்கப்படும் என அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

தபால்துறை தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து மேற்கொண்டுள்ள தொழிற்சங்க நடவடிக்கைகளால் தபால் பரிமாற்றம் சீர்குலைந்து போயுள்ளதாலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தில் லட்சக்கணக்கான தபால்கள் தேங்கிக் கிடக்கின்றன. இன்னும் ஓரிரு தினங்களில் விநியோகிக்கப்பட வேண்டிய ஜீ.சீ.ஈ.சாதாரணதரப் பரீட்சை அனுமதிப்பத்திரங்களும் முடங்கிக் கிடக்கின்றன என்பதைக் கருத்தில் கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# மின்சார வேலைகள் இனி மத்திய அரசின்கீழ்

கொழும்பு, நவ.21

வீடமைப்பு மற்றும் மின்சாரம் வழங்கும் பணிகள் இனிமேல் மத்திய அரசின்கீழ் வரவுள்ளன எனவும், எதிர்காலத்தில் இந்தப் பணிகளுக்காக மாகாணசபைகளுக்கு நிதி வழங்கப்படமாட்டாது எனவும் அரசின் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

நாட்டு மக்களின் அடிப்படைத் தேவைகளான வீடமைப்பும், மின்சாரமும் உரிய முறையில் செய்யப்படவேண்டுமென்பதே அரசின் கொள்கை என்பதாலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என அரச துறையின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

2012 ஆம் ஆண்டில் சகல வீடுகளுக்கும் மின்சாரம் வழங்க மின்சக்தி, எரிசக்தி அமைச்சு நடவடிக்கையை எடுத்துள்ளது.

வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் வீடமைப்புப் பொறியியலாளர் சேவை, பொதுவசதிகள் அமைச்சினால் மேற்கொள்ளப்படும் - என அவர் மேலும் தெரிவித்தார்.

# உழைப்புக்கு ஏற்ற ஊதியம் இல்லையா? பொறுத்தது போதும்...



சிவாஜினி,
சுன்னாகம்.

வாழ்வில் வறுமை விரட்ட வேலை தேடி அலையும் பெண்களில் பலர் செய்கின்ற வேலைக்கு ஏற்ற ஊதியமும் இன்றித் தம்முடைய அன்றாட வாழ்வில் வார்த்தைகளால் வடிக்க முடியாத துன்பங்களைச் சுமந்து வாழ்ந்து கொண்டிருகின்றனர். படித்து உத்தியோகம் பார்க்கும் பெண்களைக் காட்டிலும் கல்வியை இடையில் நிறுத்திய பெண்கள் தமது சாதாரண கல்வித் தகுதிக்கு ஏற்ற வகையில், தாமும் சொந்த உழைப்பில் வாழ வேண்டும் என்ற மேலான எண்ணத்தில் தனியார் நிறுவனங்களை நாடிச் செல்கின்றனர். ஆனால் அங்கு வேலைசெய்யும் பெண்களுக்கு அவர்களின் உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடைப்பதில்லை. இந்த வேலையை விட்டால் வேறு வழியில்லை என்ற நிலையில் எத்தனையோ பெண்கள் தம்மை உருக்கி உழைக்கின்றனர்.

எவ்வளவு தூரம் தங்களுடைய உடல் உழைப்பு செலவிடப்படுகிறது என்பது பற்றி கதைப் பதற்குக் கூட அதிகாரமற்ற நிலையில் வாழ்ந்த கொண்டு இருக்கின்றனர். உடல் உழைப்புக் கேற்ற ஊதியமும் இல்லை, போசாக்கான உணவும் இல்லை. இவ்வாறான கோயில்மாடு போல் தலையாட்டி வாழும் நிலையில் இருந்து எமது பெண்கள் விடுபட வேண்டும். காலங்காலமாகப் பேசா மடந்தைகளாகப் பெண்கள் இருந்தால்தான் பெண்கள் எதையுமே சாதிக்க முடியாது. மாறாக அனைவரும் ஏறி மிதிக்கும் நிலைதான் ஏற்படும். சுமைகளைச் சுமந்து சுமை தாங்கயாக வாழும் பெண்னே! நீ சுமக்கின்ற சுமைகளை வெளியில் காட்டிக் கொள் ளாமல் இருந்தாலும் காலப்போக்கில் நீ போசாக்கின்றி மடிந்து விட்டால் உன் குடும்பத்தைக் காப் பாற்றுவது யார்? எனவே உனக்கான உரிமையை விட்டுக்கொடுக்காதே . உண்மையான உன் உழைப்புக்கு ஏற்ற ஊதியத்தைத் தட்டிக்கேள். பெண் என்றால் எதையும் செய்வாள்; ஏதோ நாம் கொடுக்கின்ற ஊதியத்தை வாங்கிக் கொண்டு பேசாமல் போய்விடுவாள் என்ற நிலையை நீ பணிபுரியும் இடத்திலிருந்து மாற்று. ஒரு குரல் ஓங்கி ஒலித்தால் அனைவரும் தம் கொடுமைக்கு எதிராகக் குரல் கொடுப்பார்கள். பெண்ணே உனக்குள் நிறையவே வல்லமை உண்டு. உன்னிடம் உள்ள சக்தி அனைத்தையும் திரட்டினால் நீயே ஒரு முதலாளியாக மாறி சுயமாக உழைக்கலாம். அடிமை வேலையை விடு. துணிவோடு உரிமைகளைத் தட்டிக்கோள்.


# தா(ர)ம்...



ஊர் உலகம் தேடி
ஊனமற்றவள் என்று தானே
என்னை உன்னிடம்
ஒப்படைத்தார்கள்
அழகிருக்க
வேண்டும் என்றாய்
அவள் மேனி எங்கும்
நகையிருக்க
வேண்டுமென்றாய்
தரம் பார்த்து
தாரம் தேடினாய்
வரமாய் கிடைத்திருக்கும்
பெண்ணை
வாட்டி எடுக்கிறாயே?
வெளிப்படையாய்
தெரியாமல்
உனக்குள் ஏதும் பலவீனம்
இருக்கிறதா...?

செ.சுசி,
குப்பிளான்.

# கலாசாரத்துக்குப் மதிப்பளியுங்கள்!




வீ.ஜெயரூபி,
மட்டுவில்.

தமிழ்ப் பெண்களின் கலாசாரத்தைப் பண்டைக்காலம் தொட்டுப் பலரும் புகழ்ந்துள்ளனர். ஆனால் இந்தப் புகழ்ச்சி இப்போது கேள்விக்குறி ஆகிவிடும் போல் தென்படுகின்றது. ஏனென்றால் தமிழ்ப் பெண்கள் அணியும் ஆடைகள், இவர்களால் செப்பப்படும் வார்த்தைகள் கண், காது கொண்டு நோக்கவோ, கேட்கவோ முடியாமல் உள்ளன. சங்ககாலத்திலிருந்தே கலாசாரத்தையும் தமிழையும் கட்டிக் காத்த வீரத் தமிழிச்சிகளாக இப்படி எமது சமுதாயத்தை சின்னபின்னமாக்க எத்தனிக்கின்றனர். எமது மொழியில் எவ்வளவோ இனிமையான சொற்கள் உள்ளன. அந்த அழகுத் தமிழ்ச் சொற்கள் எல்லாம் தற்போது பேசப்படுவது கிடையாது. அவை அழிந்துகொண்டு செல்கின்றன. எங்கிருந்தோ வந்த பிற மொழிக் கலப்பும் அதனுடன் வந்து சீர ழிவுகளும் எமது தமிழ்க் கலாசாரத்தை ஆள்கின்றன.

பெண்ணே உன்னால் முடியும் திருந்திக் கொள்ள . நீ பேசும் வார்த்தைகளையே நாளை உன் சந்ததிக்கும் கற்றுக்கொடுக்கப் பேகிறாய் என்பதை மனதில் வைத்துக்கொள். எம்மை நாம் நேசிப்பது போல் எமது கலாசாரத்தையும் நேசிக்க வேண்டும்.இந்த விடயத்தில் பேதையாய் இருக்காதீர்கள் பெண்கனே; மேதைகளாக மாறுங்கள். எமது மொழியை நேசியுங்கள்; எமது கலாசாரத்தைப் பின் பற்றுங்கள்; எமது சமயத்தை வழிப் படுத்துங்கள், பிறமதங்களுக்கு மதிப்பளியுங்கள் இவை அனைத்தையும் மனதில் கொண்டு செயற்பட்டாலே நீ பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக மிளிர்வாய்.

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
''திலகம்'',
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .

# வெளிநாட்டு மோகத்தால் சீரழியும் பெண்களின் வாழ்வு



வந்தனா,
கரவெட்டி

அனேகமான பெண்களை இன்று வெளிநாட்டு மோகம் ஆட்டிப் படைத்துக்கொண்டிருக்கின்றது. இணையம் மூலம் வெளிநாட்டில் உள்ள இளைஞர்களுடன் தொடர்பினை ஏற்படுத்துதல். நாளடைவில் இந்தத் தொடர்பு காதலாக மாறிவிட வெளிநாட்டில் அவர்கள் எவ்வாறு இருக்கின்றனர், குணநலன் எப்படிப்பட்டது என்பதனை பெண்கள் எண்ணிப் பார்க்காது திருமணம் என்ற பந்தத்தை ஏற்படுத்த முனைகிறார்கள். இவர்கள் விரும்புவது என்னவோ டொலரில் சம்பளம் வாங்கும் ஆணைத்தான். உண்மையிலேயே அந்த ஆண் அங்கு ஏற்கனவே திருமணம் ஆனவனாகக் கூட இருக்கலாம். அவர்களும் அதனை மறைத்து இங்கு வந்து திருமணம் செய்கின்றனர்.

வெளிநாட்டில் இருந்து வந்து திருமணம் செய்து ஒரு சில மாதங்கள் குடும்பம் நடத்திவிட்டுப் பின் ஏமாற்றிச் சென்றவர்களும் உண்டு. இப்படிப்பட்ட ஆண்களைப் பெண்கள் இனங்காண வேண்டும். இதைவிட்டு வெளிநாட்டுப் பணத்தைக் கண்டு ஒரு போதும் மயங்கிவிடக் கூடாது. நம் ஊரிலே அன்பான பண்பான, கௌரவமான தொழில் செய்யும் ஆண்கள் இவ்வாறான பெண்களைத் திருமணம் செய்ய முன்வந்தாலும் பெண்கள் விரும்புவது வெளிநாட்டு வரன்களைத்தான். வெளிநாட்டு மோகத்தில் திருமணம் முடித்த அனேகமான பெண்கள் வெளிநாடு சென்று சந்தோஷமாகவா வாழ்கின்றனர்? இல்லவே இல்லை. அங்கு சென்றவுடன் தான் பெண்களுக்குத் தம் கணவன்மாரின் சுயரூபம் வெளிப்படத் தொடங்குகின்றது. அதன்பின் என்ன செய்ய முடியும் . கண்காணாத தேசத்தில் இருந்து ஆறுதல் கூறக் கூட யாரும் இன்றி அழுது வாழ்கின்றார்கள்.

சிலர் இந்த ஏமாற்றத்தை தாங்கமுடியாது தற்கொலை கூட செய்து விடுகின்றனர். தைரியமும் துணிச்சலும் உடைய பெண்களாக இருந்தால் இவ்வாறான ஆண்களிடம் இருந்து தப்பித்து விடுவார்கள். மற்றைய பெண்கள் நிலை, ''விளக்கைத் தேடி வந்து விழும் விட்டில் பூச்சி போலதான்'' ஆகிவிடுகின்றது. பெண்கள் ஒருபோதும் புற அழகைக் கண்டோ, போலியான கௌரவத்தை வைத்தோ ஆண்களை எடை போடக்கூடாது. இவ்வாறான ஆண்கள் தாழம்பூவுக்குள் மறைந்திருக்கும் நாக பாம்பைப் போன்றவர்கள். அவர்களை எளிதாக இணங்காண்பது கடினம். அவசரத்தில் முடிவெடுத்துவிட்டு அழுது பயனில்லை. எனவே சரியான வழியில் வாழ்க்கையைத் தீர்மானிக்க பெண்கள் கற்றுக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் வாழ்வில் சந்தோஷமும் நிம்மதியும் நிறைந்திருக்கும்.

# கிழக்கு மாகாணத்தில் 3440 ஆயுதங்கள் மக்களால் பொலிஸாரிடம் ஒப்படைப்பு

மட்டக்களப்பு,நவ.21
கிழக்கு மாகாணத்தில் பொது மக்கள் வைத்திருந்த 3440 ஆயுதங்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

பொதுமக்களிடம் உள்ள ஆயுதங்களை உடனடியாக ஒப்படைக்குமாறு பொலிஸார் விடுத்த உத்தரவுக்கு அமைய இவ்வாறு ஆயுதங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அம்பாறை, சுந்தளாய், திருகோணமலை போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த பொதுமக்கள் வசமிருந்த ஆயுதங்கள் இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

ஆயுதங்களைப் பொறுப்பேற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் அடுத்தவாரத்துடன் முடிவடைவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதன் பின்னர் மாகாணத்தில் காணப்படும் சட்ட விரோத ஆயுதங்களைக் கண்டுபிடிக்கும் நோக்கில் தேடுதல் வேட்டைகள் முன்னெடுக்கப்படும் என்று பொலிஸார் அறிவித்துள்ளனர்.

ஒப்படைக்கப்பட்ட ஆயுதங்களில் அதிகமானவை எல்லைப்புற சிங்கள கிராமங்களின் பாதுகாப்பிற்காக பொதுமக்களுக்கு வழங்கப்பட்டவை என்று தெரிவிக்கப்படுகிறது.

போர் நிறைவடைந்த பின்னர் இந்த ஆயுதங்களைச் சிலர் குற்றச் செயல்களுக்காக பயன்படுத்தி வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (ச)

# பஸ் பள்ளத்தில் புரண்டு 16 பேர் படுகாயம்

## இறக்குவானையில் சம்பவம்

இறக்குவானை,நவ.21
இறக்குவானை நீதிமன்றத்திலிருந்து குருவிட்ட சிறைச்சாலைக்கு கைதிகளை ஏற்றிச்சென்ற பஸ் பள்ளத்தில் புரண்டு விபத்திற்குள்ளானதில் பதினொரு கைதிகளும், ஐந்து அதிகாரிகளும் படுகாயமடைந்து இறக்குவானை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இறக்குவானை புதியபாதை பிரதேசத்தில் பயணித்துக்கொண்டிருந்த இந்த பஸ், சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து பாதையை விட்டு விலகிப் பள்ளத்தில் புரண்டு விபத்துக்குள்ளானது.

எனினும், தெய்வாதீனமாக பஸ் இடையில் நின்று விட்டதால் அதிலிருந்தவர்கள் மயிரிழையில் உயிர்தப்பியுள்ளனர் என்று இறக்குவானை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பஸ் சாரதி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# பெண் கொன்ஸ்டபிள் வன்புணர்வு; பொலிஸ் அதிகாரி இடைநிறுத்தம்

கண்டி,நவ.21
பெண் பொலிஸ் கொன்ஸ்டபிளொருவரை வன்புணர்வுக்கு உட்படுத்தினார் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் கண்டி பொலிஸ் நிலைய மோசடி தடுப்புப்பிரிவு பொலிஸ் அதிகாரியொருவர் கண்டி பொலிஸ் தலைமையகத்தினால் உடனடியாக கடமையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் பெண் கொன்ஸ்டபிள் கண்டி பொலிஸ் தலைமையக உயரதிகாரிகளிடம் செய்த முறைப்பாட்டையடுத்து இவர் கடந்த வியாழக்கிழமையிலிருந்து பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார் என்று கண்டி பொலிஸ் வட்டாரம் தெரிவித்துள்ளது.

சந்தேகநபரைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தும் நடவடிக்கையில் கண்டி குற்றப் புலனாய்வுப் பிரிவு பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (ச)

# சுவர் இடிந்து வீழ்ந்து 2 சிறுவர்கள் மரணம்

தம்புள்ளை,நவ.21
தம்புள்ளை, பலபொக்க பிரதேசத்தில் கட்டடம் ஒன்றின் சுவர் இடிந்து வீழ்ந்ததன் காரணமாக அந்த இடத்தில் படித்துக் கொண்டிருந்த இரண்டு சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றதாக தம்புள்ளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் எட்டு மற்றும் பத்து வயதுடைய இரண்டு சிறுவர்களே உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக தம்புள்ளை வைத்தியசலையில் வைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# மரண தண்டனை விதிப்பு

கேகாலை, நவ.21
ஆயுதமொன்றால் தாக்கி தெரணியகல பிரதேசத்தில் ஒருவரை கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் விசாரிக்கப்பட்ட வழக்கில் எதிராளி மீதான குற்றம் சந்தேகமின்றி நிரூபிக்கப்பட்டதால், அவருக்கு மரணதண்டனை விதித்து கேகாலை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

திக்எல்ல, தெரணியகல பிரதேசவாசியான கமரால்லாகே சரத் என்பவருக்கே இந்தத் தண்டனை வழங்கப்பட்டது. 1994ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23ஆம் திகதி தெரணியகல, சப்புமல் பிரதேசத்தில் கமகே பிரியசாந்த என்பவருடன் ஏற்பட்ட வாய்த் தர்க்கம் முற்றியபோது அவரை ஆயுதம் ஒன்றால் தாக்கிக் கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கேகாலை மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



தென்னாபிரிக்காவின் அபிவிருத்திக்கான பிரதி அமைச்சர் இப்றாஹிம் இஸ்மாயில் சமகால அரசியல் விடயங்கள் தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீமுடன் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பேச்சு நடத்தியுள்ளார். இந்தக் கலந்துரையாடலில் இலங்கைக்கான தென்னாபிரிக்காத் தூதுவர் ஜியொப் டொயிஜ், கல்முனை முதல்வர் சிராஸ் மீராசாஹிப், கல்முனை பிரதி மேயர் சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச)

# வாகன விபத்தில் ஒருவர் பலி



கல்முனை,நவ.21
கல்முனை, அக்கரைப்பற்று நெடுஞ்சாலையில் கல்முனைக்குடி ஜும்மா பள்ளிவாசலுக்கு அண்மையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் சம்பவ இடத்தில் பலியானதுடன் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

சம்மாந்துறையிலிருந்து கல்முனை நோக்கி கல் ஏற்றிக்கொண்டு வந்த டிப்பர் வாகனத்தின் அடிச்சட்ட டயர் ரொட் உடைந்ததன் காரணமாக வழுக்கிச் சென்ற வாகனம் எதிரே வந்த லொறியுடன் மோதுண்டே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த விபத்துக் குறித்து கல்முனை பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# இனமத வேறுபாடுகள் இன்றி எஹெட் நிறுவனம் சேவையாற்றியது

## பிரதேச செயலர் லவநாதன் கூறுகிறார்

அம்பாறை, நவ.21
"இன, மத வேறுபாடுகள் இன்றி கிழக்கு வாழ் மக்களுக்கு எஹெட் நிறுவனம் முழுமையான சேவைகளை ஆற்றியுள்ளது. இதற்கு இயக்குநர் அருட்தந்தை பேராசிரியர் சிறீதரன் சில்வெஸ்ரரின் சிறந்த முகாமைத்துவத்துடன் கூடிய வழி நடத்துதலே முக்கிய காரணமாகும்''.

இவ்வாறு கல்முனை தமிழ்ப் பிரிவு பிரதேச செயலாளர் கே.லவநாதன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு-கல்முனை கரித்தாஸ், எஹெட் நிறுவனத்தின் இயக்குநராகக் கடந்த 13 வருடங்கள் கடமையாற்றி, தற்சமயம் திருமலை- மட்டக்களப்பு மறைமாவட்ட நிதி மேலாளராக உயர்வு பெற்றுள்ள அருட் தந்தை பேராசிரியர் த.சில்வெஸ்ரர் சிறீதரனுக்கு பாராட்டுவிழா கல்முனையில் நடைபெற்றது.

இந்த விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் இவர் மேலும் தெரிவித்ததாவது:

கிழக்கில் யுத்தம் மற்றும் சுனாமிபோன்ற அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எஹெட் நிறுவனம் அளப்பரிய சேவைகளை ஆற்றியுள்ளது.

குறிப்பாக சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட பின்னர் நூற்றுக் கணக் கான அரச சார்பற்ற நிறுவனங் கள் இங்கு மக்கள் சேவைக்காக முன்வந்தபோதும், ஒரு சில நிறுவனங்களே தாம் வந்த நோக்கை நிறைவேற்றியுள்ளன.

அதிலும் கரித்தாஸ்-எஹெட் நிறுவனம் இனமத பேதங்களுக்கப்பால் முழுமையானசேவையை மக்களுக்கு வழங்கி முன்னுதாரணமாகத் திகழ்கின்றது. லஞ்சம், ஊழலற்ற நிறு வனமாகத் திகழும் இந்த நிறு வனத்துக்குக் கிடைக்கும் நிதி உதவிகள், அப்பழுக்கற்ற முறையில் மக்களுக்களவே முழுமையாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

சுனாமிக்குப் பின்னர் கல்முனை தமிழ் பிரதேச செயலகப் பிரிவில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக 819 நிரந்தர வீடுகளை எஹெட் நிறுவனத்தால் நிர்மாணித்து வழங்கப்பட்டுள்ளதுடன் அம்பாறை மாவட்டத்தில் இதேபோன்று 2600 வீடுகளும் பாதிக்கப்பட்ட மக்களுக்காக வழங்கப்பட்டுள்ளன. - என்றார். (ச-30)

# மயக்க மருந்து கொடுத்து திருட்டில் ஈடுபட்டு வந்தவர் கைது

கலஹா, நவ.19
மென்பானங்களில் மயக்க மாத்திரைகளைக் கலந்து பெண்களுக்கு பருகக்கொடுத்து அவர்கள் சுயநினைவை இழந்ததும், அவர்களிடமிருந்து நகைகளைக் அபகரித்து வந்தார் என்ற சந்தேகத்தின்பேரில் நபர் ஒருவரை கலஹா பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கலஹா, தெல்தொட்டவத்த வைத்தியசாலை வீதியைச் சேர்ந்த எஸ்.சிவகுமார் (வயது-37) என்பவரே இவ்வாறு கைதாகி நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இவர் இதேபோன்ற வேறொரு வழக்கில் நீதிமன்ற பிணையில் விடுதலை செய்யப்பட்டவர் எனவும், நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறியதால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கலஹா பொலிஸ் பொறுப்பதிகாரி ஆர். எம்.அபேகோனின் தலைமையில் மேலதிக விசாரணைகள் நடைபெறுகின்றன. (ச)

# ஆசிரிய இடமாற்ற கடிதங்கள் அனுப்பி வைப்பு

வலய ஆசிரிய ஆளணி சீராக்கம் என்ற அடிப்படையில் சம்மாந்துறை கல்வி வலயத்தில் அடுத்த வருடத்துக்கான ஆசிரியர் இடமாற்றக்கடிதங்கள் வலயக்கல்வி அலுவலகத்தால் இடமாற்றத்துக்கு தகுதியுடைய ஆசிரியர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளரின் EP/20/01/50/01 ஆம் இலக்க 31.10.2011 ஆம் திகதிக் கடிதம் சார்பாக 01.10.2011 ஆம் திகதி புதிய பாடசாலையில் செயற்படும் படியாக இந்த இடமாற்றக் கடிதங்களில் சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.கே.எம். மன்சூர் குறிப்பிட்டுள்ளார். (ச)

# 1000 பாடசாலை அபிவிருத்தித் திட்டத்துக்குள் லுணுகலை இராமகிருஷ்ணா இணைப்பு

கொழும்பு, நவ.19
ஜனாதிபதியின் ஆயிரம் பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் லுணுகலை ஸ்ரீ இராமகிருஷ்ணா தமிழ் வித்தியாலயமும் இணைக்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதியின் இணைப்புச் செயலாளரும், பசறைத் தேர்தல் தொகுதியின் பிரதான அமைப்பாளருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

1983 ஆம் ஆண்டு தீயிட்டுக் கொழுத்தப்பட்ட லுணுகலை ஸ்ரீ இராமகிருஷ்ணா தமிழ் வித்தியாலயம் கட்டம் கட்டமாக கட்டியெழுப்பப்பட்டது. தற்போது எனது முயற்சியால் ஆயிரம் பாடசாலைகள் வேலைத்திட்டத்தின் கீழ் கல்வி அமைச்சினால் சேர்க்கப்பட்டுள்ளது.

தற்போது இங்கு காணிப் பற்றாக்குறை நிலவுகின்ற நிலையில் சில விஷமிகள் பாடசாலைக்குள் அனுமதியின்றி உட்பிரவேசித்து காணி அபகரிப்பு நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர் -என்றார். (ச)

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
மற்றொருவரை நம்பி ஒப்படைத்த வேலை முடியாமல், அதை நீங்களே செய்ய நேரிடலாம். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் போகலாம். பழைய சம்பவம் ஒன்றை நினைத்துப் பார்த்து, புதிய விடயங்களில் ஈடுபடுவீர்கள். நண்பர்கள் அல்லது உறவினர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம்.

**இடபம்:**
நாடி வந்தவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல், உதவி செய்வீர்கள். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். பெண்கள் உடல் ரீதியான உபாதைகளுக்கு ஆள்படலாம். உறவினர் ஒருவர் உங்களின் பேச்சைக் கேட்காமல், ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்படலாம். மற்றவர்களுக்காகச் செலவு செய்யலாம்.

**மிதுனம்:**
உடன் பிறப்புக்கள் வழியில், நல்ல செய்திகளைக் கேட்கலாம். பல மணி நேரமாகும் என்று நினைத்த விடயம் ஒன்று, சில மணித்துளிகளில் முடிவுக்கு வரும். ஓய்வாக இருக்காமல் ஏதாவது வேலைகளைச் செய்து கொண்டிருப்பீர்கள். நீண்ட நாள் எண்ணங்கள், ஆசைகள் நிறைவேறும். பெண்களால் சந்தோஷமான அனுபவம் பெறலாம்.

**கடகம்:**
உடல் உபாதைகளைத் தவிர்க்க உணவு விடயங்களில் கவனம் அவசியம். உங்களின் சந்தேகம் ஒன்றை, மற்றவர்களிடம் யோசனை கேட்டு தீர்த்துக் கொள்வீர்கள். கேளிக்கை, கொண்டாட்ட விடயங்களில் நாட்டம் செல்லும். தனிமையில் இனிமை காண்பீர்கள். ஒருவர் கேட்ட பண உதவியை செய்ய முடியாமல், அவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம்.

**சிங்கம்:**
பதற்றம், படபடப்புடன் சில வேலைகளைச் செய்யலாம். கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். நீண்ட நாள் நண்பர்கள் சிலர் உங்களைத் தவறாகப் புரிந்து கொள்ளலாம். சில வேலைகளைத் தாமதமாகத் தொடங்கினாலும், சரியான நேரத்துக்கு முடிப்பீர்கள். உங்களிடம் கடன் வாங்கிய ஒருவர், அதைத் திருப்பிக் கொடுக்கலாம்.

**கன்னி:**
ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட வேலைகளைச் செய்வதால் எரிச்சல், சோம்பல் உண்டாகலாம். சில பொருள்களை வாங்கச் சென்று, பணப்பற்றாக் குறையால் வாங்காமல் திரும்பலாம். விருந்தினர்கள் வருகையால் உங்களின் வழக்கமான பணிகளில் தடை ஏற்படலாம்.

**துலாம்:**
மனதில் இனம்புரியாத சந்தோஷம் குடிகொள்ளும். குடும்பத்தில் ஏற்பட்ட சலசலப்புகள் நீங்கி, கலகலகப்பு அதிகரிக்கும். உறவினர்கள் உங்களின் கௌரவத்தை அதிகரிக்கும் வகையில் நடந்து கொள்வர். மனைவி, குழந்தைகளின் சின்ன, சின்ன ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். எதிர்பாராத பணவரவுகளைப் பெற வாய்ப்பு உண்டு.

**விருச்சிகம்:**
ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில், பண வரவுகளைப் பெறலாம். கடந்த காலத்தில் நழுவிப் போன வாய்ப்பு ஒன்று, மீண்டும் தேடி வரலாம். வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவர், உங்களைத் தொடர்பு கொண்டு முக்கிய விடயமாகப் பேசலாம். பெண்கள் தொடர்பான விடயங்களில், அதிக பரிவோடு நடந்து கொள்வீர்கள். பரபரப்பு உண்டாகும்.

**தனுசு:**
நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களுடன் தொலைபேசியில் பேசலாம். வாடகை வீட்டில் குடியிருப்போர் சில தண்டச் செலவுகளைச் சந்திக்கலாம். காலையில் செய்யாமல் விட்ட வேலை ஒன்றை மாலையில் செய்வீர்கள். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்கலாம். நண்பர் ஒருவர், தங்களின் அனுபவத்தை உங்களிடம் விவரிக்கலாம்.

**மகரம்:**
பேராசைகளைத் தவிர்க்க வேண்டிய நாள். குடும்பப் பெரியவர்களின் கோபத்திற்கு ஆள்படலாம். வாகனங்கள் வழியில் எதிர்பாராத செலவு நேரும். எளிதில் முடிந்து விடும் என நினைத்த காரியம் ஒன்றில், கடும் இழுபறிகளைச் சந்திக்கலாம். ஆசைப்பட்டு சில பொருள்களை வாங்கியும், அதில் திருப்தி இல்லாமல் போகலாம்.

**கும்பம்:**
மனதில் புதிய சிந்தனைகள் குடிகொள்ளும் நாள். உறவினர்கள் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய்வீர்கள். நாளை மேற்கொள்ள வேண்டிய வெளியூர் பயணங்களுக்காக, இன்றே முன்னேற்பாடு செய்வீர்கள். உங்களின் ஊக்கம், உற்சாகத்தை அதிகரிக்கும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்க நேரிடலாம்.

**மீனம்:**
பிள்ளைகள் விடயத்தில் விட்டுக் கொடுத்துச் செல்வீர்கள். எங்காவது வெளியில் செல்லும் போது, சௌகர்யமான வாகன வசதிகளைப் பெறலாம். வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். உங்களுக்கு உதவி செய்த ஒருவருக்கு, பதில் உதவி செய்வீர்கள். அயலாருடன் சுக, துக்கங்களைப் பேசி மகிழ்வீர்கள்.

# நீதித்துறையி
# இல
# மச

முப்பது ஆண்டுகளாக இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தின் விளைவாக ஏற்பட்ட மாற்றங்களால் நாடு சிதைவடைந்துள்ளது. அதன் நிறுவனங்கள் பெருமளவில் பலவீனமாக்கப்பட்டுள்ளன.

இலங்கை சுதந்திரமடைந்ததில் இருந்து மேற்கொள்ளப்பட்ட சிறந்த சாதனைகள் சில தூக்கி வீசப்பட்டுள்ளன.

இலவச சுகாதார பராமரிப்பு சேவை மற்றும் முதலாவது பட்டப்படிப்பு வரையான இலவசக் கல்வி முறைமை ஆகியவற்றை வழங்குகின்ற இலங்கையின் சமூக ஆதரவு முறைமையைக் கற்றுக் கொள்வதற்காக 1960 களில் சிங்கப்பூர், தென்கொரியா போன்ற கிழக்காசிய நாடுகள், இலங்கைக்குச் சென்றிருந்தன.

இவ்வாறான கிழக்காசிய நாடுகள் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட சமூக ஆதரவு முறைமையை ஒத்த முறைமைகளைத் தமது நாடுகளில் அறிமுகப்படுத்தி, தற்போது முன்னேற்றம் கண்டுள்ளன.

அதேவேளையில், இலங்கையின் சுகாதார மற்றும் கல்வி முறைமைகள் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளன.

இன்று, பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக தனியார் பாடசாலைகளை நோக்கிச் செல்கின்றனர்.

இதனால் அரச பாடசாலைகளில் வழங்கப்படும் கல்வித் தரம் வீழ்ச்சியடையும் ஆபத்தைச் சந்தித்துள்ளது.

பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்விக் கூடங்கள் போன்றவற்றில் இடம்பெறும் அரசியல் தலையீடுகளால், கல்வி மற்றும் நிர்வாக செயற்பாடுகள் ஆழமாகப் பாதிக்கப்படுகின்றன.

ஆனால் மிக மோசமான சீரழிவுகள் நாட்டிலுள்ள ஜனநாயக அமைப்புக்களில் இடம்பெறுகின்றன.

பல ஆண்டுகளாக பல்கலாசார, பல் மதங்களைக் கொண்ட, நவீன ஜனநாயக நாடாக விளங்கிய இலங்கை தற்போது சீர் குலைந்து போயுள்ளது. இதனால் நீதித்துறை மீது நம்பிக்கையிழப்பு ஏற்பட்டுள்ளது. சிறுபான்மையினர் தாம் இடர்களை எதிர்நோக்குவதாகக் கருதுகின்ற, மிகக் குறைந்த ஜனநாயக சுதந்திரத்தை வழங்கும் ஒரு நாடாக இலங்கை மாறியுள்ளது.

எடுத்துக் காட்டாக, முன்னர் சிறப்பித்துப் போற்றப்பட்ட இலங்கைப் பொலிஸார் 1970 களில் அரசியல் தலையீடு காரணமாக நிறுவனமயப்படுத்தப்பட்டதில் இருந்து இதன் நற்பெயரும் பாதிப்படையத் தொடங்கியது.

இலங்கைப் பொலிஸார் தமக்கான பதவி உயர்வைப் பெற்றுக் கொள்வதற்காக அரச கட்சியைச் சேர்ந்த அரசியல்வாதிகளிடம் பரிந்துரைக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டதால் அரசியல் தலையீடு மேலும் வெற்றியைப் பெற்றுக் கொண்டது.

இலங்கை அரசு தனக்கெதிராக எழுந்த தமிழ்ப் புலிப் பிரிவினைவாதிகளுக்கு எதிராகப் போராட வேண்டிய தேவை ஏற்பட்ட போது அது உள்நாட்டுப் போராக மாறியது.

இதனால், விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இலங்கையின் சில பிரதேசங்களைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து, அதன் மூலம் ஏக கலாசாரத்தைக் கொண்ட இராணுவ மயமாக்கப்பட்ட அரசு ஒன்றை உருவாக்கிக் கொண்டார். இங்கு வாழும் ஒவ்வொரு

> **பல ஆண்டுகளாகப் பல்கலாசார, பல் மதங்களைக் கொண்ட, நவீன ஜனநாயக நாடாக விளங்கிய இலங்கை தற்போது சீர்குலைந்து போயுள்ளது. இதனால் நீதித்துறை மீது நம்பிக்கையிழப்பு ஏற்பட்டுள்ளது. சிறுபான்மையினர் தாம் இடர்களை எதிர்நோக்குவதாகக் கருதுகின்ற, மிகக் குறைந்த ஜனநாயக சுதந்திரத்தை வழங்கும் ஒரு நாடாக இலங்கை மாறியுள்ளது.**


பாரத லக்ஸ்மனின் இறுதி அஞ்சலி

குடிமகனும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் ஆட்சிக்குக் கட்டுப்பட வேண்டியிருந்தது.

இந்தத் தீவிரவாத அமைப்பானது பின்னர் யுத்த களத்தில் தோற்கடிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளுடன் யுத்தத்தில் ஈடுபட்ட, இலங்கையில் ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு அரசிடமும், புலிகளுடன் போரிடுதல் அல்லது சமரசம் செய்தல் என்ற இரு தெரிவுகள் இருந்தன.

சமரசப் பேச்சுகள் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும், அவற்றை முறியடிப்பதற்கான முயற்சியில் புலிகள் ஈடுபடுவர்.

ஆனால் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தற்போதைய அரசு சமரச முயற்சியை மேற்கொள்ளாது புலிகளை யுத்தத்தின் மூலம் வெற்றிகரமாக தோற்கடித்துள்ளது.


இலங்கையில் யுத்தம் மேற்கொள்ளப்பட்ட காலப் பகுதியில் ஊடக சுதந்திரம் என்பது மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. ஒவ்வொருவரும் யுத்தத்துக்கு ஆதரவளிக்க வேண்டும் என அழுத்தம் கொடுக்கப்பட்டது.

அரசின் பொருளாதாரக் கொள்கைகளை விமர்சிப்பவர்கள் அல்லது ஊழல் மோசடி தொடர்பான தகவல்களை வெளிப்படுத்துபவர்கள் நாட்டின் துரோகிகளாகக் கருதப்பட்டனர்.

இலங்கை அரசியலில் மிக முக்கிய பங்கு வகித்த சிங்கள மேலாதிக்கவாதிகள் நாட்டின் மத்திய அதிகாரத்தைத் தமது கைகளில் எடுத்துக் கொண்டனர்.

# யில் நம்பிக்கையிழந்த ங்கை க்கள்

மலேசியாவைத் தளமாகக் கொண்ட நியூ ஸ்ரேய்ட் ரைம்ஸ் ஊடகத்தில் அர்ஜுனா ரணவான எழுதிய கட்டுரையின் தமிழாக்கம்.



தற்போது இலங்கையில் யுத்தம் ஓய்ந்து விட்டது. ஆனால் ஊடகங்கள் மீதான அடக்குமுறை தொடர்ந்த வண்ணமேயுள்ளது.

அத்துடன் அரசியல் விடயங்கள் தொடர்பாக வெளிப்படையான கலந்துரையாடல்களை மேற்கொள்ள முடியாமல் உள்ளது.

தற்போது இலங்கையில் சமாதானம் ஏற்பட்டுள்ள போதிலும் பலம் பொருந்திய 400,000 இராணுவப்படை மட்டுமே இங்கே மிகப் பெரியளவில் எஞ்சியுள்ள ஒன்றாக உள்ளது.

அதாவது ஒவ்வொரு 50 இலங்கையருக்கும் ஓர் ஆயுதம் தரித்த இராணுவ வீரன் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் இலங்கையில் பாதாள உலகக் கும்பல்கள் அதிகளவில் செயற்படுகின்றனர். இதனால் ஆயுதங்களே இந்த நாட்டைக் கட்டுப்படுத்துவதாக உள்ளன.

இந்தப் பாதாள உலகக் குழுக்கள் ஆயுததாரிகளால் தலைமை தாங்கப்படுகின்றன. இலங்கை இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களே இந்தக் குழுக்களில் அதிகம் உள்ளனர்.

இலங்கையில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவம் மூலம் இங்கு நடைமுறையிலிருந்த நிறுவகக் கட்டமைப்புக்கள் சிதைவடைந்துள்ளமை மிகத் தெளிவாகியுள்ளது.

இலங்கையின் முன்னணி அரச சார் தொழிற் சங்கப் பிரதிநிதியும், இலங்கை ஜனாதிபதியின் ஆலோசகருமான பாரத லக்ஸ்மன் பிறேமச்சந்திர கொலை செய்யப்பட்டமை தொடர்பாக ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான துமிந்த சில்வாவின் மெய்ப்பாதுகாவலர் ஒருவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ள நிலையில் இதனை இலங்கை அரசு எவ்வாறு கையாள முயற்சிக்கின்றது என்பதை மக்கள் தற்போது உன்னிப்பாகக் கவனித்து வருகின்றனர்.

கடந்த மாதம் இடம்பெற்ற மாநகரசபைத் தேர்தலின் போது இலங்கைப் பொலிஸாருக்கும் இவர்களுக்குமிடையே பொது இடத்தில் மோதல் இடம்பெற்றிருந்தது. இவ்விருவரதும் மெய்ப் பாதுகாவலர்களுக்கிடையில் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

ஆளும் அரச தரப்புக்குள் இடம்பெற்ற இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டவர்களைக் கைது செய்வதா அல்லது வேண்டாமா என்பது தொடர்பாக இலங்கைப் பொலிஸாரால் தீர்மானிக்க முடியவில்லை.

இதில் தலைக்குள் துப்பாக்கி ரவை ஊடறுத்துள்ளதால் அதனை அகற்றுவதற்கான சிகிச்சையைப் பெற்றுக் கொள்வதற்காக துமிந்த சில்வா, சிங்கப்பூருக்கும் கொண்டு செல்லப்பட்டார்.

கவலை, கோபம், வேதனை போன்ற உணர்வுகளைச் சுமந்து நிற்கும் இலங்கையர்கள் கடந்த நாற்பது ஆண்டுகளைத் திரும்பிப் பார்ப்பதுடன், மீண்டும் இலங்கையை எவ்வாறு பழைய நிலைக்குக் கொண்டு வரமுடியும் எனவும் சிந்திக்கின்றார்கள்.

இதுவே இலங்கையர்களின் வசந்த காலமாக அமையலாம்.

*(நன்றி: புதினப்பலகை)*

## துக்கமில்லாது இருத்தலே உண்மையான ஞானம்



ஒரு பணக்காரர் ஐந்து லட்சம் நட்டம் என்று புலம்பிக்கொண்டிருந்தார். இவர் ஏன் இப்படிப் புலம்புகிறார் என்று அவரின் நண்பர் கவலைப்பட்டு அவர் மனைவியிடம் விசாரித்தார், அதற்கு அந்த அம்மா சிரித்தபடி "அவர் ஒரு வைத்தியம் உளறுவார் அதை பெரிதாக எடுத்துக் கொள்ளாதீர்கள். இந்த மாதம் ஒரு வியாபாரத்தில் ஒருகோடிலாபம் வரும். என்று சொல்லிக்கொண்டிருந்தார். கடைசியில் 95 லட்சம் ரூபாதான் கிடைத்தது. அன்றிலிருந்து இப்படித்தான் சரியாகச் சாப்பிடுவதில்லை, தூங்குவதுமில்லை. ஐந்து லட்சம் நட்டம், ஐந்து லட்சம் நட்டம் என்று புலம்பிக்கொண்டிருப்பார்.

ஒருகோடி எதிர் பார்த்த லாபத்துக்கு ஐந்து லட்சம் போனால் என்ன என்பது இந்தப் வைத்தியத்துக்குப் புரியவில்லை என்கிறார். இவர்கள் தான் இன்று உலகின் பெரும்பான்மை மக்கள்.

நன்றாகப் புரிந்துகொள்ளுங்கள் எமக்கு முன்பு மகிழ்ச்சியும் வருத்தமும் வைக்கப்பட்டிருக்கின்றன. நாம்தான் ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டும். எம்மில் பலர் மகிழ்ச்சியைத் தேர்ந்தெடுக்கத் தவறுகின்றோம். அவசர அவசரமாகத் துயரத்தைத் தேர்வு செய்கிறோம். இதுதான் ஆழமான உண்மை. ஆனால் ஓயாமல் உலகைக் குறை சொல்கிறோம். எதிலும் மகிழ்ச்சியைத் தேர்ந்தெடுப்பது ஒருவகைப் பக்குவம். ஆனால் மேலைநாட்டு சிந்தனை வேறு விதமாக இருக்கிறது. மனிதனால் ஆனந்தமாகவே இருக்க முடியாது வேண்டுமானால் குறைந்த பட்சம் துக்கத்துடன் இருக்க முயற்சி செய்யலாம். அதுதான் சாத்தியம் என்கிறார் சிக்மன் பிறொயிட் என்கிற உலகப் புகழ்பெற்ற உளவியல் மேதை. இந்தக் கருத்தை அதிகம் வற்புறுத்தினார். இதை ஒட்டிய ஒரு நகைச்சுவைத் துணுக்கு ஒன்றைக் கூறுகிறார்கள்.

ஒரு மனோதத்துவ நிபுணர் மற்றொரு மனோதத்துவ மருத்துவரிடம் ஆலோசனைகளும், அதற்கான மருத்துவமும் பெற்றுக் கொள்வது வழக்கம். அப்படிப் பெற்றுக் கொண்டு ஒரு முறை அவர் வெளிநாட்டுக்குச் சுற்றுலா சென்றிருந்தபோது காரணமே இல்லாமல் அவர் மனோதத்துவ மருத்துவரிடம் "நான் ஏன் இவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கின்றேன் என்று தெரியவில்லை இதுவே ஏதும் உடல் பிரச்சினையின் அடையாளமோ" என்று கேட்டார் "ஏதோ தவறு நடந்திருக்கிறது உடனடியாக மருந்துகள் அனுப்புகிறேன்; சரியாகிவிடும் என்று தொலைபேசியில் பதில் வந்தது.


இந்திய ஞானத்தின் பார்வையோ வேறு; இதைவிளக்க ஒரு சுவையான கதை;

ஒரு மரத்தடியில் மோட்சம் வேண்டி துறவி ஒருவர் தவம் செய்து கொண்டிருந்தார். அவருக்கு ஆடு மாடுகள் மேய்க்கும் சிறுவன் ஒருவன் தன்னால் இயன்ற உதவிகள் செய்து கொண்டிருந்தான். ஒருநாள் இருவர் முன்பும் நாரத மகரிஷி தோன்றினாராம். துறவி கண்களில் நீர் மல்க "எனக்கு எப்போது முக்தி கிடைக்கும்" என்று கேட்டாராம். நாரதர் சிறிது யோசித்துவிட்டு "இந்தப் பிறவியில் இல்லை... இன்னும் இரண்டு பிறவிகள்" என்றாராம். "ஐயோ.. இன்னும் இரண்டு பிறவியா.. என்று துடி துடிக்க ஆரம்பித்தார் துறவி. உடனே ஆடு மேய்க்கும் சிறுவனும் நாரதரை வணங்கி " எனக்கு எப்போது முக்தி கிடைக்கும்" என்று கேட்டான். நாரதரோ சிறிதும் யோசிக்காது "இதோ அந்த மரத்தில் உள்ள எல்லா இலைகளையும் எண்ணிக்கொள். அத்தனை பிறவிகள் உனக்கு. அந்த இலைகள் எல்லாம் என்றாவது இல்லாமல் போகும்... அதன் பிறகே முக்தி" என்றார்.

ஆனால் அடுத்த நிமிடம் அவன் குதிக்கத் தொடங்கினான் "ஆஹா..... எனக்கும் முக்தி... எனக்கும் முக்தி... நாரதர் சொல்லிவிட்டார்.... நிச்சயம் எனக்கு முக்தி உண்டு" என்று ஆனந்தக் கூத்தாடினார். துறவி திகைத்தார்... நாரதரும் திகைத்தார்... ஆனால் அடுத்த நிமிடமே ஒரு பெரிய சூறாவளி வீசியது... மரத்தின் சகல இலைகளும் கொட்டிய மரம் மொட்டையாக நின்றது. வானத்தில் இருந்து ஒரு பொன் விமானம் வந்து சிறுவனை மோட்சத்திற்கு ஏற்றிச் சென்றது. துறவி ஆச்சரியத்துடன் நாரதரைக் கேட்டார். "ஞானமில்லாத அவன் எப்படி மோட்சம் போக முடியும்."

"துக்கமில்லாதிருத்தலே உண்மை ஞானம். இரண்டு பிறவி என்றதும் துக்கத்தை நீர் தேர்ந்தெடுத்தீர். அவன் இத்தனை இலைகளும் அத்தனை பிறவிகள் என்றாலும் அதில் உள்ள ஆனந்தத்தைத் தேர்ந்தெடுத்தான். ஆனந்தமே மோட்சம்... துக்கமே நரகம்.. அவன் ஆனந்தத்தில் அத்தனை பிறவிகளும் ஒரே கணத்தில் முடிந்து விட்டன. உமது துக்கம் உம்மை மேலும் துன்பப்பட வைத்துவிட்டது. துக்கமே அஞ்ஞானம். ஆனந்தமே பெருஞானம்" என்று சொல்லியபடி நாரதர் பறந்துவிட்டார்.

**சுகி. சிவம்**



முல்லைத்தீவு ஒலுமடு தமிழ் வித்தியாலயத்தில் இடம்பெற்ற மரம் நடுகை நிகழ்வில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்

# மாணவர்களை நற்பிரஜையாக்கும் நோக்கில் சமயக் கோட்பாடுகள் கற்பிக்கப்படுகின்றன

## வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் உரை

சுன்னாகம்,நவ.21

சமய விழுமியக் கருத்துக்கள் மூலம் மாணவர்களை நற்பிரஜைகளாக்கும் நோக்கிலேயே எமது நாட்டுப் பாட விதானத்தில் சமயக்கல்வி சேர்க்கப்பட்டு கல்வியூட்டப்படுகிறது.

இவ்வாறு தெரிவித்தார் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன். ஜி.ஐ.இசற் நிறுவனத்தின் அனுசரணையுடன் வலிகாமம் கல்வி வலயத்தால் நடத்தப்பட்ட பன்மைத்துவ கலாசாரம் ஊடாக சமாதானம் என்ற தொனிப் பொருளிலான போட்டிகளின் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விழா வலிகாமம் வலயத்தின் கல்வி அபிவிருத்திக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி காயத்திரி கஜபதி தலைமையில் கடந்த செவ்வாயன்று இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

அங்கு உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலகில் உள்ள அநேகமான நாடுகளில் சமயக் கல்வி பாடத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. ஆனால் இலங்கையில் சமயக் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. சமய, சமத்துவம் பேணப்படுவதற்கும், ஒவ்வொரு மதத்திலும் காணப்படும் விழுமிய கருத்துக்களை மாணவர்களுக்கு ஊட்டுவதற்கும் இக்கல்வி மூலம் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

மத ரீதியில் சிவனொளிபாத மலை, கதிர்காமம், மடுமாதா கோயில் என எல்லா மதத்தினரும் சென்று வழிபடும் ஒருமைப்பாட்டு நிலை காணப்படுகிறது. இனரீதியாகச் சமாதானத்தை எட்டுவதில் சில இடர்ப்பாடுகள் உள்ளன. இருப்பினும் பன்மைத்துவ கலாசாரத்தின் பரிமாணங்களைப் புரிய வைத்துச் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதே ஜி.ஐ.இசற் நிறுவனத்தின் அவாவாகும்.

அதற்காகவே போட்டிகள் வைக்கப்பட்டு மாணவர்களுக்கு சமாதானத்தின் முக்கியத்துவம் எடுத்து உணர்த்தப்படுகிறது.- என்றார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.நாகராஜா கலந்து கொண்டார். பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை மாணவிகளின் கலைநிகழ்ச்சியும் இடம்பெற்றது. (ம- 38)

# பிள்ளைகளின் மாணவப் பருவத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்

## சாவகச்சேரி வைத்தியசாலை பொறுப்பதிகாரி

தென்மராட்சி, நவ.21

பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் மாணவப்பருவத்தில் போதிய கவனம் செலுத்தாமையே பல்வேறு கலாசார சீரழிவுகள் இடம் பெற்று வருகின்றமைக்குக் காரணமாகிறது.

தமது பிள்ளைகள் பாடசாலைக்கும் தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் போய் வந்தால் சரியென பெற்றோர் நினைப்பது மாணவர்களை தவறான வழிக்கு கொண்டு செல்கிறது. அண்மைக் காலமாக மாணவர்களின் போதைப் பொருள் பாவனை, பாலியல் செயற்பாடு ஆகியவற்றில் ஈடுபடுவதற்கு பெற்றோரின் போதிய கவனிப்புகள் இன்மையே காரணமாகிறது.

இவ்வாறு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக் கூட்டத்தில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், முன்னைய கால மாணவர்கள் தமது ஓய்வு நேரத்தில் வாசிகசாலைகள், கோயில்கள், விளையாட்டுக்கள் ஆகியவற்றுக்கு சென்றார்கள். ஆனால் இன்றைய மாணவர்கள் இன்ரநெற் கிளப், ஜிம் கிளப் போன்றவற்றுக்குச் செல்கின்றனர்.

அத்துடன் பாடசாலை, தனியார் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றுக்குச் செல்லும் மாணவர்கள் அவை முடிந்ததும் வீடுகளுக்குச் செல்லாமல் வீதிகளில் கூட்டம் கூட்டமாக நிற்பதும் அவர்களை தவறான வழிக்குக்கொண்டு சென்றுவிடும்.

மாணவர்களின் சமூகச் சீர்கேட்டுக்கு தொலைக்காட்சியும் காரணமாக உள்ளது. தொலைக்காட்சியில் வரும் காட்சிகள் போல தாங்களும் மேற்கொள்ள மாணவர்கள் முயல்வதும் சிறு குற்றச் செயல்களாக மாறிவிடுகிறது.

மாணவர்கள் ஆபாசப் படங்கள் பார்ப்பது, அதை பரீட்சார்த்தமாக நடைமுறைப்படுத்துவது போன்றவற்றால் மாணவிகள் பலர் கர்ப்பமடையும் நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

தமது பிள்ளைகளின் கல்வியில் மட்டுமல்ல அவர்களின் அன்றாட செயல்களிலும் அக்கறை செலுத்தவேண்டும். இல்லையேல் அவர்கள் கல்வியையும் இழந்து எதிர்காலத்தையும் இழக்க பெற்றோராகிய நீங்களே காரணமாக அமைந்து விடுவீர்கள்.

பிள்ளையின் கல்வியில் எந்தளவு அக்கறை எடுக்கிறீர்களோ அதுவே தேவை. அவர்களின் ஒவ்வொரு செயற்பாட்டிலும் அக்கறை எடுத்து எதிர்காலத்தில் சிறந்த பிரஜைகளாக மாற்றும் பொறுப்பு உங்களுடையதே.- என்றார். (ம-207)

## வாய்ப்பாட்டு மனனப் போட்டி முடிவுகள்

வலி.வடக்கு, நவ.21

உடுவில் கல்விக் கோட்ட ஆரம்பப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற வாய்ப்பாட்டு மனனப் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விவரம் வருமாறு:

தரம்- 3 - வி.சௌமியா- ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்கவித்தியாலயம், கு.மதுஷா- மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, அ.துவாரகா- இணுவில் மத்திய கல்லூரி.

தரம்-4- இ.மேனகை- சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம், ரா.பவுலினி - உடுவில் மகளிர் கல்லூரி, கு.தயாளரூபினி- இணுவில் மத்திய கல்லூரி.

தரம்- 5 - ம. ரம்மியா- சுன்னாகம் ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலை, த.அபிலாசினி- மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, தே.துளசிகா- இணுவில் மத்திய க்ல்லூரி. (ம- 86)

## போட்டி வெற்றியாளர்



அளவெட்டி அருணோதயாக் கல்லூரியைச் சேர்ந்த உதயகுமார் கம்சாயினி தரம்-3 கணித வாய்ப்பாடு மனனப் போட்டியில் மாகாண மட்டத்தில் முதலிடத்தையும் சி.பிரியற் நுண்செய்கையில் 3 ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர். (ம)

## விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், நவ.21

யாழ்ப்பாணம் தொழில் நுட்பவியல் கல்லூரியால் 2012 ஆம் கல்வியாண்டுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி சாதாரண தர கல்வித் தகைமையுடன் விண்ணப்பிக்க முடியும்.

இந்தக் கல்வியாண்டில் எந்த தரவியல் தொழில்நுட்பவியலாளர் கற்கை நெறி, இயந்திரவியல் கைப்பணியாளர் கற்கைநெறி, வர்த்தகக் கற்கை நெறி, பொது மற்றும் விசே- கற்கை நெறிகளுக்கு முழு நேரமாகவும் பகுதி நேரமாகவும் விண்ணபிக்க முடியும்.

தகுதியுடைய விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பிக்கலாம். (ம- 313)

# கரைச்சி கலை இலக்கியப் போட்டி முடிவுகள்

கரைச்சிப் பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்ட கலை இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் வெளியாகியுள்ளன.

கலைவாணி நாடக மன்றம்- சிந்துநடைக் கூத்து- முதலாமிடம்- கோணாவில், முத்துமாரி அம்மன் நாடக மன்றம்- சிந்துநடைக் கூத்து- இரண்டாமிடம்- திருநகர், சிவப்பிரகாசம் கவிப்பிரியா- கவிதைப் பாடல்- முதலாமிடம்- கிளி/ புனித திரேசா பெண்கள் கல்லூரி, சண்முகராசா கோடீஸ்வரன் (கீழ்ப்பிரிவு) சிறுகதை - முதலாமிடம்- றோயல் கலா மன்றம், க.அனுசியா (கீழ்ப் பிரிவு)- சிறுகதை- இரண்டாமிடம்- றோயல் கலாமன்றம், ஜெயசேகரம்சத்தியப்பிரியங்கா (கீழ்ப்பிரிவு)- சிறுகதை - மூன்றாமிடம்- றோயல் கலா மன்றம்,

சிவ.ஏழுமலை மூவேந்தன்- பாடலாக்கம் - முதலாமிடம்- மலையாளபுரம், பூநகர் கவிப்பிரியா- பாடலாக்கம்- இரண்டாமிடம்- கிளி/ புனித திரேசா பெண்கள் கல்லூரி, திருமதி சூரிய மூர்த்தி இராசேந்திரம்- பாடலாக்கம் - மூன்றாமிடம்- சிவன் வீதி உருத்திரபுரம்.

இளையதம்பி நடராசா (மேற்பிரிவு) - சிறுகதை- முதலாமிடம்- திருநகர், சிவ.ஏழுமலை மூவேந்தன்- சிறுகதை- இரண்டாமிடம்- மலையாளபுரம், செல்வி கவிப்பிரியா சிவப்பிரகாசம்- கவிதை - முதலாமிடம்- புனித திரேசா பெண்கள் கல்லூரி, மாலினி ரவிச்சந்திரன்- கவிதை- இரண்டாமிடம்- கிளி/ உருத்திரபுரம் மகா வித்தியாலயம், இ.சூரியகுமாரி- கவிதை- மூன்றாமிடம்- சிவன் வீதி, உருத்திரபுரம்.

கிளி/ இந்துக் கல்லூரி- சிந்துநடைக்கூத்து- முதலாமிடம்- உருத்திரபுரம், ஞ.ரஜீந்தன் (கீழ்ப்பிரிவு)- சித்திரம்- முதலாமிடம்- உருத்திரபுரம் மகா வித்தியாலயம், வி.ஹர்சாந் (கீழ்ப்பிரிவு) - சித்திரம்- இரண்டாமிடம்- கிளி/ பற்றிமா றோ.மகா வித்தியாலயம்., ஞ. சுரேந்திரன் (கீழ்ப்பிரிவு) - சித்திரம்- மூன்றாமிடம்- கிளி/ உருத்திரபுரம் மகா வித்தியாலயம், சஞ்ஜீபன் (மேற்பிரிவு) - சித்திரம்- முதலாமிடம்- கிளி/ புனித பற்றிமா மகா வித்தி., சங்கீர்த்தனா (மேற்பிரிவு)- சித்திரம்- இரண்டாமிடம்- கிளி/ புனித திரேசா பெண்கள் கல்லூரி, மதுசனன் (மேற்பிரிவு) - சித்திரம்- மூன்றாமிடம்- கிளி/ மகா வித்தியாலயம். (தொடரும்)

# அதிக வருவாய் தரும் பனம் பொருள் உற்பத்தி



40 ஆண்டுகளுக்கு முன்பு நெடுந்தீவில் பனம்பொருள் உற்பத்திக்கு பெரும் மவுசு காணப்பட்டது. பனாட்டு, ஒடியல், புழுக்கொடியல் என உணவுப் பொருள்களும் பாய், கடகம், பெட்டி, விளையாட்டுப் பொருள்களென பனை ஓலையிலும் நிறையவே உற்பத்திகள் செய்யப்பட்டன. அவை அனைத்துமே வெளியிடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதுடன் வெளியில் இருந்து வரும் உறவினர்களுக்கும் தாராளமாக வழங்கப்பட்டன.

அதிகாலை நான்கு மணிக்கு முன்னரே எழுந்து விழுந்த பனங்காயை எடுப்பதற்காகப் போட்டிபோட்டு ஆளாய் பறக்கும் மக்கள் இப்போது அந்த நிலையில் இல்லை. பனங்காய் எடுப்பதில் இன்று போட்டியும் கிடையாது. பனம் பண்டங்களைப் பயன்படுத்தி திடகாத்திரமாக நோய் நொடியின்றி வாழ்ந்தோம் என்று பெருமைப்பட இன்று இங்கு ஒருவருமே கிடையாது. இடைக்காலத்தில் ஒரு சிலரைத் தவிர பனம்பொருள்களை உற்பத்தி செய்யும் நாட்டமற்றவர்களாகவே பிந்திய தலைமுறை இருந்து வந்தது.

இன்று ஓரளவுக்கு நிலைமை மாறுகிறது பனம் பொருள் அபிவிருத்திச் சபை நெடுந்தீவு மேற்குப் பகுதியில் ஒரு கிளையை ஆரம்பித்துள்ளது. அங்கு இருபது யுவதிகள் வரை பயிற்சி பெற்றுள்ளனர். நிலையம் அமைந்துள்ள இடம் தூரம் என்பதால் மத்தி கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த யுவதிகளுக்கு வாய்ப்புக் கிட்டவில்லை. இந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களும் பயிற்சி பெறக் கூடிய வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் விடுவிக்கப்படுகிறது.

2010 இல் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிலையத்தில் இந்த ஒரு ஆண்டுக்குள்ளேயே பெரும் பயன் கிடைத்துள்ளது.

தற்சமயம் நிலையம் அமைந்துள்ள காணியில் காணப்படும் பனை வளங்களின் மூலம் ரூபா 7 லட்சம் பெறுமதியான புழுக்கொடியல்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இரண்டு மாதத்தில் நூற்றி ஐம்பது கிலோ பனாட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 10 ஆயிரம் பனம் விதைகள் பெறப்பட்டுள்ளன. இதில் 5 ஆயிரம் விதைகள் நெடுந்தீவில் நடுகை செய்வதற்காக உதவி அரச அதிபர் பணிமனைக்கு வழங்கப்படுகிறது.

நெடுந்தீவில் பன்னவேலை ஆசிரியை இல்லை பயிற்சி பெற்றவர்கள் தமது ஒத்துழைப்பைச் சபைக்கு வழங்கும் பட்சத்தில் பயிற்சியாளர்களில் இருந்தே ஒரு ஆசிரியையை நியமிக்கக் கூடியதாக இருக்கும் என்பதும் பொதுவாகக் கூறப்பட்டது.

பனம் கருப்பணியைப் பெற்றுப் பனங்கட்டி உற்பத்தியை மேற்கொள்ள முயன்ற போதும் கருப்பணி கிடைக்காததால் அந்த நோக்கம் நிறைவுறவில்லை.

பனங்கழி அடைக்கும் தொழில் சுகாதார முறையிலும் வெற்றிகரமாகவும் இடம் பெறுகிறது. ஏனைய பகுதிகளை விட இங்கு அடைக்கப்படும் கழி மிகவும் சிறந்ததாக உள்ளது எனக் கூறப்படுகின்றது.

ஒரு பனங்காயை ஐந்து ரூபாவுக்குக் கொள்வனவு செய்கிறது. கழியை எடுத்ததும் விதைகளைத் திருப்பித் தருவதாக அறிவித்திருந்தும் மக்கள் அந்தக் கோரிக்கையைக் கணக்கில் எடுத்ததாக இல்லை. தற்போது தென்பகுதி மக்களின் வருகையை அடுத்துப் பனம் பொருள்களுக்கு அதிக வரவேற்புக் கிட்டியுள்ளது.

நிலையத்தின் செயற்பாடுகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கி உள்ளூரின் மேம்பாட்டுக்கு உதவுவதுதான் மக்கள் தமது கிராமத்துக்கு ஆற்ற வேண்டிய பங்களிப்பு. சங்கங்களை எடுத்துக் கொண்டால் இந்த நிலை இங்கு இல்லை என எண்ணத் தோன்றுகின்றது.

வீட்டுக்கு இடையூறாக இருக்கும் பனைகளைத் தறிக்க சபையின் அனுமதியைப் பெற வேண்டும். ஒரு பனைக்கு கட்டணமாக 200 ரூபா அறவிடப்படுகிறது. விற்பனை செய்யப்பட்ட சம்பவங்களும் நெடுந்தீவில் உள்ளன.

ஒத்துழைப்புக் குறைந்த போதும் நிலையம் தனது நோக்கத்தை நல்ல முறையில் முன்னெடுத்து பனம் பொருள் அபிவிருத்தித் துறையில் கூடுதல் பயன்களை எட்டத் துடிகின்றது.

நிலையத்தில் கிணறு வசதிகள் இல்லை. மழை பெய்யும் போது நிலையம் வெள்ளத்தில் மூழ்கிக் கொள்கிறது. பனங்கழி எடுப்பதற்குப் புதிய இயந்திரம் தேவை. மின்சார வசதிகள் இங்கு இல்லை.

சுமார் இரண்டு லட்சம் பனைகளைக் கொண்ட தீவின் முக்கிய பயிரினம் இன்றைய தலைமுறையின் அசட்டையீனத்துக்கு உட்படுத்தப்பட்டால் தீவின் பாதுகாப்பும் பொருள் வளமும் வருவாயும் குன்றிப் போய்விடலாம்.

இப்போது நெடுந்தீவுக்கு உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது. பனம் பொருள்களை மக்கள் உற்பத்தி செய்து நிலையத்துக்கு வழங்கினால் துறைமுகத்தில் ஒரு கடையையே ஆரம்பிக்கலாம். அக்கறை எடுப்பார்களா?

## கிளி/ புனித திரேசா பெண்கள் கல்லூரி
## தரம் - 05 புலமைப் பரிசில் பாராட்டு விழா - 2011.11.21



**முதல் வரிசையில் சித்தியடைந்தோர் : இடமிருந்து வலம்.** க.பிரவின் -163, க. கீதசஞ்சாரன் 159, தி.அபிவர்ணா 154, தி.துவாரகா 177, ர.மதுசா 152, பு.கஜானா 155, மு.மேனகா 152, வி.சஜானி 161, கே.துவர்ணா 159, ப.பானுஜன் 154, இ.அபிஷேன் 175

**இரண்டாவது வரிசையில் இடமிருந்து வலம் - 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர்.**

வி.அபிஜா, ச.பௌசிகன், ச.தனுஸ்காந், மு.டிலக்ஷன், ஜெ.கவிப்பிரியன், பா.கிஜோக்குமார், ம.சுஜீவன், பா.மிதுலா.

**மூன்றாம் வரிசையில் இடமிருந்து வலம்.**

ஸ்ரீ. கவிசாளினி, க.றஜிதா, து.கஜன், கோ.கிஜோஜிகன், பு.சஞ்சிதன், த.ஜிந்துஜன், ந.தமிழவன், மு.பிரியங்கன், ர.மிதுசா, ஸ்ரீ. வேதிகா, பூ.கோகிலவதனி, இ.மிதுனா, பா.பாநிலா, சு.துலக்சி, கோ.விதுசனா, கி.வானுஜா, ம.கயலினி, சு.தியானி.

**இவர்களுடன் இடமிருந்து வலம்**

ஆசிரியர்கள் : செ.திலக், செல்வி இ.சசியோகா, திருமதி து.ஜெயலலிதா( உபஅதிபர்), திருமதி ஜெயந்தி தனபாலசிங்கம்( அதிபர்), செல்வி சி.கவிப்பிரியா( பகுதித் தலைவர்), திருமதி நி. கரோலின் (ஆசிரியர்) இவர்கள் அனைவரையும் பாடசாலைச் சமூகம் சார்பாக பெரு மகிழ்ச்சியுடன் வாழ்த்துகின்றோம்.

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

*பாடசாலைச் சமூகம்,*
*கிளி/ புனித திரேசா பெண்கள் கல்லூரி, கிளிநொச்சி.*

(:0607)(6,7,3)

## கண்டி வாவியில் சடலம் மீட்பு

கண்டி வாவியில் முற்றாக அழுகிய நிலையில் மிதந்து கொண்டிருந்த சடலமொன்று கடந்த வெள்ளிக்கிழமை கண்டி பொலிஸாரால் மீட்கப்பட்டது. மரணமானவர் கண்டி மஹியாவ பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதுடைய குடும்பஸ்தர் என அடையாளம் காணப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

## பார்மசிக்கு ஆள்தேவை

நெல்லியடியில் உள்ள பார்மசி ஒன்றுக்கு
அனுபவமுள்ள வேலை ஆள் தேவை. அருகில்
உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

**தொடர்பு: 0771267222**

(c/6065)(3,6,7)

## நான்காம் வருட நினைவஞ்சலி

பிறப்பு 29 * 03 * 1956

இறப்பு 05 * 12 * 2007



திதி: ஏகாதசி (21.11.2011)

அமரர் **கா.குலசிங்கம்**
(செந்தா பஸ் உரிமையாளர்)

அன்பு மொழியும் ஆதரவுப் புன்னகையும்
பண்பின் உயர்வும் பலரிடம் பூண்ட நட்பும்
இன்னமும் எம் கண்முன்னே நீங்கா இடம்பிடிக்க
நான்காண்டு ஆனபோதும் இன்றும்
உங்கள் நினைவுடனே...
உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(10239),(5,7,6)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:20.06.1950
மறைவு: 16.11.2006

திருமதி **நகுலேஸ்வரி இராகவன்**
(ஆசிரியை, யாழ்.இந்து மகளிர் கல்லூரி)




திதி: அபரபக்க ஏகாதசி

சீரும் சிறப்பும் செழிக்க எங்கள்
ஊரும் உறவும் மதிக்க
வாழ்ந்திருந்த எங்கள் வளர்மதியே!
நீ மறைந்து ஆண்டுகள் ஐந்து ஆனாலும்
ஆறாது எம்துயரம்.

அம்பலவாணர் பாதை,
பலாலி வீதி,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம். (10596)(3,6,7)

ஆன்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கும்
கணவர்,குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



மலர்வு:08.05.1941
உதிர்வு: 02.12.2010

அமரர் **வீரசிங்கம் கனகசுந்தரம்**

திதி:
ஏகாதசி(21.11.2011)

ஓராண்டு ஓடி மறைந்திட்டாலும்
உங்கள் நினைவுகள் என்றென்றும்
மறைந்திடுமோ?
புன்னகை சிந்தும் உங்கள் முகம் காண
நித்தம் நித்தம் ஏங்கித்தவிக்கின்றோம்.

பிரான்பற்று,
பண்டத்தரிப்பு. (10211)(3,6,7)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## உலக பாதுகாப்புக்காக அமெ.தொடர்ந்து பாடுபடும்

### பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

"எக்காரணம் கொண்டும், உலக வல்லரசு, உலகத் தலைவர் என்ற நிலையை அமெரிக்கா விட்டுக் கொடுக்காது'' என அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் லியோன் பனெட்டா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர், சனிக்கிழமை செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு:-

அமெரிக்காவின் புவியியல் முன்னுரிமைகளின்படி, பாதுகாப்புக்குக் குந்தகம் நேரிடும்படியான செயல்களுக்கு, அமெரிக்கா ஒருபோதும் இடம் கொடுக்காது. பசுபிக் மண்டலத்தில், அமெரிக்கா படைகளைக் குவித்து வருகிறது.

உலக வல்லரசு, உலகத் தலைவர் என்ற நிலையை அமெரிக்கா எக்காரணம் கொண்டும் விட்டுக்கொடுக்காது. உலக நலன், உலகளாவிய பொறுப்புகள் ஆகியவற்றுடன் கூடிய ஒரு நாடு, உலகளாவிய நிலையில் வலுவான இராணுவம் கொண்ட ஒரு நாடு என்ற முறையில் அமெரிக்கா, உலக பாதுகாப்புக்காகத் தொடர்ந்து செயல்படும் என்று பனெட்டா தெரிவித்தார்.

## சீன இரசாயன ஆலையில் விபத்து

சீனாவின் கிழக்குப் பகுதியிலுள்ள ஷாண்டோக் மாகாணத்திலுள்ள இரசாயன ஆலையில் திடீரென விபத்தேற்பட்டது. இந்த விபத்தில் 14 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 5 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இது குறித்து அப்பகுதி பொலிஸார் விசாரித்து வருகின்றனர். இந்த விபத்துத் தொடர்பாக மேலும் தகவல்களை வெளியிட அதிகாரிகள் மறுத்துவிட்டனர்.

சீனாவில் இரசாயன ஆலைகளில் அடிக்கடி வெடி விபத்துகள் ஏற்படுவது குறிப்பிடத்தக்கது. கடந்த செப்டம்பர் மாதம் ஜியாங்சி மாகாணத்தில் நடந்த விபத்தொன்றில் 3 பேர் கொல்லப்பட்டனர். கடந்த வாரம் யுனான் மாகாணத்தி லுள்ள சுரங்கத்தில் நடந்த விபத்தில் 34 தொழிலாளர்கள் பலியானதும் குறிப்பிடத்தக்கது.



ஒன்லைன் மூலம்
கொள்வனவுகளை
மேற் கொள்வோர்
களுக்கு
விநியோகம்
இலவசம்

www.titusstores.com

ரயிட்டஸ் ஸ்ரோஸ்

புறக்கோட்டை | லிபேட்டி பிளாஷா

**2439422**

## விசேட சேவை

கொழும்பு கட்டணத்திலேயே யாழ்ப்பாணத்திலும் பாடசாலை மாணவர்களுக்குரிய ரை ரூபா.60, பச் ரூபா 30, (மொனிற்றர், பிறிபெக்ற் பச் ரூபா. 30), பொக்கெற் பச் ரூபா. 5

பரோதன் ஆட்ஸ் சென்ரர், யாழ் - கொழும்பு
0777110610 (C/6071)(6-7-8)

## கருத்தரங்கு

பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி
கலைமாணி மாணவர்களுக்கான
இந்துப் பண்பாடு கருத்தரங்கு
ஆசிரியர் : சிவ.கஜன் B.A
காலம்: 23.11.2011 மாலை 4.00 மணி
A/L,G.A.Q, B.A வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

C.C.A உயர் கல்வி நிலையம்
மன்னார் வீதி, குருமண் காடு,வவுனியா
T.P.0777562497

(10586)(6-7-3)

## வெதுப்பகம் வாடகைக்கு

இயங்கிக் கொண்டிருந்த வெதுப்பகத்தின்
உரிமையாளர் வேறு இடம் செல்வதால்
சகல வசதிகளுடன் வாடகைக்கு
கொடுக்கப்படும்.புதிய போறணை.
தொடர்பு:0779672462

(10627)(6-7-3)

## காணி விற்பனைக்கு

இல. 37, இராமநாதன் வீதியில் அமைந்துள்ள (மிலேனியத்துக்கு அண்மையில்) 11 பரப்பு9 குளிக் காணி ஒரு கிணற்றுடன் உடன் விற்பனைக்குண்டு (தரகர் தேவையில்லை)
தொடர்பு : 0112591720

(10517)(6-7-3)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கடந்த 16.11.2011 இல் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி
மா.கணேசராசா அவர்கள் முன்னிலையில்
அகில இலங்கை சமாதான நீதிவான்களாக
சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட
சாவகச்சேரி இந்துக்கல்லூரியின்



அதிபர்
*அ.கயிலாயபிள்ளை*
(B.A. Hons, PGDE, M.Ed., S.L.E.A.S. III)



முன்னாள் அதிபர்
*இ.கயிலைநாதன்*
(B.A. Dip. in Edu, S.L.P.S. I)

ஆகியோரை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி,
சாவகச்சேரி.

பாடசாலை
அபிவிருத்திச்சங்கம்.

(C/2860)(5,6,7)

## சேவை நலன் பாராட்டு



திரு *சபாரத்தினம் அருந்தவரத்தினம்*
(ஆசிரிய ஆலோசகர், யாழ். கல்விவலயம்)

20 வருடங்கள்
விஞ்ஞானபாட
ஆசிரிய ஆலோசகராக
சிறப்பாகப் பணியாற்றி
அகவை 60 இல்
ஓய்வுபெறும்
சபாரத்தினம்
அருந்தவரத்தினம்
அவர்கள் நீடூழி வாழ
வாழ்த்துவதுடன்,
அவர்களின்
ஓய்வுகாலம் சிறப்பாக அமைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வலயக்கல்விப் பணிப்பாளரும்,
சக உத்தியோகத்தர்களும்,
வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.

(10549)(5,6,7)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



நுணாவில் மேற்கைச் சேர்ந்தவரும் யா/ மீசாலை விக்கினேஸ்வர மகாவித்தியாலய அதிபரும் எமது குடும்ப நண்பருமாகிய

**தம்பிராசா அம்பலவாணர்**

(B.A,Dip. in Edu.,SL.P.S - II) அவர்கள் 16.11.2011 அன்று சாவகச்சேரி மாவட்ட நீதிபதி மா.கணேசராசா அவர்கள் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து தமது பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்டார். அவரை மனமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துவதுடன் மேன்மேலும் சிறப்புக்கள் பெற வாழ்த்துகின்றோம்.

திருமதி சி.விநாயகமூர்த்தியும்,
குடும்பத்தினரும்,மீசாலை.

(சி/6080)(3,6,7)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



பெரியபளை
பளையைச் சேர்ந்த
**பசுபதி அரியரத்தினம்**
அவர்கள் அகில
இலங்கை சமாதான
நீதிவானாக
16.11.2011 அன்று
கிளிநொச்சி மாவட்ட
நீதிமன்றில்
சத்தியப்பிரமாணம்
செய்து
பதவியேற்றுள்ளார்.
இவர் மேலும் பல
சிறப்புக்கள் பெற்று பல்லாண்டு காலம் வாழ
மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
திரு. திருமதி வரதராசா குடும்பம்,
இல.116, பரவிப்பாஞ்சான், கிளிநொச்சி.

(14015)(3,6,7)

# ஆதி காலத்தில் கந்தபுராண படனம் இடம்பெற்ற சிறப்புமிகு அரியாலை சித்தி விநாயகர் ஆலயம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

யாழ்பாடியின் இராசதானி யாழ்ப்பாண மாக இருந்ததாலும், யாழ்ப்பாணத்தின் தென்கிழக்கேயுள்ள மணற்றிட்டுக்கள் யாழ்ப்பாடிக்கு பரிசளிக்கப்பட்டதாலும் அவரின் முதலமைச்சர் சேதிராயரால் சித்தி விநாயகருக்கு ஓர் ஆலயம் கட்டப் பட்டமையாலும் அந்த ஆலயம் யாழ்ப் பாண இராசதானியிலே அல்லது அதற்கு அயலிலே கட்டுவிக்கப்பட்டிருக்க வேண்டு மென்று கருதப்படுகிறது.

மேலும் யாழ்ப்பாண நகரப் பகுதியில் அரியாலை சித்திவிநாயகர் கோயிலைப் போன்ற பழமை வாய்ந்த வேறோர் சித்தி விநாய கர் கோயில் இல்லாமையினாலும் இங்கே உள்ள விநாயகர் விக்கிரக அங்க அமைப்புகள் பழங்கால சிற்பங்களை ஒத்திருப்பதாலும் கச்சிக் கணேசையரால் கொண்டு வரப்பட்ட விநாயகர் விக்கிரகமே இந்தக் கோயிலில் உள்ளதென்று துணிந்து கூற இடமுண்டு.

யாழ்பாடியின் பின் யாழ்ப்பாணம் சிலகாலம் அரசற்ற நாடாயிருந்து பின்னர் 16 ஆம் நூற்றாண்டு வரையும் சிங்கை ஆரிய மன்னர்களாலும் ஈற்றில் சங்கிலி அரசனாலும் ஆளப்பட்டது. இந்தக் காலத்தில் சைவ சமயமும் சைவரின் கோயில்களும் சிறப்புற்று விளங்கின.

அந்நியர் ஆட்சிக் காலத்தில் சைவக் கோயில்கள் அழிக்கப்பட்டன. நல்லூரில் சிறப்புற்று விளங்கிய கைலைநாதர் கோயில் இருந்த இடம் தெரியாது அழிக்கப்பட்டதென்று கூறப்படுகிறது. அப்போது இங்கிருந்த பழமையான சித்தி விநாயகர் ஆலயமும் அழிக்கப்பட்டிருக்கலாம்.



சங்கிலியன் மீது போர் தொடுக்க மன்னாரிலிருந்து புறப்பட்டு வந்த அந்நியர் படைகள் பூநகரியில் இருந்து வள்ளங்கள் மூலம் சாவகச்சேரியை அடைந்து நாவற்குழி வழியாக உப்பாற்றைக் கடந்து சுண்டுக்குளியில் தங்கி போர் செய்ததாக யாழ்ப்பாணச் சரித்திரம் கூறுகிறது. எனவே இந்த ஆலயம் மேற்படி பாதையில் இருந்தமையால் அழிந் திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

சைவ ஆலயங்கள் அழிக்கப்பட்டமையால் அங்கிருந்த விக்கிரகங்களைப் பாதுகாப்பதில் அடியார்கள் கருத்தாயிருந்தனர். சங்கிலி மன்னனால் மன்னார் மாதோட்டத்தில் ஆலயமொன்றில் வழிபட்டுக் கொண்டிருந்த கத்தோலிக்கர்கள் சிரச்சேதம் செய்யப்பட்டு கொலையுண்டதனால் பீதியடைந்த இந்துக்கள் தமது கோயில்களில் இருந்த விலையுயர்ந்த பொருள்களையும் விக்கிரகங்களையும் பாதுகாக்க மறைவிடங்களில் வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. வைதீக சைவ கலாசாரம் இந்தக் காலப் பகுதியில் மறைவில் உயிர் வாழ்ந்து கொண்டிருந் தது.

இதற்குச் சான்றாக இந்தப் பகுதியில் கர்ணபரம்பரையாகப் பேசப்பட்டு வரும் வரலாறு ஒன்றுள்ளது. நீர்நொச்சித் தாழ்வு என்று அழைக்கப்படும் இந்தப் பகுதியில் மந்தை மேய்த்துக்கொண்டிருந்த சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருக்கும் போது அங்கேயுள்ள பற்றை ஒன்றினுள் சித்தி விநாயகர் விக்கிரகமொன்றைக் கண்டெடுத்தார்கள். அதன் பின்னர் அந்த விக்கிரகத்தை சிறுவர்கள் 'சுவாமி' விளையாட்டு விளையாடி வந்தனர். அதனை அறிந்த பெரியோர்கள் அந்த இடத்திலேயே சித்திவிநாயகருக்கு கோயில் கட்டுவித்தார்கள் என்றும் பேசப்படுகிறது.

சைவர்களின் பொக்கிஷமான கந்த புராணம் தோன்றிய காலத்தில் தோன்றிய இந்தக் கோயில் ஆதியிலே யாழ்ப் பாணத்தில் கந்தபுராணப்படனம் நடந்த கோயில்களில் ஒன்றாகும். காஞ்சிபுரத்தில் பிறந்த கந்தபுராணத்தை கச்சிக் கணேசையர் (கச்சி - காஞ்சிபுரம்) தாம் கட்டிய சித்தி விநாயகர் ஆலயத்துக்கு அண்மையில் பள்ளிக் கூடம் நடத்திய தோடு அங்கே கந்தபுரண பாடமும் கற்பிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. கச்சிக்கணேசையர் யாழ்பாடியுடன் யாழ்ப்பாணத்துக்கு வந்தவராவார்.

அரியாலை சித்தி விநாயகர் ஆலயம் விசேட தீர்த்தச் சிறப்பு மிக்க சூழலைக் கொண்டுள்ளது. இந்தப் பகுதியில் நிலக்கீழ் நீர் உவர்த்தன்மை கொண்டதாகக் காணப்படுகின்ற போதிலும் ஆலயத்தில் உள்ள 12 கிணறுகளும் நன்னீராகவே காணப்படுகின்றன. வெளி வீதி நான்கிற்கு இடையில் ஆறு கிணறுகளும், அந்த வீதிகளில் புற ஓரங்களில் ஆறு கிணறுகளுமாக 12 கிணறுகள் முன்னோரால் அமைக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

யேசுதாஸ்

(தொடரும்)




## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### கிளி/ பளை மத்திய கல்லூரி



**தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோரையும், நூறு புள்ளிகளுக்கு மேல் பெற்றோரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்**

**சித்திபெற்ற மாணவர்கள்**

| | | | |
|---|---|---|---|
| ஜெ. திவாகர் | 177 - மாவட்ட மட்டத்தில் 4 ஆம் இடம் | | |
| பா. மேவன் | 166 | ம. கஜீவன் - | 151 |
| க. அனுஷா | 167 | இ. வினுஜா - | 162 |
| ம. சாருஜா | 161 | | |

**100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்**


| | | | |
|---|---|---|---|
| 1. த. ரிலக்சனா | 138 | 16. த.நெஷாந்தன் | 104 |
| 2. பா. பிரசாந் | 135 | 17. வி.சதுர்சன் | 124 |
| 3. அ.கிருஷிகா | 134 | 18. உ.விதுஷா | 109 |
| 4. சு.சஞ்ஜீவன் | 131 | 19. பே.வினித்தா | 118 |
| 5. இ.சாரங்கா | 124 | 20. ப.றொஜிதா | 115 |
| 6. இ.யதுஸ்ரன் | 121 | 21. ம.ஜெசித்தா | 111 |
| 7. அ.சிந்துஜன் | 120 | 22. செ.மதுசாளினி | 130 |
| 8. அ.கர்ஷிகா | 119 | 23. சு.கஸ்மீரா | 117 |
| 9. தி. வாகசன் | 137 | 24. ஜெ.சுஜீபா | 113 |
| 10. இ.கனிசியுஸ் | 113 | 25. ம.கஜறதி | 113 |
| 11. ச.சஜீத் | 106 | 26. கு.சாந்தரூபி | 108 |
| 12. ம.டிலக்சன் | 110 | 27. ஞா.தனுசன் | 122 |
| 13. இ.தர்சன் | 100 | 28. கு.ஜிவானி | 121 |
| 14. சி.சிலக்ஷன் | 100 | 29. ர.தனுசியா | 101 |
| 15. செ.தபோஷன் | 122 | | |

வாழ்த்துவோர்:
அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள்.

(10607)(6,7,3)

# ஐ.தே.க.நிதி நெருக்கடியைத் தீர்க்கவே பாதாளக்குழு முக்கியஸ்தருடன் பேச்சு

## இப்படிக் கூறுகிறார் மேர்வின் சில்வா



கொழும்பு,நவ.21

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பாதாள உலகக் குழு உறுப்பினர் ஒருவருடன் பிரிட்டனில் பேச்சு நடத்தியுள்ளார். இந்தப் பேச்சு ஐக்கிய தேசியக் கட்சியில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியை ஈடு செய்ய போதைப் பொருளைக் கடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதா? என்று பொதுமக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வா குற்றம் சுமத்தியுள்ளார்.

களனிப் பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாதாள உலகக் குழுத் தலைவர்களில் ஒருவரான குடுலால் என்பவருடன் ரணில் பேச்சு நடத்தியுள்ளார். அதன்போது என்ன விடயம் பேசப்பட்டது என்பதனை ரணில் விக்கிரமசிங்க அம்பலப்படுத்த வேண்டும்.

குடுலால் என்பவருக்கும் ரணிலுக்கும் இடையிலான பேச்சுக் குறித்து பாதுகாப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவினரிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

போதைப் பொருள் வர்த்தகர் என்று ஐக்கிய தேசியக் கட்சியினால் மேடைகளில் முத்திரை குத்தப்பட்ட நபருடன் கட்சித் தலைவர் என்ன பேசினார்?

இது தொடர்பில் ரணில் விளக்கமளிக்க வேண்டும் அல்லது கை விலங்குடன் என்னிடம் வரவேண்டும். நான் அவரை வெலிக்கடை சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்கின்றேன்- என்றார்.(ச)




தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவர்கள் தொல்புரம் சிவபூமி முதியோர் இல்லத்தில் பௌர்ணமி தினத்தன்று கலைநிகழ்ச்சிகளை நடத்தியுள்ளனர். இந்த நிகழ்வில் மாணவர்களின் கலைநிகழ்வு இடம்பெறுகின்றது.

# டிப்போவில் திருட்டு; சந்தேக நபருக்கு மறியல்

கொழும்பு,நவ.21

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான அநுராதபுரம் டிப்போவிலிருந்த பெறுமதிமிக்க ஒரு தொகை பொருள்களைத் திருடிய சந்தேகநபரை இன்று திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு அநுராதபுரம் மேலதிக நீதிவான் சந்திமஎதிரிமான உத்தரவிட்டுள்ளார்.

மான்கடவள பகுதியைச் சேர்ந்த அநுராதபுரம் டிப்போவில் கடமைபுரியும் ஊழியரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபரினால் டிப்போவிலிருந்த பெறுமதிமிக்க உபகரணங்களைத் திருடி விற்பனை நிலையமொன்றுக்கு விற்பனை செய்தபோது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

அநுராதபுரம் தலைமையகப் பொலிஸ் நிலையத்தின் குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி எம்.என்.ஆர். வீரசூரியவின் ஆலோசனைப்படி பொலிஸ் அதிகாரிகளான அபேசிங்க மற்றும் நீல் ஆகியோர் நீதிமன்றத்தில் விளக்கமளித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# 18 விமான நிறுவனங்கள் இலங்கையில் சேவையில்

கொழும்பு,நவ.21

தென்னாபிரிக்காவைச் சேர்ந்த முன்னணி நிறுவனங்கள் இலங்கையில் முதலீடுகளைச் செய்ய விருப்பம் தெரிவித்துள்ளன.

18 சர்வதேச விமான நிறுவனங்கள் இலங்கையில் தமது சேவைகளை ஆரம்பித்துள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவின் சர்வதேச ஒத்துழைப்புகள் தொடர்பான பிரதியமைச்சர் இப்ராஹிம் இஸ்மாயில் இப்ராஹிம் கடந்த வியாழக்கிழமை பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் தன்னை சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக, பொருளாதார உறவுகளை விரிவுபடுத்துவது தொடர்பில் ஆராய இரண்டு தரப்பினரும் இணங்கியுள்ளனர்.

சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதன் மூலம் இரண்டு நாடுகளும் பயன்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று தென்னாபிரிக்காவைச் சேர்ந்த முன்னணி நிறுவனங்கள் இலங்கையில் முதலீடுகளைச் செய்ய விருப்பம் தெரிவித்துள்ளதாக தென்னாபிரிக்கா பிரதியமைச்சர் தெரிவித்துள்ளார். (ச)


## வீட்டுக்கிருத்திய அழைப்பு



### அமரர் தம்பிஐயா கமலேஸ்வரன்

தோற்றம் 07.07.1944 — மறைவு 22.10.2011

கடந்த 22.10.2011 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (21.11.2011) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் நிகழ்வில் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஈஸ்வரி இல்லம்,
இணுவில் மேற்கு,
இணுவில்.

(10623)(5,6,7)

குடும்பத்தினர்.

## 11 ஆம் ஆண்டு நினைவலைகள்



### அருணாசலம் ஆறுமுகம்

(சமாதான நீதிவான், இளைப்பாறிய உப அதிபர்-சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை)

தோற்றம்:17.09.1921 — மறைவு:22.11.2000

திதி: ஏகாதசி (21.11.2011)

ஓடிப்போனதையா பதினொரு வருடங்கள்-உங்களை
மறந்ததே இல்லை இங்கு நாம் ஒரு நிமிடம்
ஆறாது தவிக்கிறது எங்கள் உள்ளம்
அழுது வெறுமானது உங்கள் இல்லம்
அப்பாவே எம் உயிரே எங்கு சென்றீர்
அயராது உழைத்து எம்மை உயர வைத்தீர்
செப்பமுற வளர்த்து எம்மை திகழவைத்தீர்
நிச்சயமாய் உம் கனவை நாம் நனவாக்குவோம்.

தாமோதரம்பிள்ளை வீதி,
சாவகச்சேரி.

(8015)(5,6,7)

ஜெயபதி குடும்பம்.

# கூடங்குளம் அணுமின் நிலையம் ஏன்? இலங்கைக்கு மின்சாரம் வழங்கவே!

## வைகோ ஆவேசம்

திருச்சி, நவ.21

இலங்கைக்கு கடல் வழியாக மின்சாரம் வழங்குவதற்காகத் தான் இந்திய அரசு கூடங்குளம் அணு மின் நிலையத்திட்டத்தில் இந்த அளவு ஈடுபாடு காட்டுகிறது என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் திருச்சியில் செய்தியாளர்களிடம் கூறுகையில்:

கூடங்குளம் அணுமின் நிலையத்திற்கு எதிராக அதிகளவில் எதிர்ப்புகள் எழும்பியுள்ள போதிலும், கடல் வழியாக இலங்கைக்கு மின்சாரம் கொடுக்கத் தான் இந்திய அரசு மேற்படி திட்டத்தில் இந்தளவுக்குமுனைப்பாக உள்ளது.



இதற்கான ஒப்பந்தத்தில் இந்திய அரசும்,09.06.2010 அன்று இலங்கைஅரசும் கையெழுத் திட்டுள்ளன. கூடங்குளம் அணுமின் நிலையத்தில் தயாரிக்கப்படும் மின்சாரத்தில் அரைவாசிக்கும் குறைவாகத் தான் தமிழகத்துக்கும் கிடைக்கும். ராஜீவ் காந்தி பிரதமராக இருந்தபோது நான் இந்தத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தேன்.

ஈழத் தமிழர்களை ஈவு, இரக்கமின்றி கொன்று குவித்த இலங்கைக்கு மின்சாரம் கொடுப்பதற்காக தமிழக மக்கள் ஏன் தங்கள் உயிர்களை பணயம் வைக்க வேண்டும்? ஈழத் தமிழர் விவகாரம் மற்றும் முல்லைப்பெரியாறு அணை பிரச்சினை ஆகியவற்றில் பாராமுகமாக இருக்கும் மத்திய அரசு கூடங்குளம் விவகாரத்தில் மட்டும் அதிக ஆர்வம் காட்டுவது தமிழக மக்களின் நன்மைக்காக அல்ல என்றார்- என்றார். (வ)




தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் பனாமாக்ஸ் வகை பெரிய கப்பல்களைக் கையாள தேவையான 12.8மீற்றர் மிதவை ஆழத்தை மத்திய கப்பல் துறை அமைச்சர் ஜி.கே.வாசன் பட்டன் அமுக்கி ஆரம்பித்து வைக்கிறார்.

## இடிந்த கரையில் மீனவர்கள் ஆர்ப்பாட்டம்

கூடங்குளம் அணுமின் நிலையத்தை மூட வலியுறுத்தி திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் 5 ஆயிரம் நாட்டுப் படகுகளுடன் இடிந்தகரைக் கடலில் இன்று ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு செய்துள்ளனர்.

# முன்னாள் தொலைத் தொடர்புத்துறை அமைச்சர் சுக்ராமுக்கு 5 வருடச் சிறை

டில்லி, நவ.21



தொலைத்தொடர்பு துறையில் ஊழல் மோசடி குற்றச்சாட்டில் முன்னாள் மத்திய அமைச்சர் சுக்ராமுக்கு, சி.பி.ஐ., சிறப்பு நீதிமன்றம் 5 வருட சிறைத் தண்டனை விதித்து நேற்று முன்தினம் தீர்ப்பளித்தது.

காங்கிரஸைச் சேர்ந்த நரசிம்மராவ் பிரதமராக இருந்த போது, தொலைத் தொடர்புத்துறை அமைச்சராக இருந்தவர் சுக்ராம். இவருக்கு வயது 86.1996 ஆம் ஆண்டு தனியார் நிறுவனத்துடன் மேற்கொள்ளப்பட்ட ரூ.30 கோடி மதிப்புள்ள கேபிள் ஒப்பந்தம் ஒன்றுக்காக ரூ.3 இலட்சம் லஞ்சம் பெற்ற வழக்கிலேயே அவருக்கு இந்தத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

5 ஆண்டுகளாக நடைபெற்று வந்த இந்த வழக்கு விசாரணையின் போது தனக்கு 86 வயதாகிவிட்டதால் தண்டனையைக் குறைத்து தீர்ப்பளிக்க வேண்டும் என்று சுக்ராம் கோரியிருந்தார். எனினும் சிறப்பு நீதிமன்றம் அவரது கோரிக்கையை நிராகரித்து விட்டது.

தண்டனை விதிக்கப்பட்டதும் அவர் திஹார் சிறைக்கு கொண்டு செல்லப்பட்டார். அந்த நேரம், நீதிமன்ற வளாகத்தில் ஹர்விந்தர் சிங் எனும் இளைஞர் சுக்ராமைத் தாக்கியதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தநிலையில் தான் பிணை கோரி உச்ச நீதிமன்றில் மனு தாக்கல் செய்ய போவதாக சுக்ராம் தெரிவித்துள்ளார். இதேவேளை 2ஜி ஸ்பெக்ரம் வழக்கில், முன்னாள் தொலைத்தொடர்புத் துறை அமைச்சர்களிடமும் விசாரணையை முடுக்கிவிடப் போவதாக சி.பி.ஐ. அறிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (வ)

# ஆந்திர சட்டசபையில் காங்கிஸுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம்

## தெலுங்கு தேசம் கட்சி

ஆந்திர சட்டசபையில் குளிர்கால கூட்டத் தொடரின் போது ஆளும் காங்கிரஸ் அரசு மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டுவரப் போவதாகத் தெலுங்கு தேசம் கட்சி அறிவித்துள்ளது.

அந்தக்கட்சியின் மூத்த தலைவர்கள் எர்ரன் நாயுடு, ராமகிருஷ்ணடு ஆகியோர் ஐதராபாத்தில் இது தொடர்பில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளிக்கையில்:

அடுத்த மாதம் முதலாம் திகதி குளிர்கால கூட்டத் தொடர் தொடங்கும் போது, அரசு மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை தெலுங்கு தேசம் கட்சி தாக்கல் செய்யும். விவசாயிகள் பிரச்சினை, மாநில அரசின் மக்கள் விரோத கொள்கை ஆகியவற்றை முன்னி றுத்தி இந்தத் தீர்மானத்தை கொண்டு வரவுள்ளோம். இதன்போது யாரெல்லாம் காங்கிரஸ் அரசை மறைமுகமாக ஆதரிக்கிறார்கள் என்பது வெளிப்படையாகத் தெரிந்துவிடும் என்று தெரிவித்தார்.

இதேவேளை இவ்வாறு நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டுவரப்பட்டாலும், கிரண் குமார் தலைமையிலான காங்கிரஸ் அரசுக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படப் போவதில்லை என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது. (வ)

# ஆந்திரா லட்டுக்கு கின்னஸில் இடம்



ஆந்திராவில் அண்மையில் நடந்த விநாயகர் திருவிழாவுக்கு தயாரிக்கப்பட்ட 5,570 கிலோ லட்டு கின்னஸில் இடம் பிடித்துள்ளது.

விசாகபட்டினத்தில் நடந்த 21 நாள் திருவிழாவுக்காக விநாயகர் உருவம் கொண்ட 117 அடி உயரத்தில் இந்த லட்டு தயார் செய்யப்பட்டு பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கப்பட்டது.

# 2011 இற்கான இந்திரா காந்தி விருதைப் பெறுகிறார் இலாபட



இந்த வருடத்துக்கான இந்திரா காந்தி விருதுக்காக சமூக சேவகி இலாபட் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.நெல்சன் மண்டேலாவால் 2007 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தி யெல்டர்ஸ் அமைப்பின் உறுப்பினராக இலா பட் விளங்குகின்றார்.

சமுதாயத்தில் பெண்களுக்கான சேவையில் ஈடுபடுபவர்களுக்கு முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி அறக்கட்டளை சார்பாக இந்திரா காந்தி விருது வழங்கப்படுவது வழக்கம். இந்தநிலை யில் 2011 ஆம் ஆண்டுக்கான இந்திரா காந்தி விருதை சமூக சேவகி இலா பட் பெறுகிறார்.

இந்த விருதை இந்திய பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான குழு தெரிவு செய்தது. (வ)

# பலஸ்தீனத்துக்கு இந்தியா 51 கோடி நிதியுதவி

பலஸ்தீனத்துக்கு 2011-2012 ஆம் ஆண்டுக்கான வருடாத நிதியுதவியாக ரூ.51 கோடியை இந்தியா அளித்தது. இந்த நிதியுதவிக்கான காசோலையை ஐக்கிய நாடுகளின் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்கான அமைப்பிடம்'' இந்திய வெளியுறவுத்துறையின் இணையமைச்சர் இ.அகமது கடந்த வெள்ளிக்கிழமை அளித்தார்.

ஐ.நா. மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் அமைப்பின் ஆணையர் ஃபிலிப்போ கிராண்டியிடம் இந்தக்காசோலை கையளிக்கப் பட்டது. இந்தநிதியுதவி குறித்துக் கருத்துத் தெரிவித்த அகமது, ஐ.நா.மீட்பு அமைப்பின் சார்பில் நடத்தப்படும் பள்ளிகளில் பயிலும் 76,000 குழந்தைகளின் உணவுத் தேவைக்காக இந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

# ஆந்திராவில் நம்பிக்கையை திரும்பப்பெறும் தீவிரமான முயற்சியில் நக்ஸலைட்டுக்கள்

ஐதராபாத், நவ.21

ஆந்திராவில், மக்களிடம் இழந்த நம்பிக்கையைத் திரும்பப் பெறும் முயற்சியில், நக்சலைட்டுகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக, பொலிஸார் எச்சரித்துள்ளனர்.



தெலுங்கானா தனி மாநிலக் கோரிக்கையை ஆதரிக்கும் போர்வையில், ஆந்திராவில், மீண்டும் தங்கள் நடவடிக்கைகளை புதுப்பிக்கும் முயற்சியில், நக்சலைட்டுகள் இறங்கியுள்ளதாகவும், வனப் பகுதிகளில் ஆயுதங்களுடன், அவர்கள் நடமாடத் தொடங்கியுள்ளதாகவும், தகவல் வெளியாகியுள்ளது.

ஆந்திராவில், அடிலாபாத், கம்மம், கரீம் நகர், வாரங்கல் ஆகிய மாவட்டங்களும், அங்குள்ள வனப்பகுதிகளும், பத்தாண்டுகளுக்கு முன், நக்சலைட்டுகளின் சொர்க்கமாக விளங்கின. அதிகமான நக்சலைட்டுகள், இங்கிருந்து தான் தங்களது அனைத்து நடவடிக்கைகளையும் செயற்படுத்தி வந்தனர்.

ஜார்க்கண்ட், சத்தீஸ்கர், ஒடிசா போன்ற மாநிலங்களுக்கு, நக்சலைட் கொள்கைகளைப் பரவ விடுவது, பயிற்சி முகாம் அமைப்பது போன்ற ரகசியமான விடயங்களை செயற்படுத்துவதற்கு, ஆந்திராவில் உள்ள வனப் பகுதிகள், அவர்களுக்கு மிகவும் வசதியாக இருந்தது.

கடந்த சில ஆண்டு களுக்கு முன் வரை, வனப் பகுதிகளில் இருந்தபடி, ஒரு மாற்று அரசையே, அவர்கள் நடத்தி வந்தனர். 2005இற்கு பின், பொலிஸாரின் தாக்குதல் நடவடிக்கை தீவிரமானது. நக்சலைட்டுகளின் முக்கிய தலைவர்கள், பொலிஸ் என்கவுன்டர்களில் அடுத்தடுத்து சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பொலிஸ் தீவிர கண்காணிப்பு மற்றும் தாக்குதல் நடவடிக்கைகளால், 2,000 ஆக இருந்த நக்சலைட்டுகளின் எண்ணிக்கை, 300 ஆக குறைந்தது. இதைத் தொடர்ந்து, ஆந்திராவில் நக்சலைட்டுகள் முற்றிலும் ஒழிக்கப்பட்டமை போன்ற தோற்றம் ஏற்பட்டது. மக்களிடம் இருந்த செல்வாக்கையும், அவர்கள் இழந்து விட்டனர். இந்தநிலையில், அண்மைக்காலமாக நக்சலைட்டுகள் மீண்டும் தங்கள் அமைப்பை புதுப்பிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதாக, ஆந்திர மாநில பொலிஸார் எச்சரித்துள்ளனர். (வ)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

எழுகதிராய்: 04 . 05 . 1942



உதிர்வலிராய்: 01 . 12 . 2010

### திருமதி ஜெயாத்துரை யோகராணி [ராணி]

திதி:கார்த்திகை அபரபட்ச ஏகாதசி

குடும்பத்தின் குலவிளக்காய் ஒளிர்ந்தாய் அம்மா
குலவிளக்கின்றி தவிக்கின்றோம் நாம் இங்கு
எத்தனை ஆண்டுகள் கடந்து சென்றாலும்
எங்கள் அம்மாவின் நினைவு தான் நிதம் எமக்கு

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. (சி/6090)(3,6,7)

தகவல்:
குடும்பத்தினர்.

## நேபாள இராணுவத்தில் முன்னாள் மாவோ வீரர்கள்

காத்மாண்ட், நவ. 21

நேபாளத்தில் முன்னாள் மாவோயிஸ்ட் வீரர்களை இராணுவத்திலும், சமூகத்திலும் சேர்க்கும் நடவடிக்கைகள் ஆரம்பித்துவிட்டன. நேபாளத்தில் மாவோயிஸ்ட்கள் புரட்சிக்குப் பின்னர் ஜனநாயக நாடாளுமன்ற அரசியல் கொண்டுவரப்பட்டது.

முன்னாள் மாவோயிஸ்ட்களையும், அவர்களிடமுள்ள ஆயுதங்களையும் என்ன செய்வது என்பது பற்றி, பல ஆண்டுகளாக குழப்பம் நீடித்துவந்தது. நவம்பர் முதலாம் திகதி, அந்நாட்டின் அனைத்துக் கட்சித் தலைவர்களும் கூடி இந்த விவகாரத்தில் ஒரு முடிவுக்கு வந்தனர்.

மொத்தமுள்ள 19 ஆயிரம் மாவோயிஸ்ட் வீரர்களில், 6 ஆயிரத்து 500 பேர் இராணுவத்தில் சேர்க்கப்படுவர் உள்ளிட்ட பல முக்கிய அம்சங்கள் இந்த முடிவில் குறிப்பிடப்பட்டன. இதற்கான பணிகள் சனிக்கிழமை அதிகாரபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டன.

யார் யார் இராணுவத்தில் சேர விரும்புகின்றனர் என்பதையறிய, மாவோயிஸ்ட் வீரர்கள் தங்கியுள்ள ஏழு முகாம்களில், அதிகாரிகள் சனிக்கிழமை முதல் நேர்காணல் நடத்த ஆரம்பித்துள்ளனர்.

சிந்துலி, சித்வான், நாவல்பரசி, ரோல்பா, சுர்கெட், கயிலாலி ஆகிய முகாம்களில் இந்த நேர்காணல்கள் நடக்கின்றன.

## நான்காவது வருட நினைவில்...

மலர்வு 02.01.1957
உதிர்வு 21.11.2007

### அமரர் வேலுப்பிள்ளை சபாபதிப்பிள்ளை



(தொழில்நுட்ப உத்தியோகத்தர், சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்)

திதி:பூர்வபக்க துவாதசி(கார்த்திகை)

சிரித்து மகிழ்ந்தது சிலகாலம்
எம்முடன் நீர்
அதற்குள்ளே வலைவிரித்து கவர்ந்து
விட்டான் காலனுமை
பாலகர் எம்முடன் பாசமிகு அம்மாவும்
வேதனையால் வாடுகிறோம்
விரைந்து வரமாட்டீரோ.

உம் அன்பை நாம் மறவோம்
எந்நாளும் உமை நினைப்போம்
நாம் வாழ உங்கள் ஆசி என்றுமப்பா
உம் மூச்சு எம்முடன் இன்னுமப்பா

வரணி இயற்றாலை,
வரணி. (சி/6092)(3.6.7)

குடும்பத்தினர்.

## தேர்தலில் மோசடி முன்னாள் பெண் ஜனாதிபதி கைது

தேர்தல் மோசடி வழக்கில் பிலிப்பைன்ஸ் முன்னாள் பெண் ஜனாதிபதி கைதுசெய்யப்பட்டார். பிலிப்பைன்ஸின் முன்னாள் பெண் ஜனாதிபதி குளோரியா மெகாபகல் அரோயோ(வயது-64).

இவர் கடந்த 2001 முதல் 2010ஆம் ஆண்டு வரை ஜனாதிபதியாகப் பதவி வகித்தார். அவர் பதவி விலகியவுடன் நாடாளுமன்ற பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதைத் தொடர்ந்து அவர் மீது பல்வேறு ஊழல் முறைப்பாடுகள் கூறப்பட்டன.

இதைத் தொடர்ந்து கைதுசெய்யப்பட்ட அவர் மீது விசாரணை நடைபெற்று வருகிறது. எலும்பு நோயால் அவதிப்படும் அவர் தலைநகர் மணிலாவிலுள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

மேலதிக சிகிச்சைக்காக ஹொங்கொங் செல்ல முடிவு செய்தார். அதற்கான அனுமதியை அவருக்கு உச்ச நீதிமன்றம் வழங்கியது.

சனிக்கிழமை வைத்தியசாலைக்கு வந்த பொலிஸார் அவரை மீண்டும் கைதுசெய்தனர். அவரிடமிருந்து கைரேகை பதிவுசெய்தனர்.

## மரண அறிவித்தல்

### திருமதி கிறிஸ்தோபர் மேசி டெய்சி

(ஆசிரியை. யா/புனித மரியாள் வித்தியாலயம்-O.L.R.)



குருநகரைப் பிறப்பிடமாகவும், 6/2, மாட்டின் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிறிஸ்தோபர் மேசிடெய்சி (17.11.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கபிரியேல் யோசப் மற்றும் திருமதி யோசப் திரேசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி அந்தோனிப்பிள்ளை திரேசம்மா தம்பதி யரின் அன்பு மருமகளும், அந்தோனிப்பிள்ளை கிறிஸ்தோபரின் (ஆசிரியர்-யா/ஒஸ்மானியா கல்லூரி) அன்பு மனைவியும், பாரியாதா (பழைய மாணவி-யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), விவேக், வினுசாந் (யா/இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற யோ.லூர்துநாயகி (இன்பம்) மற்றும் சி.ராஜேஸ் (சின்னக்கிளி-ஓய்வுபெற்ற ஆசிரியை), யோ.அன்ரன் குருகுலசிங்கம் (UK), காலஞ்சென்ற யோ.ஜெயராணி (பவா) மற்றும் யோ.பத்மராஜா (துரைமணி-UK), வி.கொன்சலேற்றர் (ஜீவா-கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பிரான்சிஸ் (ஓய்வுபெற்ற அலுவலர், புகையிரதத் திணைக்களம்), மரியதாஸ் (அரச மரக்கூட்டுத்தாபனம்), சூசைதாசன் (பிரான்ஸ்), வோல்டர் (ஜேர்மனி), அகஸ்ரின் (ஆசிரியர், யா/பரியோவான் கல்லூரி), இம்மனுவல் (ஜேர்மனி), அ.அன்ரனிற்றா (தவம்) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21.11.2011) திங்கட்கிழமை பி.ப. 3.30 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு பி.ப. 3.45 மணிக்கு புனித மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

6/2, மாட்டீன் வீதி,
யாழ்ப்பாணம். (10679)(5,6,7)

தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



### திருமதி கிறிஸ்தோபர் மேசி டெய்சி

(ஆசிரியை, யா/சென்.மேரீஸ் வித்தியாலயம் (O.L.R)

எமது கல்லூரியின் சிரேஷ்டவிஞ்ஞான ஆசிரியர் அ.கிறிஸ்தோபர் அவர்களின் அன்புத் துணைவியார் கி.மேசி டெய்சி அவர்களின் திடீர் மரணச் செய்தி அறிந்து ஆழ்ந்த கவலை அடைவதோடு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆம்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்
யா /ஒஸ்மானியாக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(10685)(3,6,7)

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி மேசி டெய்சி கிறிஸ்தோபர்

(ஆசிரியை, யா/சென்.மேரீஸ் வித்தியாலயம்)



எமது பாடசாலை ஆசிரியர் திருமதி மேசிடெய்சி கிறிஸ் தோபர் அவர்கள் 17.11.2011 அன்று மரணமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைவதுடன் அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆம்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

4 ஆம் குறுக்குவீதி, யாழ்ப்பாணம். (10680)(3,6,7)

ஆசிரியர் நலன்புரிகழகம்
யா /சென்.மேரீஸ் வித்தியாலயம்.(OLR)

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் குமாரசாமி



மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் குமாரசாமி நேற்று (20.11.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், அன்னலட்சுமியின் அன்புக்கணவரும், சறோஜினிதேவி, ஜெயலலிதா, செங்கதரன் (ஆசிரியர்-யா/ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி, புத்தூர்), கிருபாகரன், கேதீஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாவகுலநாதன் (அச்சு வேலி), சிவானந்தம் (முத்தையன்கட்டு), சசிகலா (ஆசிரியை -யா/ஸ்ரீ சோமாஸ்கந்தாக் கல்லூரி, புத்தூர்), நிறைஞ்ஜினிதேவி (இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மாமனும், தயாளசோபன், நிரோசனா, சாரங்கா, ரஜீனா, கிரிசோபிதன், மதுசாளினி, கோபிதா ஆகியோரின் பாசமிகு பேரனும், சிவானந்தம்மா, பரமேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற யோகலிங்கம் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.11.2011) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன்கோயில் வீதி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.
(10681)(5,6,7)

### திருமதி இரத்தினசபாபதி நாகம்மா

(செல்லக்கிளி)



வளலாயைப் பிறப்பிடமாகவும் ஆடியபாதம் வீதி, கேணியடிலேன், திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினசபாபதி நாகம்மா கடந்த (13.11.2011) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினசபாபதியின் (செல்லக்கிளி) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான விசாலாட்சி, இரத்தினவேல் ஆகியோரின் அன்புச் சகோதரியும், லலிதா, ஆயிலியதேவி சிவகுமார் (வெள்ளை - சுவிஸ்), மகேஸ்வரி, புவனேஸ்வரி, பரமேஸ்வரி (சுவிஸ்), உதய குமார் (சுவிஸ்), சிவாஜினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் சிவசுப்பிரமணியம், சந்திரகுமார், ரஞ்சினி (சுவிஸ்), ரவிந்திரலால் (ந.ப.நோ.கூ.ச), குளோத்துங்கன், காலஞ்சென்ற மார்க் ரவிந்திரன் (சுவிஸ்), இந்துமதி (சுவிஸ்), ரமேஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும். நிறோயா, சங்கீதா, மயூரன், ரஜி, சசிலன், பிரசாந்தினி, கார்த்தி யாயினி, சுபித்தா, றோய், அபிகாயில், இலக்யன், உபர்ணா, ரவீன், சுவேதிகா, அனசிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பிரியதர்சன், சாரங்கன், திவிசன், அச்சிகா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.11.2011 புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.பகல் 2 மணியளவில் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆடியபாத வீதி,
கேணியடிலேன்,
திருநெல்வேலி. (10678) (4-6-7)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்.

# இராணுவ சபைக்கு எதிராக எகிப்தில் போராட்டம்



கெய்ரோ (ரொய்ட்டர்), நவ.21

எகிப்தின் தலைநகரான கெய்ரோவிலும், மற்றுமிரு நகரங்களிலும் இராணுவ நிர்வாக சபைக்கு எதிராகப் போராட்டங்களை மேற்கொண்ட ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும், பொலிஸாருக்குமிடையே மூண்ட மோதலில் இருவர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர்.

30 ஆண்டுகளாக ஜனாதிபதியாகவிருந்த ஹொஸ்னி முபாரக், கடந்த பெப்ரவரியில் இடம்பெற்ற 18 நாள்கள் புரட்சியால் பதவியிழந்தார். அவர் பதவி கவிழ்க்கப்பட்டதை அடுத்து, இராணுவ சபை அமைக்கப்பட்டது.

தற்போது பொதுத்தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை ஆளும் ஜெனரல்கள் மேற்கொண்டுள்ளார்கள். இச்சமயத்தில் தஹ்ரீர் சதுக்கத்தில் ஆயிரக்கணக்கான எகிப்தியர்கள் திரண்டு, ''எங்களுக்கு ஊழல் மிகுந்த இராணுவ சபையோ, உள்ளூராட்சி அமைச்சோ தேவையில்லை'' எனக் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள்.

தஹ்ரீர் சதுக்கத்தில் திரண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் வன்முறையிலும் ஈடுபட்டார்கள். நடைபாதை சிமெந்து பாளங்களை உடைத்து, பொலிஸாரை நோக்கி வீசினார்கள். இந்தச் சதுக்கத்துக்கருகில் அமைந்துள்ள உள்துறை அமைச்சுக் கண்மையிலும் ஆர்ப்பாட்டக்காரர்கள் வன்முறையில் ஈடுபட்டார்கள்.

ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைக்க பொலிஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்தனர். சதுக்கத்துக்கான வழிகளில் தடுப்புகளை ஏற்படுத்தினர். அதேவேளை, எதிர்வரும் 28ஆம் திகதி தேர்தல்கள் ஆரம்பமாகும் என இராணுவ சபை அறிவித்துள்ளது.

'கலகக்காரர்களை' கலைக்க பொலிஸார் சட்டபூர்வமான நடைமுறைகளையே கையாண்டனர் என பாதுகாப்பு அதிகாரியொருவர் சனிக்கிழமை ரொய்ட்டருக்குத் தெரிவித்தார். அமைதிப் போராட்டத்தை மேற்கொண்ட தங்கள் மீது மிலேச்சனத்தனமான நடவடிக்கைகளைப் பொலிஸார் கட்டவிழ்த்துவிட்டனர் எனப் போராட்டக்காரர்கள் குறிப்பிட்டார்கள்.

பொதுமக்கள் தற்போது இராணுவ விசாரணைக்கு உட்படுத்தப்படுகிறார்கள். புதிய அரசு பதவியேற்றாலும் இந்நடைமுறை நீடிக்கலாம் என மக்கள் அஞ்சுகின்றனர். அரச யாப்பு வரைவுத் திட்டத்தில் பொது மக்களுக்கான கட்டுப்பாட்டு அதிகாரம் இராணுவத்திடம் சிக்கிவிடக்கூடாது என இவர்கள் கோரிக்கை விடுக்கிறார்கள்.

இதுவிடயத்தில், அரசியல் கட்சிகளுக்கும், இராணுவ சபைக்குமிடையே முரண்பாடுகளும், முறுகல் நிலையும் உருக்கொண்டுள்ளன.

கெய்ரோவில் இடம்பெற்ற மோதலில் 676 பேர் காயமடைந்தனர். கடுங்காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஆர்ப்பாட்டக்காரரான 23 வயது அமீத் மஹ்மூத் அங்கு காலமானார் என சுகாதார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார் என அரச செய்தி நிறுவனமான மினா குறிப்பிட்டது.

## இளவரசர் வில்லியம் மனைவி தாய்மை

இலண்டன், நவ. 21

இளவரசர் வில்லியம் மனைவி கர்ப்பமாக உள்ளார். பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸ் - டயானா தம்பதியின் புதல்வர் இளவரசர் வில்லியம் திருமணம் கடந்த மே மாதம் கோலாகலமாக நடந்தது. அவர் தனது காதலி கேத் மிடில்டன் (வயது - 29) என்பவரை கரம் பிடித்தார். தற்போது இவர்கள் கேம்பிரிட்ஜ் அரண்மனையில் தங்கியுள்ளனர்.

கேத்மிடில்டன் 6 வார கர்ப்பமாக இருக்கிறார் என செய்தி வெளியாகியுள்ளது. இந்தத் தகவலை லண்டனிலிருந்து வெளிவரும் 'இன்டச்' என்ற பத்திரிகை தெரிவித்துள்ளது. அதில் கேத்மிடில்டன் தற்போது 6 வார கர்ப்பமாக இருக்கிறார் என்றும் அக்குழந்தை பெண்ணாக இருக்க வேண்டும் என இளவரசர் வில்லியம் ஆசைப்படுகிறார் என்றும் கூறப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களுக்கு முன்னரே கேத் மிடில்டன் கர்ப்பம் அடைந்திருக்கிறார் எனத் தகவல் வெளியானது. அப்போது அது வதந்தி எனக் கூறப்பட்டது.

## பாகிஸ்தானுக்கு அணுசக்தி பொருளை அனுப்பிய அமெரிக்கா வாழ் சீனப் பெண்

வாஷிங்ரன், நவ. 21

அமெரிக்காவில் வசிக்கும் சீனப்பெண் ஷன் வாங்க். இவர் அமெரிக்காவிலுள்ள பிபிஜி பெயிண்ட்ஸ் டிரேடிங் கம்பனியின் மேலாண் இயக்குநராக இருந்தார்.

1998ஆம் ஆண்டு பாகிஸ்தான் அணு குண்டு வெடித்து சோதனை செய்ததைத்தொடர்ந்து அந்த நாட்டுக்கு அணுசக்தி தொடர்பான பொருள்களை ஏற்றுமதிசெய்வதற்கு அமெரிக்கா தடைவிதித்திருந்தது.

இந்தத் தடையை மீறி இவர் பாகிஸ்தானுக்கு பெயிண்ட் கோட்டிங்குகளை அனுப்பி வைத்தார். இதை அவரே ஒப்புக்கொண்டார். பாகிஸ்தானில் சாஸ்மா என்ற இடத்தில் சீனா அமைத்துவரும் அணு உலைக் கூடத்துக்கு தேவைப்பட்ட இந்தப் பொருள்களை அவர் அனுப்பி வைத்தார். இது இப்போது தெரியவந்துள்ளது.

இதைத்தொடர்ந்து இவர் மீது நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. வழக்கு விசாரணையின்போது குற்றச்சாட்டை ஷன் வாங்க் ஒப்புக்கொண்டார்.

## பூமியைத் துளைத்து தாக்கும் 13 தொன் எடை வெடிகுண்டு

### அமெரிக்கா தயாரிப்பு

பூமியைத் துளைத்து தாக்கும் 13 தொன் எடை வெடிகுண்டை அமெரிக்கா தயாரித்துள்ளது. கடந்த 2007ஆம் ஆண்டில் ஈரானும், வட கொரியாவும் பூமிக்கு அடியில் துளைத்துச் சென்று தாக்கும் அணுகுண்டுகளைத் தயாரித்துள்ளன என அமெரிக்கா கருதுகிறது.

இந்த குண்டு பூமியில் 200 அடி ஆழத்துக்கு ஊடுருவிச் சென்று தாக்கும் வல்லமை படைத்தது. இது தங்களின் பாதுகாப்புக்குக் கடும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் எனக் கருதிய அமெரிக்கா தானும் அது போன்ற அணுகுண்டை தயாரித்துள்ளது. தற்போது அதில் ஓர் அணுகுண்டு மட்டும் அமெரிக்க விமானப்படையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தத் தகவலை விமானப்படையின் செய்தித்தொடர்பாளர் மில்லர் தெரிவித்துள்ளார்.

## ஏசியான் மாநாட்டின் போது ஒபாமா - சீனப் பிரதமர் சந்தித்துப் பேச்சு

பாலி, நவ. 21

'ஏசியான்' மாநாட்டின்போது, அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவும், சீனப் பிரதமர் வென் ஜியாபோவும் சந்தித்துப் பேசினர். இதில், இரு தரப்பு வர்த்தகம், கரன்சி மதிப்புப் பற்றி விவாதிக்கப்பட்டது.

'ஏசியான்' மாநாட்டில் ஒபாமாவும், வென் ஜியாபோவும் சந்தித்துப் பேசுவது குறித்து முன்பே திட்டமிடப்படவில்லை. எனினும், சனிக்கிழமை இரவு உணவுக்கு முன்னர் இருவரும் சந்தித்துப் பேசினர். இச்சந்திப்பின்போது, சீனக் கரன்சியின் மதிப்பு உயர்த்தப்படுவது குறித்தும், தென் சீனக் கடல் எல்லை தகராறுகள் பற்றியும் ஒபாமா பேசினார்.

ஆஸ்திரேலியாவின் வட பகுதியிலுள்ள டார்வின் துறைமுகத்தில் அடுத்தாண்டு முதல் அமெரிக்கக் கடற்படை குவிக்கப்படும் என்ற ஒபாமாவின் அறிவிப்புக்குப் பின்னர் இந்தச் சந்திப்பு நிகழ்ந்துள்ளது.

இந்தத் திடீர் சந்திப்பின் போது, புகைப்பட மற்றும் தொலைக்காட்சி நிருபர்கள் மட்டும் அனுமதிக்கப்பட்டனர். அச்சுப் பத்திரிகை நிருபர்கள் அனுமதிக்கப்படவில்லை.

## பாகிஸ்தானிலிருந்து அஞ்சி வெளியேற வேண்டாம்

### இந்துக்களிடம் ஷெரீப் வேண்டுகோள்

கராச்சி, நவ. 21

பாகிஸ்தானில் பாதுகாப்பில்லை எனக் கூறி இந்தியாவுக்குச் செல்லவேண்டாம் என்று இந்துக்களுக்கு முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் சமீபத்தில் மூன்று இந்து டாக்டர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். இது தொடர்பாக, 11 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பாகிஸ்தான் அரசு தெரிவித்துள்ளது.

இதற்கிடையே, கொல்லப்பட்ட டாக்டர்களின் குடும்பத்தினரைச் சந்தித்து முன்னாள் பிரதமரும், பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சித் தலைவருமான நவாஸ் ஷெரீப், ஆறுதல் கூறினார்.



ஏசியான் மாநாட்டில் ஐக்கிய நாட்டு சபையின் செயலர் பான் கீ-மூன் மியான்மர் நாட்டு அதிபர் தைன் செயினும் மற்றும் முக்கிய உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

# புதிய அரசில் எங்களுக்கும் பிரதிநிதித்துவம் தேவை

## லிபிய முன்னாள் போராளித் தலைவர் பேட்டி

திரிபோலி, நவ. 21

புதிய அரசில் எங்களுக்கும் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும். தவறும்பட்சத்தில் எமது ஆதரவாளர்களால் இந்த அரசும் தூக்கி எறியப்பட்டுவிடும் என லிபிய முன்னாள் போராளிகளின் தளபதியும், தலைவருமான அப்துல்லா நகீர், தாம் ரொய்ட்டருக்கு அளித்துள்ள பேட்டியொன்றில் எச்சரிக்கை விடுத்தார்.

லிபிய தேசிய இடைக்கால நிர்வாகசபையால் வியாழக்கிழமை அப்துர் ரஹீம் எல்-கெய்ப் இடைக்காலப் பிரதமராக நியமிக்கப்பட்டார். இவர் அமெரிக்காவில் பயிற்சிபெற்ற பொறியியல்துறை பேராசிரியராவார். இவர் எதிர்வரும் செவ்வாய்க்கிழமைக்குள் அமைச்சரவையை நிறுவுவதற்கு உடன்பாடு தெரிவித்துள்ளார்.

முன்னாள் போராளிகள் தலைவர் அப்துல்லா நகீர், புதன்கிழமை அரசு க்கட்டமைப்பு நிறுவன தலைமையகத்தில் தமது பேட்டியை அளித்தார். அவர் அதில், ''இன்னும் நாங்கள் களத்தில்தான் நிற்கின்றோம். இறுதி முடிவு எங்களுடையதே'' என்றார்.

''எமது அணியில் ஆயிரக்கணக்கான ஆயுததாரிகள் இருக்கிறார்கள். இந்த அணி கலைக்கப்பட்டதும் பாதுகாப்புச் சேவையில் இவர்களும் உள்வாங்கப்படவேண்டும். நகர இராக்கால ரோந்துப்பணிகளில் இவர்கள் ஈடுபடுத்தப்படலாம்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

''முன்னைய எதேச்சதிகாரியை வெளியேற்றிய இளம் தீவிரவாதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களையும் அமைச்சர்களாக நியமிக்கலாம். அதேவேளை, புதிய அமைச்சரவை எமக்கு அதிருப்தி அளிக்குமானால், எமது ஆதரவாளர்கள் நாடளாவிய ரீதியில் அதற்கு அமைதியான முறையில் முதலில் எதிர்ப்புத் தெரிவிப்பார்கள்'' என்றும் அவர் தெரிவித்துக்கொண்டார்.

''நாம் மீண்டும் ஓர் எதேச்சதிகாரத்தை ஏற்கத் தயாரில்லை. அப்படி எதிர்கொள்ள நேரிட்டால் கடாபியை தூக்கி எறிந்ததைப்போல அதனையும் தூக்கி எறிந்துவிடுவோம்'' என்றும் அவர் தெரிவித்துக் கொண்டார்.

இதையடுத்து, இவர் 'வீடியோ' காட்சியொன்றைக் காட்டினார். கடாபிக்கு எதிரான போரில் இவரது போராளிகள் ஏவுகணைத் தாக்குதலில் ஈடுபடுகிறார்கள். சோவியத் நிர்மாண ரி-72 தாங்கிகளைச் செலுத்துகிறார்கள். வீடியோவில் இக்காட்சிகள் இடம்பெற்றிருந்தன.

உதயன்
21 நவம்பர் 2011 திங்கட்கிழமை

# கம்பர்மலை யங்கம்பன்ஸ் வெற்றிக் கிண்ணம் டயமன்ஸை வீழ்த்தி உடுப்பிட்டி நவஜீவன் சம்பியன்

யாழ்ப்பாணம், நவ.21

வடமராட்சிப் பிரதேசத்துக்கு உட்பட்ட கழகங்களுக்கிடையே கம்பர் மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய 'ருவென்ரி-20' கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக்கழகம் சம்பியன் ஆனது.

இந்தச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் கடந்த புதன் கிழமை கம்பர் மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்றது. இறுதிப் போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக் கழகமும், வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன.

நாணயச் சுழற்சியில் வெற்றியீட்டிய உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக் கழகம் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

எதிர் அணியின் பந்து வீச்சுக்களை சிதறடித்த நவஜீவன் விளையாட்டுக்கழக வீரர்கள் 20 ஓவர்கள் முடிவில் 6 இலக்குகளை இழந்து 142 ஓட்டங்களை பெற்றனர். இதில் நிருஷாந்த் 57 ஓட்டங்களையும், உஷா 42 ஓட்டங்களையும் தமது அணிக்காக பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் டயமன்ஸ் விளையாட்டுக் கழக வீரர்களான பிரதீஸ், பிறேம் குமார், சுரேந்திரா ஆகியோர் தலா ஒரு இலக்கினை வீழ்த்தினர்.

143 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற நிலையில் களம் இறங்கிய டயமன்ஸ் அணி வீரர்கள் வேகமாக அடித்தாட முற்பட்டனர். இதனால் இலக்குகள் மளமளவெனச் சரிந்தன. டயமன்ஸ் அணி 10 ஓவர்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து வெறும் 52 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது. இதனால் 90 ஓட்டங்களால் டயமன்ஸ் அணியை வீழ்த்தி உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுகழகம் வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

டயமன்ஸ் அணி சார்பாக அதிக பட்சமாக சுரேந்திரன் 16 ஓட்டங்களை பெற்றார். ஏனையோர் சொற்ப ஓட்டங்களுக்கு களத்தை விட்டு அகன்றனர்.

பந்து வீச்சில் உடுப்பிட்டி நவஜீவன் அணியைச் சேர்ந்த அசோக் 3 இலக்குகளையும், உஷா, நகீதன், நிருஷாந்த் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

ஆட்ட நாயகனாக உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக்கழக அணிவீரர் நிருஷாந்தும், ஆட்டத் தொடர் நாயகனாக டயமன்ஸ் அணி வீரர் சுரேந்திராவும் தெரிவு செய்யப்பட்டனர். (ங-23)

# நவீல்ட் மாணவர்களுக்குப் பதக்கம்



யாழ்ப்பாணம், நவ.21

இலங்கை கராத்தே சம்மேளனத்தால் வடமாகாணத்துக்கான கராத்தே சுற்றுப் போட்டி அண்மையில் அடைக்கல அன்னை ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

மேற்படி போட்டியில் நவீல்ட் பாடசாலை மாணவர்கள் ஒரு தங்கப் பதக்கத்தையும் மூன்று வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றுள்ளனர்.

பதக்கம் பெற்ற மாணவர்கள் பரிசளிப்பு விழாவின் போது கௌரவிக்கப்பட்டனர்.

கௌரவிக்கப்பட்ட மாணவர்கள், விருந்தினர்கள் மற்றும் கல்லூரி அதிபர் வி.எஸ். மகேந்திரன் கராத்தே ஆசிரியர் சென்சேய் எஸ்.விஜயராஜ் ஆகியோருடன் படத்தில் காணப்படுகின்றனர். (த-23)

# கூடைப்பந்தாட்டப் போட்டி டிசெம்பரில் ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம்,நவ.21

யாழ்.மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கம் கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

இந்தச் சுற்றுப் போட்டியில் பங்கு கொள்ள விரும்பும் கழகங்கள் விண்ணப்பப்படிவங்களை யாழ்.மாவட்டக் கூடைப் பந்தாட்டச் செயலாளரிடம் பெற்றுப் பூர்த்தி செய்த பின்னர் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டிக்கான ஒழுங்கு நிரல் தயாரிக்கும் நிகழ்வு எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

எனவே விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகள் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (த-23)



நுவரெலியா பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற தேசிய மட்ட ஆசிரியர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் 4×400 மீற்றர் அஞ்சல் ஓட்ட நிகழ்வில் தங்கப் பதக்கம் பெற்ற வடமாகாண பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்கள். (த-23)

# புத்தளத்தில் படகோட்டும் போட்டிகள்

யாழ்ப்பாணம், நவ.21

புத்தளம் ஐக்கிய மீனவர் சங்க ஏற்பாட்டில் ஹஜ் பெருநாளை முன்னிட்டு புத்தளம் கடற்பகுதியில் படகோட்டும் போட்டிகள் கடந்த வாரம் நடைபெற்றன.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினர்களாக புத்தளம் நகர பிதா கே.ஏ.பாயிஸ், வடமேல் மாகாண கடற்படைக் கட்டளைத் தளபதி அட்மிரல் றோஹண பெரேரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஏராளமான போட்டியாளர்கள் நிகழ்வில் பங்கேற்று தமது திறமைகளை வெளிப்படுத்தினர். (ங-23)

# திருமலை ஒலிம்பிக்ஸ் வென்றது

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் நடத்திய பிரிவு 3க்கான போட்டியில் திருகோணமலை ஒலிம்பிக்ஸ் கழகம் வெற்றி பெற்றது.

திருகோணமலை மெக்கெய்சர் மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணம் சிங்கிங் பிஷ் கழகத்திற்கும் ஒலிம்பிக்ஸ் கழகத்துக்கும் இடையே இப் போட்டி நடைபெற்றது.

போட்டியில் சிறப்பாக ஆடி 2:0 என்ற கோல் கணக்கில் திருகோணமலை ஒலிம்பிக்ஸ் கழகம் யாழ்ப்பாணம் சிங்கிங் பிஷ் கழகத்தை வெற்றி கொண்டது. (ங)

# கிளி. பாடசாலை மாணவர்களுக்கு கூடைப்பந்தாட்டப் போட்டி அறிமுகம்

யாழ்ப்பாணம், நவ.21

கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் நிலைய ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு கூடைப் பந்தாட்டத்தை அறிமுகம் செய்யும் நிகழ்வும், ஒரு நாள் பயிற்சி முகாமும் கிளிநொச்சி பொலிஸ் நிலைய மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தைச் சேர்ந்த சிரேஷ்ட, கனிஷ்ட அணி வீரர்கள் மேற்படி பயிற்சி முகாமில் மாணவர்களுக்கான பயிற்சிகளை வழங்கினர்.

இதன் போது யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்க சிரேஷ்ட அணிக்கும், கனிஷ்ட அணிக்குமிடையிலான கூடைப்பந்தாட்ட காட்சிப் போட்டி ஒன்றும் இடம்பெற்றுள்ளது.

இந்தப் போட்டியில் 34:31 என்ற புள்ளிகள் அடிப்படையில் சிரேஷ்ட அணி வெற்றி பெற்றது. (ங-23)

# மாத்தளை அணி வெற்றி

யாழ்ப்பாணம், நவ.21

இலங்கை ஹொக்கிச் சங்க ஏற்பாட்டில் தேசிய கனிஷ்ட மட்ட அணிகளுக்கிடையிலான 39 ஆவது ஹொக்கிப்போட்டியின் இறுதியாட்டம் அண்மையில் இடம்பெற்றது.

இதில் மாத்தளை மாவட்ட அணியை எதிர்த்து கொழும்பு மாவட்ட அணி மோதியது. இரு அணிகளும் இறுதி வரை ஒன்றுக்கு ஒன்று சளைக்காமல் விளையாடியதால் போட்டி நேரம் முடியும் வரை இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறமுடியவில்லை. இதனைத் தொடர்ந்து வழங்கப்பட்ட மேலதிக நேரத்தில் அபாரமாக ஆடிய மாத்தளை அணி ஒரு கோலைப் பெற்றுக் கொண்டது. இதனால் 1:0 என்ற கோல் கணக்கில் கொழும்பு அணியை வீழ்த்தி மாத்தளை அணி வெற்றிக் கிண்ணத்தை வென்றது. (ங-23)

# சிநேகபூர்வ போட்டி

யாழ்ப்பாணம், நவ.21

யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்த சங்க அணிக்கும், சென். ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் அணிக்கும் இடையிலான சிநேகித பூர்வ உதைபந்தாட்டப்போட்டி நாளை செவ்வாய்க்கிழமை மாலை 3.30 மணிக்கு சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ங-23)

# அராலி சரஸ்வதி ம.வி. நடத்தும் கரப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம்,நவ.21

அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சங்கானை கல்விக் கோட்டப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவினருக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி எதிர்வரும் டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இந்தப் போட்டியில் பங்கு கொள்ள விரும்பும் பாடசாலைகள் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-23)



இலங்கை கராத்தே சம்மேளனத்தினால் தேசிய ரீதியாக கறுப்பு பட்டிக்காக நடத்தப்பட்ட தேசிய பரீட்சையில் சித்தியடைந்த சோட்டோக்கான் கராத்தே அக்கடமி இன்ரநாசனல் ஆசிரியர்களாக சாந்தரூபன், ரஞ்சித், உருத்திரகுமார், முருகானந்தம், டாக்டர் குலேந்திரன், துசானந்தன் ஆகியோருடன் பயிற்சி வழங்கிய பிரதம ஆசிரியர் சிகான் அன்ரே டினேஸ், வடமாகாண கராத்தேச் சங்கத் தலைவர் சென்சே றேமன் கபிரியல்.

# அசத்தினார் அப்ரிடி! தொடரைக் கைப்பற்றியது பாகிஸ்தான்


அப்ரிடி

அப்ரிடியின் அசத்தலான அதிரடி அரைச்சதம் மற்றும் அசத்தல் பந்து வீச்சு கைகொடுக்க இலங்கை எதிரான நான்காவது ஒரு நாள் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி 26 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இலங்கை அணி இறுதி 6 இலக்குகளும் 19 ஓட்டங்களுக்குள் வீழ்த்தப்பட்டன.

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான ஒரு நாள் தொடர் இடம்பெற்று வருகின்றது. இதில் இரு ஆட்டங்களிலும் பாகிஸ்தான் அணியும் ஒரு ஆட்டத்தில் இலங்கை அணியும் வெற்றி பெற்றிருந்தன. வென்றாக வேண்டிய கட்டாயத்தில் நான்காவது ஒரு நாள் ஆட்டத்தில் இலங்கை அணி நேற்று களம் புகுந்தது. சார்ஜா மைதானத்தில் நேற்று இடம்பெற்ற நான்காவது ஒரு நாள் ஆட்டத்தில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

**இலகுவான இலக்கைக் கூட தொட முடியாது கோட்டை விட்டது இலங்கை அணி**


டில்ஷானின்
ஆட்டமிழப்புக்

அதன்படி களமிறங்கிய பாகிஸ்தான் அணிக்கு மொஹமட் ஹபீஸ், இம்ரான் பகாட் மெதுவான ஆரம்பத்தை கொடுத்தனர். முதலாவது இலக்குக்காக 18 ஓட்டங்கள் பெறப்பட்ட நிலையில் டில்ஹாரவின் பந்து வீச்சில் பகாட் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இரண்டாவது இலக்குக்காக ஹபீஸுடன் இணைந்து யுனிஸ்கான் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினர். மிகமெதுவாகவே இந்த ஜோடி ஓட்டங்களைச் சேர்த்தது. 80 பந்துகளில் பாகிஸ்தானின் அணி 50 ஓட்டங்களைக் கடந்தது. இரண்டாவது இலக்குக்காக 39 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் ஹபீஸ் 27 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து பாகிஸ்தானின் இலக்குகள் மளமளவெனச் சரிந்தன. அணி 62 ஓட்டங்களை எட்டியிருந்த போது யுனிஸ்கான் 18 ஓட்டங்களுடன் வெளியேறினார். அடுத்து நுழைந்த மலிக், உமர் அக்மல் தலா 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினர். பாகிஸ்தான் அணி 71 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்திருந்தது. அடுத்து 'பூம் பூம்' அப்ரிடி களம்புகுந்தார். வந்தவேகத்திலேயே அதிரடியாக 4 ஓட்டங்கள் விளாசி தனது கணக்கினை தொடங்கினார். மிஷ்பாவுடன் இணைந்து 6 ஆவது இலக்குக்காக வேகமாக ஓட்டங்களைச் சேர்த்தார். இறுதியில் 6 ஆவது இலக்குக்காக 26 ஓட்டங்கள் பகிரப்பட்ட போது மிஷ்பா 16 ஓட்டங்களுடன் 'ரன் அவுட்டானார்.' அதன் பின்னர் நுழைந்த இலக்குக் காப்பாளர் சப்றாஸ், அப்ரிடியுடன் இணைந்து ஆட்டத்தை தொடர்ந்தார். 34.2 பந்து பரிமாற்றங்களில் பாகிஸ்தான் அணி 120 ஓட்டங்களைப் பெற்ற போது சப்றாஸ் 10 ஓட்டங்களுடன் சீகுகே பிறசன்னவின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

அடுத்து அஜ்மல் களம்புகுந்தார். துடுப்பாட்ட பவர்பிளே யில் பாகிஸ்தான் அணி நிதானமாகவே ஆடி மேலதிக இலக்கு இழப்பைத் தடுத்தது. பின்னர் அதிரடியாக ஓட்டங்களைக் குவிக்கத் தொடங்கிய அப்ரிடி 52 பந்துகளில் தனது 32 ஆவது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். 8 ஆவது இலக்குக்காக மிகச் சிறப்பாக 61 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் அப்ரிடி ஆட்டமிழந்தார். அப்ரிடி 65 பந்துகளில் 3 ஆறு ஓட்டங்கள், 4 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 75 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்து ஆட்டமிழந்தார்.

அதனைத் தொடர்ந்து பாகிஸ்தானின் ஆட்டம் முடிவுக்கு வந்தது. 49.3 பந்து பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 200 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது. அஜ்மல் 20 ஓட்டங்களைப் பின் வரிசையில் பெற்றுக் கொடுத்தார்.

பந்து வீச்சில் இலங்கை அணி சார்பில் டில்ஹாரா 10 பந்து பரிமாற்றங்கள் பந்து வீசி 3 ஓட்டமற்ற பந்து பரிமாற்றங்கள் அடங்கலாக 26 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளை கைப்பற்றினார். ஜீவன் மென்டிஸ், சீகுகே பிரசன்ன தலா 2 இலக்குகளை கைப்பற்றினர்.


பதிலுக்கு மிகவும் இலகுவான இலக்கை விரட்டத் தொடங்கிய இலங்கை அணிக்கு ஆரம்பமே சறுக்கியது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக தரங்க, டில்ஷான் களம்புகுந்தனர். தரங்க வேகமாக ஓட்டங்களைக் குவித்து இலங்கையின் பதிலடியைத் தொடக்கி வைத்தார். இருப்பினும் 3.3 பந்து பரிமாற்றத்திலேயே இலங்கை அணி முதலாவது இலக்கை பறிகொடுத்தது. தரங்க 13 பந்துகளில் 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். அணித்தலைவர் டில்ஷானும் 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். அடுத்து நுழைந்த இளம் வீரர் டினேஸ் சந்திமால் நிதானமாக ஆடிய போதும் நீண்ட நேரம் நிலைக்கவில்லை. இலங்கை அணி 64 பந்துகளில் 50 ஓட்டங்களைக் கடந்தது. 53 ஓட்டங்களைப் பெற்ற போது மூன்றாவது இலக்கையும் இழந்தது. சந்திமால் 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த வெளியேறினார். இதன் பின்னர் சங்ககார, மஹேல ஜோடி இணைந்து ஆட்டத்தை முன்னெடுத்தது. நிதானமாக மேலதிக இலக்கு இழப்பை தடுத்து வெற்றியிலக்கை நோக்கி முன்னேறியது. மிகச் சிறந்த இணைப்பாட்டத்தை பகிர்ந்து பாகிஸ்தானுக்கு தலையிடி கொடுத்தது இந்த ஜோடி. சிறப்பாக துடுப்பெடுத்தாடிய சங்ககார தனது 66 ஆவது அரைச் சதத்தை பூர்த்தி செய்தார். மறுமுனையில் ஆடிய ஜெயவர்தனவும் தனது 62 ஆவது அரைச் சதத்தை பூர்த்தி செய்தார்.

சங்ககார, மஹேல இருவரும் நேற்றைய தினம் நான்காவது இலக்குக்காக 100 ஓட்டங்களைப் பகிர்ந்தத் மூலம் சர்வதேச ஒரு நாள் ஆட்டத்தில் இருவருக்குமிடையில் 12 ஆவது தடவை 100 ஓட்டங்களைப் பகிர்ந்து கொண்டனர். அணி 155 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 4 ஆவது இலக்கை இழந்தது. சங்ககார 58 ஓட்டங்களுடன் அப்ரிடியின் பந்து வீச்சில் 'போல்டாகி' வெளியேறினார். அடுத்து நுழைந்த மத்தியூஸ் ஓட்டமெதனையும் பெறாமல் அஜ்மலின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார். 156 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்து இலங்கை அணி தடுமாறியது. தொடர்ந்து வந்த ஜீவன் மென்டிஸ் 2 ஓட்டங்களுடன் வெளியேற இலங்கையின் ஆட்டம் திசைமாறியது.

அணி 168 ஓட்டங்களைப் பெற்றபோது சிறப்பாக துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த மஹேலவும் 55 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இலங்கையின் 7 ஆவது இலக்கும் சரிக்கப்பட்டது. மஹேலவின் ஆட்டமிழப்பை தொடர்ந்து நுழைந்த சீகுகே பிரசன்ன முதலாவது பந்திலேயே ஆட்டமிழக்க இலங்கை 8 ஆவது இலக்கையும் 168 ஓட்டங்களிலேயே பறிகொடுத்தது.

அடுத்து களம்புகுந்த மலிங்க 4 ஓட்டங்களுடனும், திஸ்ஸர பெரேரா 7 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க இலங்கையின் ஆட்டம் 174 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது. இதன் மூலம் பாகிஸ்தான் அணி 26 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. பந்து வீச்சில் பாகிஸ்தான் சார்பில் அப்ரிடி 5, ஷீமா, அஜ்மல் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக பாகிஸ்தானின் அப்ரிடி தெரிவானார்.(15)

# வெற்றியை நோக்கி ஆஸ்திரேலியா


ரிக்கி பொண்டிங்

**ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி இரண்டாவது இன்னிங்ஸிற்காகத் 3 இலக்குகளை மாத்திரம் இழந்து 142 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. வெற்றி பெறுவதற்கு 168 ஓட்டங்கள் தேவையாகவுள்ள நிலையில் கைவசம் 7 இலக்குகளுடன் ஆஸ்திரேலிய அணி துடுப்பெடுத்தாடி வருகின்றது.**

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் செய்துள்ள ஆஸ்திரேலிய அணி அங்கு விளையாடி வருகின்றது. முதலாவது டெஸ்ட்டில் தென்னாபிரிக்க அணி அபார வெற்றியைப் பதிவு செய்திருந்தது. இந்த நிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் ஜொகர்னஸ்பேர்க்கில் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

முதலில் ஆடிய தென்னாபிரிக்க அணி சகல இலக்குகளையும் இழந்து 266 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் ஆபிரிக்கா சார்பாக டீ வில்லியர்ஸ் 64, கலிஸ் 54, டுமினி 50 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பில் சிடில் 3, நதன் லயோன், மைக்கல் கிளார்க் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் ஆடிய ஆஸ்திரேலிய அணி 296 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான ஹீயூகெஸ், வொட்ஸன் தலா 88 ஓட்டங்களையும் ஜோன்சன் ஆட்டமிழக்காமல் 38 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் ஆபிரிக்கா சார்பில் ஸ்ரெய்ன் 4, இம்ரான் தகீர் 3 இலக்குகளை கைப்பற்றினர்.

30 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய தென்னாபிரிக்க அணி அம்லாவின் அசத்தலான சதத்தின் உதவியுடன் சகல இலக்குகளையும் இழந்து 339 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

நேற்று முன்தினம் ஆட்டநேர முடிவில் இரண்டாவது இன்னிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 229 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்திருந்தது. நேற்றைய ஆட்டம் ஆரம்பித்த சிறிது நேரத்தில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த டீ வில்லியர்ஸ் 73 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க ஆபிரிக்க அணி 237 ஓட்டங்களுக்கு தனது 4 ஆவது இலக்கை இழந்தது.

மறுமுனையில் சிறப்பாக ஆடிய அம்லா தனது 14 ஆவது சர்வதேச டெஸ்ட் சதத்தை பூர்த்தி செய்தார். அம்லாவும் 105 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க ஆபிரிக்காவின் ஆட்டம் அடங்கியது. தொடர்ந்த வந்த பிறின்ஸ் 2, பௌச்சர் 13 ஓட்டங்களுடன் ஆட்ட மிழக்க 266 ஓட்டங்களுக்கு 7 இலக்குகளை இழந்து தடுமாறியது. அதன் பின்னர் ஜோடி சேர்ந்த ஸ்ரெய்ன், பிளின்டர் இருவரும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினர். மதிய போசன இடைவேளை வரை தாக்குப்பிடித்த இவர்களின் இணைப்பு பின்னர் தகர்ந்தது. 48 ஓட்டங்கள் 8 ஆவது இலக்குக்காகப் பகிரப்பட்ட நிலையில் பிளின்டர் 23 ஓட்டங்களுடன் வெளியேறினார். இறுதியில் ஸ்ரெய்ன் 41 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க ஆபிரிக்க அணி 339 ஓட்டங்களுடன் அதன் ஆட்டத்தை முடித்துக் கொண்டது. பந்து வீச்சில் குமின்ஸ் 6 இலக்குகளைக் கைப்பற்றினார்.


அம்லா

310 ஓட்டங்களை வெற்றியிலக்காக் கொண்டு துடுப்பெடுத்தாடத் தொடங்கிய ஆஸி அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியளித்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான வொட்ஸன் ஓட்டமெதனையும் பெறாமலும், ஹீயூகெஸ் 11 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க ஆஸி 19 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை இழந்து தடுமாறியது. அதன் பின்னர் இணைந்த உஸ்மான் ஹாவாஜா மற்றும் பொன்டிங் இருவரும் ஆட்டத்தின் போக்கை மாற்றியமைத்தனர்.

மூன்றாவது இலக்குக்காக இருவரும் 122 ஓட்டங்களை பகிர்ந்து கொண்டனர். சிறப்பாக ஆடிய உஸ்மான் ஹாவாஜா 65 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். நேற்றை ஆட்டநேர முடிவில் ஆஸி. அணி 3 இலக்குகளை இழந்து 142 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. களத்தில் பொன்டிங் 54 ஓட்டங்களுடனும், கிளார்க் ஒரு ஓட்டத்துடனும் உள்ளனர். வெற்றி பெறுவதற்கு இன்றைய இறுதி நாளில் 168 ஓட்டங்கள் பெற்றுக் கொள்ள வேண்டும். (15)

## ஆயுதங்கள் மீட்பு

வவுனியா கல்மடு பிரதேசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை காலை வவுனியா குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவால் ஆயுதங்கள் சில மீட்கப்பட்டுள்ளன. வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்குக் கிடைத்த தகவலை அடுத்து அந்தப் பகுதியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களை மீட்டுள்ளனர்.

## புலிகளை வெல்ல முடியுமென நம்பியவர் கோத்தபாய மட்டுமே

கொழும்பு, நவ.21

கோத்தபாய ராஜபக்ஷ மாத்திரமே தமிழீழ விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக தோற்கடிக்கலாம் என நம்பிக்கையைக் கொண்டிருந்தார் என நோர்வேயின் முன்னாள் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் கூறியதாக நோர்வேயின் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நோர்வே அறிக்கையில் தகவல்

2008 ஆம் ஆண்டுவரை இந்திய புலனாய்வுப் பிரிவின் எந்தவொரு அதிகாரியும் விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக தோற்கடிக்க முடியும் என நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. ஆனால் எம்.கே. நாராயணன் மற்றும் ஏனைய அதிகாரிகள் தமது ஆரம்ப கருத்துகளுக்கு முரணாக,

பின்னர் நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு, விடுதலைப் புலிகளை இலங்கை இராணுவத்தால் தோற்கடிக்க முடியும் என்ற நிலைப்பாட்டுக்கு வந்தனர் என சொல்ஹெய் கூறியதாக நோர்வேயினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காகூட விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்படுவது தொடர்பாக எதிர்மறையான கருத்தையே கொண்டிருந்ததாக எரிக் சொல்ஹெய்ம் கூறியுள்ளார் என்று மேலும் குறிப்படப்பட்டுள்ளது.

# மரண அறிவித்தல்

## திருமதி தனலட்சுமி இரத்தினசிங்கம் (தவம்)



இல.14, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, மாளிகாவத்தையை தற்காலிக வசிப்பிடமாகவும் யாழ்ப்பாணம், கச்சேரி கிழக்கு ஒழுங்கையை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனலட்சுமி இரத்தினசிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியை) கடந்த (19.11.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா -தங்கரத்தினம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான கந்தர்- சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகளும், கே.கே. இரத்தினசிங்கத்தின் (கொழும்பு சுடர்ஒளி பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியர்) அன்பு மனைவியும், ஜெயந்தி, அரவிந்தன் (U.K) ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம், சரஸ்வதி மற்றும் தயாநிதி (ஓய்வுபெற்ற தாதி), லோகேஸ்வரன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கோமளேஸ்வரி (கனடா), காலஞ்சென்றவர்களான விக்கிரமாராச்சி, குணபாலசிங்கம் மற்றும் சுசிலா (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும், சசீந்திரன் (உதவிப் பிராந்திய முகாமையாளர்- மக்கள் வங்கி), சுதந்தினி(U.K) ஆகியோரின் பாசமிகு மாமியும், ஜெயபாலன்(கொழும்பு), யாதவன் (கொமர்ஷல் கிரடிட்), லகுஷியா ஆகியோரின் பெரியதாயும், ஜெயந்தினி (நோர்வே), ஜகதீசன்(கனடா), ஜெயதீபா (கனடா), கார்த்திகா (பிரான்ஸ்), ஜனார்த்தனன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியும், பவித்திரா, பிரீத்திகா (S.L.I.T.T), பிருந்தா(வேம்படி ம.உ.பா), சினேகா(U.K), நிவேதா(U.K) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.11.2011) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் (இல.14, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம்) மு.ப 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.14, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## தமிழ் மக்களின் பிரச்சினையை இனங்கண்டு தீர்வை முன்வைக்க கூட்டமைப்பால் முடியாது

### இராணுவத் தளபதி தெரிவிப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் பிரச்சினைகளை உரியமுறையில் இனங்கண்டு சரியான தீர்வினை முன்வைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது- இவ்வாறு இலங்கையின் இராணுவத்தளபதி ஜெகத் ஜெயசூரிய தெரிவித்துள்ளார்

பிரான்ஸ் தூதுவரை சந்தித்தபோதே இராணுவத் தளபதி இந்தக் கருத்தினை வெளியிட்டுள்ளார். வடக்கு, கிழக்கில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் விலக்கிக்கொள்ளப்படவேண்டும் என கூட்டமைப்பினர் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுக்கான தமது விஜயத்தின் போது விடுத்த கோரிக்கை தொடர்பாகவே ஜெகத் ஜெயசூரிய இந்த கருத்தை தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவு கட்சியாகும். எனவே அதன் கருத்துக்கள் கோரிக்கைகள் என்பன தமிழீழ விடுதலைப்புலிகளைமையப்படுத்தியதாகவே அமைந்திருக்கும். இலங்கை இராணுவம் வடக்குகிழக்கில் கைவிடப்பட்ட பாடசாலைகளிலேயே முகாமிட்டுள்ளது.

இராணுவம் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை. உண்மையில் அரசியல்வாதிகளுக்கு பாதுகாப்பளிக்கும் கடமையைத்தான் இராணுவம் செய்துகொண்டிருக்கிறது- என்றார்.

யாழில் 150க்கு மேற்பட்ட பொதுமக்களின் வீடுகளில் மட்டுமே தற்போது இராணுவத்தினர் முகாமிட்டுள்ளனர் எனவும், அவை படிப்படியாக உரிமையாளர்களிடம் கையளிக்கப்படும் என்றும் யாழ்.இராணுவ கட்டளைத் தளபதி மஹிந்த ஹத்துருசிங்க அண்மையில் தெரிவித்திருந்த கருத்துக்களையும் இராணுவத் தளபதி இதன்போது நினைவூட்டினார்.

## 22 ஆம் ஆண்டு நினைவலைகள்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 02 ❋ 02 ❋ 1969 | 09 ❋ 12 ❋ 1989 |

### சங்கரப்பிள்ளை தேவசாந்தி

இருபத்திரண்டு ஆண்டுகள்
இதயத்தில் இருந்த இனிய மகளே!
இனிமையான இளம் மலரே!
இதயத்தில் நாதமாக பதிந்த
இன் முகமான சாந்தியே!
உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனை இறைஞ்சுகின்றோம்...

கைதடி மேற்கு,
கைதடி.

திரு. திருமதி சங்கரப்பிள்ளை
குடும்பத்தினர்.

(10683)(5,6)

# மரண அறிவித்தல்

## நாகநாதி தம்பாப்பிள்ளை

*(ஓய்வுபெற்ற தபால் ஊழியர், அச்சுவேலி தபால் நிலையம்)*



அச்சுவேலி, பத்தமேனியைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நாகநாதி தம்பாப்பிள்ளை கடந்த 20.11.2011 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகநாதி - சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கதிரேசு - சின்னக்குட்டி தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற சிந்தாமணியின் அன்புக் கணவரும் கலா, கௌசலா, சிவபாலா, விமலா, சுதாகரன், றயுகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயரட்ணம், குணராசா, சாந்தினி, மோகனராசா, கவிதா, நளாயினி ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி, றோஸ், மகேஸ்வரி, இராஜேஸ்வரி, பொன்னம்பலம் தனேஸ்வரி ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம், அன்னபாக்கியம் மாணிக்கர், நவரட்ணம், சுப்பிரமணியம், துரைசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் செந்தூரன், சாருகன், டயானா, லாவண்யா, லவீனா, சுவீட்சன், மிதுஸன், அபிஷா, சுமங்கல்யா, சுகாஸ், டிலானி, மகிஷா, லாகிஸா, டினுஜன் ஆகியோரின் பாசமிகு பாட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை மறுதினம் (23.11.2011) புதன்கிழமை மு.ப. 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கௌ்ளவும்.

*சுன்னாகம் கிழக்கு,*
*சுன்னாகம்.*

தகவல்:
தம்பாப்பிள்ளை குடும்பத்தினர்.

## எதிர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுகள் சுமுகமாக - சாதகமாக முடிவடைந்துள்ளன என்று உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் கொழும்பு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரே கட்சி தாவும் பட்டியலில் முதன்மை வகிக்கின்றார் என்று கூறப்படுகின்றது.

அரசியலில் நிபுணத்துவம் வாய்ந்த திறமைமிக்க அவர், அரசு பக்கம் 'பல்டி' யடித்த மறுகணமே முக்கிய பொறுப் பொன்றையும் ஏற்கவுள்ளார்.

பிரதியமைச்சர் பதவி வழங்கி அவரை அழகுபடுத்திப் பார்ப்பதற்கு அரச தரப்பு இணங்கியுள்ளது என்று தகவல்.

அடுத்தபடியாக ஐ.தே.க. சார்பில் மாத்தறை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் அரசுடன் இணையவுள்ளார்.

குறித்த நாடாளுமன்ற உறுப்பினரான அரசு பக்கம் இழுத்துக்கொள்வது தொடர்பான பேச்சுகளை அரச தரப்பு முக்கியஸ்தர்கள், மேற்படி எம்.பியின் மாமனாரும், முன்னாள் வெளிநாட்டுத் தூதுவர் பதவி வகித்தவருமான அந்த அதிகாரியுடன் நடத்தியுள்ளனர்.

இதன்போது, மருமகன் அரசுடன் இணைவார் என்ற உறுதிமொழியை அந்த அதிகாரி அரசு தரப்புக் குழுவுக்கு வழங்கியுள்ளார் என நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனநாயக தேசியக் கூட்டமைப்பிலுள்ள பிரபல்யமான எம்.பி.ஒருவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. ஒருவர் உட்பட மேலும் சிலர் அரசு பக்கம் வெகு விரைவில் 'அந்தர் பல்டி' அடிப்பர் என்று நம்பகரமாகத் தெரிய வருகிறது.

அதேவேளை, கட்சித் தாவ உள்ளோருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு அந்தந்தக் கட்சிகளின் தலைமைப்பீடம் தீவிரமாக ஆராய்ந்து வருகிறது என அறியமுடிகிறது. (ஒ-சி)

## அருந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றையதினம் மாலை 3 மணிக்கு வாக்கெடுப்பு நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்பின்னர் டிசம்பர் மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகும் வரவு - செலவுத் திட்டம் மீதான (மூன்றாம் வாசிப்பு) விவாதம் டிசம்பர் 21 ஆம் திகதிவரை நடைபெறும். அன்றைய தினம் இறுதி வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

இந்தக்காலப்பகுதிக்குள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் வெளிநாடு செல்லக்கூடாது என அரசு அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

வரவு - செலவுத் திட்டத்தை நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதற்கு முன்னர் அரசு அண்மையில் உத்தேச நிதி ஒதுக்கீட்டு சட்டமூலத்தை நாடாளுமன்றில் சமர்ப்பித்தது.

வழமைபோல் இந்தத் தடவையும் பாதுகாப்பு அமைச்சுக்கே அதிகளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில் பாதுகாப்புக்கு ஏன் அதிகளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என எதிர்க்கட்சியினர் கேள்விக் கணைகளைத் தொடுத்துள்ளனர். அத்துடன், வரவு - செலவுத்திட்டத்தில் மக்களுக்கு நிவாரணம் இல்லையேல் ஆர்ப்பாட்டங்கள் வெடிக்கும் என அவர்கள் எச்சரித்துள்ளனர்.

பொருள்களின் விலையேற்றம், வேலையற்ற பட்டதாரிகளின் இறுதி எச்சரிக்கை உட்பட வரவு - செலவுத்திட்டம் குறித்து பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையிலேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை இன்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கின்றார்.

வரவு - செலவுத்திட்டத்தில் மக்கள்நலத் திட்டங்களுக்கு நிவாரணம் கிடைக்கவேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பாகும். மூன்றிலிரண்டு பெரும்பான்மையைக் கொண்டுள்ள அரசு இலகுவில் வரவு - செலவுத்திட்டத்தை நிறைவேற்றிக்கொள்ளும் என பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். (ஒ-சி)

## ரணில் மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிராக 20 குற்றச்சாட்டுகள் அடங்கிய குற்றப்பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது. தென்மாகாணசபை உறுப்பினர் மைத்திரி குணவர்த்தன இந்தக் குற்றப்பத்திரத்தை கட்சியின் பொதுச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்கவிடம் கையளித்துள்ளார்.

றோசி சேனநாயக்க, புத்திக பத்திரன, துனேஸ் கங்கந்த, இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், சந்திரா கங்கந்த, சிரால் லக்திலக, பந்துலால் பண்டாரிகொட, லக்ஸ்மன் லன றோல் மற்றும் பலர் இந்தக் குற்றப்பத்தி ரத்தில் சாட்சிகளாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

20 குற்றச்சாட்டுக்களில் ஒன்றாக ரணில் விக்கிரமசிங்க, இளம் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஒருபாலுறவுக்கு நிர்ப் பந்தித்தார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரனவை ரணில் விக்கிரமசிங்க ஒருபாலுறவுக்கு அழைத்தார் என்றும், அவர் மறுத்துவிட்டதால், கட்சியின் உறுப்பினர் பதவியில் இருந்து தற்காலிகமாக அவரை நீக்கித் தண்டித்தார் எனவும் கூறப்பட்டுள்ளது.

இலங்கை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேயும், மேர்வின் சில்வாவும் பகிரங்க தொலைகாட்சி விவாதம் ஒன்றில், ஐ.தே.க. தலைவர் கட்சியின் இளம் நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்குகிறார் என்று கூறிய தகவல்களும் ஆதாரமாகச் சேர்க்கப்பட்டுள்ளன. (உ)

## பொன்சேகாவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு உரையாற்றுகையிலே எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள அப்பாவித் தமிழ் இளைஞர், யுவதிகளின் பெயர் விவரங்களையே வெளியிடாத அரசு, பயங்கரவாத நடவடிக்கைகளுக்காக பணம் வழங்கிய கே.பியை சுக போகங்களுடன் பாதுகாக்கின்றது. என்றும் குறிப்பிட்டார். (ஒ-ங)

## தமிழர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பிலிருந்து வெளியாகும் 'சண்டே ரைம்ஸ்' வாரஇதழின் அரசியல் ஆசிரியர் எழுதியுள்ளார்.

அறிக்கை பற்றி அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஆணைக்குழு பெற்ற தகவல்களை அடிப்படையில் விசாரணை நடத்துவதற்குத் தேவையான அடிப்படைச் சான்றுகள் இருப்பதால், இறுதிப் போரில் இடம்பெற்ற குற்றங்கள் குறித்து விசாரணை நடத்தப்படவேண்டும் என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ஆனால் விசாரணை செய்யப்பட வேண்டிய சம்பவங்கள் குறித்தோ, அவற்றுக்குப் பொறுப்பானவர்கள் யார் என்றோ எவரது பெயரையும் ஆணைக் குழு குறிப்பிடவில்லை.

400 பக்கங்களைக் கொண்ட இந்த அறிக்கையில், இலங்கை இராணுவத்தினர் படுகொலைகளை மேற்கொண்டனர் என்று கூறும் 'சனல்-4' தொலைக்காட்சி வெளியிட்ட காணொளி முற்றிலும் போலியானது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## சம்பூர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னேற்றக் கழகத் தலைவர் வைகோ கருத்துத் தெரிவித்துள்ள நிலையில் இந்தத் தகவல் வெளியாகி உள்ளது.

''இலங்கையில் தமிழர்களை இனப்படு கொலை செய்தவர்களுக்கு மின்சாரம் வழங்குவதற்காக ஏன் தமிழக மக்கள் தமது உயிர்களை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்க வேண்டும்'' என்று கேள்வி எழுப்பியிருக்கிறார் வைகோ.

மத்தியில் ஆட்சியில் இருக்கும் காங்கிரஸ் அரசு, இலங்கைத் தமிழர் விவகாரத்திலோ அல்லது முல்லைப் பெரியார் அணைக்கட்டு விவகாரத்திலோ அக்கறை செலுத்தாத அதேவேளை, கூடங்குளம் அணு மின் நிலையத்தை செயற்படுத்துவதில் மட்டும் கன உறுதியாக இருக்கிறது என்று குற்றச்சாட்டியுள்ள வைகோ, ''ஏனென்றால் அது இலங்கை அரசுக்காக'' என்றும் கூறியுள்ளார்.

முன்னதாக இரு வாரங்களுக்கு முன்னர் சம்பூர் அனல்மின் நிலையம் குறித்த இறுதி ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவிருந்தது. ஆனாலும், இலங்கை மின்சார சபையின் சாத்திய வள ஆய்வறிக்கையின்படி அதனை உடனடியாக செய்யாதிருக்கத் தீர்மானிக்கப்பட்டது. இதனால்-ஒப்பந்தம் இறுதி நேரத்தில் பிற்போடப்பட்டது.

சம்பூர் அனல்மின் நிலைய இறுதி ஒப்பந்தத்தை விரைவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமென்றும், குறைகள் மிக விரைவில் களையப்பட்டுவிடும் எனவும் இலங்கை அரசு இந்தியாவிடம் பின்னர் உறுதியளித்தது.

சம்பூர் அனல்மின் நிலைய இறுதி ஒப்பந்தம் தாமதமாவது குறித்து கவலை வெளியிட்டிருக்கும் இந்தியா, இறுதி ஒப்பந்தத்தை முதலில் செய்துவிட்டு பின்னர் அதிலுள்ள குறைகளை நிவர்த்திசெய்யலாமென்று இலங்கையிடம் யோசனையொன்றை முன்வைத்தது. ஆனாலும், இந்தியாவின் இந்த யோசனை இலங்கை அரசால் உடனடியாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

சம்பூர் அனல்மின் நிலைய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட முன்னர், கூடங்குளத்திலிருந்து கடல் வழியாக இலங்கைக்கு மின்சாரம் வழங்கும் இந்தியாவின் திட்டத்தை உறுதிசெய்வதற்கு இலங்கை விரும்புவதாகத் தெரிகிறது. அந்தத் திட்டம் உறுதியாகும்வரை சம்பூர் அனல்மின் நிலைய இறுதி ஒப்பந்தத்தை செய்யாதிருக்க இலங்கை உள்ளூர் தீர்மானித்துள்ளதாக நம்பகமாக அறிய முடிகின்றது.

இந்த விடயம் குறித்து கருத்து வெளியிட்ட அரசின் சிரேஷ்ட அதிகாரியொருவர் கூறியதாவது:-

இலங்கையிலிருந்து இந்தியாவிற்கும், இந்தியாவிலிருந்து இலங்கைக்கும் மின்சாரம் வழங்கப்படவேண்டும் என்பதுதான் எமது ஒப்பந்தங்களின் இலக்கு கூடங்குளத்திலிருந்துஇலங்கைக்கு மின் வழங்க தமிழ் நாட்டில் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. அதனை மீறித் திட்டம்உறுதிசெய்யப்படவேண்டும்.

தமிழ்நாடு, கூடங்குளம் அணு மின்நிலையத்திலிருந்து கடல்வழியாக இலங்கைக்கு மின்சாரம் வழங்கப்படும் திட்டம் தாமதமாகும் பட்சத்தில் திருகோணமலை சம்பூர் அனல்மின் நிலையத்திற்கான இறுதி ஒப்பந்தத்தைக் கைச்சாத்திடுவதிலும் தாமதம் ஏற்படலாமென்று நம்பகரமாகத் தெரியவருகிறது. அதனை மீறி இந்தத் திட்டம் உறுதிப்படுத்தப்பட்வேண்டும். அப்போதுதான் இருக்கும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து நாம் சம்பூர் அனல்மின் நிலைய ஒப்பந்தத்தில் கைச்சாத்திடமுடியும்'' - என்றார் அந்த அதிகாரி. (உ-சி)

## முல்லைத்தீவிலுள்ள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகிய பிரதேசசபைகளுக்கான தேர்தல்களே டிசெம்பரில் நடைபெறவுள்ளன.

இதேவேளை, முல்லைத்தீவில் நேற்று முன்தினம் வரை, 44.637 பேர் குடியமர்த்தப்பட்டுள்ளனர். 7500 பேர் வவுனியாவில் உள்ள இடைத்தங்கல் முகாம்களான கதிர்காமர் மற்றும் ஆனந்த குமாரசுவாமி ஆகிய நலன்புரி நிலையங்களில் இன்னமும் தங்கியுள்ள நிலையில் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப் பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-ங)



## மரண அறிவித்தல்



### கதிரவேல் பரமானந்தம் (ராசா)

பிறவுண்வீதி 5ஆம் ஒழுங்கையை பிறப்பிடமாகவும் 154/60 ஆத்திசூடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேல் பரமானந்தம் நேற்று (20.11.2011) ஞாயிற்றுக்கிழமை காமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேல்சுவாமி-நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், பேரம்பலம், சர்வானந்ததேவி, மீனா காலஞ்சென்றவர்களான நித்தியானந்ததேவி, ஜோகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் பொன்ராசா, மாசிலாமணி, சிவரட்ணம், ரவீ, பசுபதி, சிவராசா, விசையலட்சுமி, துரைமணி, தையல்நாயகி காலஞ்சென்ற கனகசபை(சின்னத்தம்பி) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், சற்குணத்தின் (தேவி) கணவரும், மோகன்(பிரான்ஸ்), பிரபாகரன்(பிரான்ஸ்) ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ப.சற்குணம்(தேவி)மனைவி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### லயன் M.P. ஷண்முகநாதன்
### லயன் சீமாட்டி திருமதி உருத்திராதேவி ஷண்முகநாதன்

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் பழைய மாணவரும், முன்னாள் தொழில்நுட்பவியலாளரும், முன்னாள் யாழ். மாவட்ட சமாதான நீதிவானும், அரச மும்மொழிபெயர்ப்பாளரும், ஆங்கில-சிங்கள ஆசானுமாகிய

லயன் M.P. ஷண்முகநாதன் அவர்களையும், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி பழைய மாணவியும், கொழும்பு-மியூசியஸ் கல்லூரி, யாழ். சென். பற்றிக்ஸ், கணித, விஞ்ஞான, ஆங்கில பட்டதாரி ஆசிரியையும், மும்மொழிதேர்ச்சியாளருமான லயன் சீமாட்டி திருமதி உருத்திராதேவி ஷண்முகநாதன் அவர்களையும்

கடந்த 16.11.2011 இல் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா அவர்கள் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவான்களாக சத்தியப்பிரமாணம் செய்தமையைப் பாராட்டி மகிழ்வதுடன் அவர்களது சேவை மேலும் சிறப்புற்று நீடித்து விளங்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்:
மக்கள், பெறாமக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

சாவகச்சேரி. (C/2862)(5.6)

# யாழ். அத்தியடியில் ஆயுதபாணிகள் நால்வர் நேற்று அதிகாலை வீடு புகுந்து கொள்ளை

## நகைகள், பணம், கைத்தொலைபேசி சூறை

யாழ்ப்பாணம்,நவ.21

யாழ்.நகர் அத்தியடி, அம்பலவாணர் வீதியில் வாள், கத்தி ஆகிய ஆயுதங்களுடன் வீடு புகுந்த நால்வர் நகைகள், பணம், மற்றும் கைத்தொலை பேசி போன்றவற்றைச் சூறையாடிச் சென்றனர்.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் கூரை வழியாக நுழைந்த கொள்ளையர்கள் வீட்டில் இருந்தவர்களின் கைகளைக் கட்டி வைத்து விட்டு இந்தத் துணிகரமான கொள்ளையில் ஈடுபட்டனர்.

யாழ். மத்தியஸ்தர் சபையின் தலைவர் எஸ்.ஸ்ரீசக்திவேல் என்பவரின் வீட்டிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சுமார் 10 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள், ரொக்கப் பணம் 5 ஆயிரம் ரூபா, கைத்தொலைபேசி போன்றவை கொள்ளையிடப்பட்டுள்ளன என்று ஸ்ரீசக்திவேல் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் குறித்து யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

தமது மனைவியிடம் இருந்த நகைகளை அபகரித்த கொள்ளையர்கள் மற்றைய நகைகள் எங்கே எனக் கேட்டு அச்சுறுத்தினர் என்றும் முறையிடப்பட்டுள்ளது.

(ஒ-4)

# திருமதி தனலட்சுமி காலமானார்



உதயனின் சகோதரப் பத்திரிகையான 'சுடர்ஒளி" யின் ஸ்தாபக ஆசிரியரும் பத்திரிகைத்துறையில் ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றிய மிக மூத்த பத்திரிகையாளருமான கே.கே.இரத்தினசிங்கம் அவர்களின் அருமைத் துணைவியார் தனலட்சுமி, நேற்றுமுன்தினம் காலமானார். அவருக்கு வயது 78.

திருமதி தனலட்சுமி ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர். மிக நீண்டகாலமாக கொழும்பு விவேகானந்தாக் கல்லூரியிலும் நல்லூர் விக்னேஸ்வரா வித்தியாலயத்திலும் கடமையாற்றினார்.

காலஞ்சென்ற ஆசிரியையின் பூதவுடல் யாழ்ப்பாணம், கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இறுதிக்கிரியைகள் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

# நான் குற்றமிழைத்ததாக அரசிடம் ஒருபோதும் ஒத்துக்கொள்ளவில்லை

## — மறுக்கிறார் திஸ்ஸநாயகம் —

கொழும்பு, நவ.21

ஐக்கிய நாடுகளின் சித்திரவதைகளுக்கு எதிரான குழுவின் கேள்விகளுக்கு கடந்த நவம்பர் 9 ஆம் திகதி பதிலளித்த போது இலங்கை அரசாங்கத்தின் சட்ட ஆலோசகர் மொஹான் பீரிஸ், திஸ்ஸநாயகம் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதன் காரணமாகவே அவருக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டதாக தெரிவித்திருந்தார்.

அவருடைய வழக்கில் ஈடுபட்டவன் என்ற அடிப்படை யில் தமக்கு இது தெரியும் என்றும் மொஹான் பீரிஸ் குறிப்பிட்டிருந்தார். எனினும் மொஹான் பீரிஸின் கூற்றை திஸ்ஸநாயகம் மறுத்துள்ளார்.

தனிப்பட்ட காரணங்களுக்காக எவரும் பொதுமன்னிப்பை கோரமுடியும். ஆனால் இலங்கை அரசாங்கம் தம்மீது சுமத்தியிருந்த குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டு மன்னிப்பை கோரியதாக தெரிவிக்கப்பட்ட தகவல் பிழையானது. நான் எவ்வித குற்றங்களையும் மேற்கொள்ள வில்லை -என்று திஸ்ஸநாயகம் கூறியுள்ளார்.

இனங்களுக்கு இடையில் முறுகல்களைத் தோற்றுவிக்க முயற்சித்ததாக குற்றம்சாட்டப்பட்ட ஊடகவியலாளர் திஸ்ஸ நாயகம் 2008 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம், குற்றவாளியாக இனங்காணப்பட்டதால் அவருக்கு 20 வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. எனினும் பின்னர் ஜனாதிபதியினால் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டு அவர் விடுதலையானமை குறிப்பிடத்தக்கது.

(ங)

# கொழும்பு - கட்டுநாயக்க வீதியுடன் தெற்கு அதிவேக பாதை இணைப்பு

## விரைவில் நடவடிக்கை என்கிறது அரசு

கொழும்பு,நவ.21

தெற்கு அதிவேக வீதியை கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக வீதியுடன் இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அரசு தெரிவித்துள்ளது.

2013ஆம் ஆண்டளவில் இந்த நடவடிக்கை பூர்த்தியடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பின்னதுவ தொடக்கம் மாத்தறை வரையில் தெற்கு அதிவேக வீதியை அமைக்கும் நடவடிக்கைகள் முழுமையாகப் பூர்த்தியடைந்துள்ளன.

அதேவேளை, தெற்கு அதிவேக வீதியை அண்மித்த பகுதிகளிலுள்ள அரச வைத்தியசாலைகளில் நிலவும் பற்றாக்குறைகள் தொடர்பான தகவல்களை உடன் வழங்குமாறு சுகாதார அமைச்சு சம்பந்தப்பட்ட வைத்தியசாலை அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளது.

தெற்கு அதிவேக வீதியில் ஏற்படும் விபத்துகளுக்கு உடன் சிகிச்சையளிக்கும் பொருட்டே சுகாதார அமைச்சு இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது.(ஒ-சி)

# துமிந்தவைக் கைதுசெய்ய இதுவரை இன்டர்போலை இலங்கை நாடவில்லை

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் கொலை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவை கைது செய்யுமாறுநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளபோதிலும் அவரைக் கைது செய்வதற்கான எந்தவித நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லை என்று இலங்கை ஆங்கில நாளிதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர, கடந்த ஒக்டோபர் 8 ஆம் திகதி முல்லேரியாவில் வைத்து கொலை செய்யப்பட்டார்.

இந்தபடுகொலை வழக்கின் சந்தேகநபர்களில் ஒருவரான துமிந்த சில்வா, தற்போது சிங்கப்பூரில் சிகிச்சை பெற்று வருகிறார். இதனால் அவரைக் கைது செய்ய இன்டர்போலின் உதவியை இதுவரை இலங்கையின் பொலிஸார் நாடவில்லை என்று செய்தித்தாள்கள் தெரிவித்துள்ளன.

கடந்த 15 ஆம் திகதி, நடைபெற்ற இந்தக்கொலை தொடர்பான விசாரணையின் போது, துமிந்த சில்வாவை கைது செய்யவேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. குறித்த கொலை வழக்கு விசாரணை எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

(ங)

# பெருந்தோட்டக் காணிகளில் இரத்தினக்கல் அகழ்வு அமைச்சரவை விரிவாக ஆராய்கிறது

## அமைச்சர் தொண்டமான் ஆட்சேபம்

கொழும்பு,நவ.21

பெருந்தோட்டக் காணிகளில் இரத்தினக்கல் அகழ்வது தொடர்பில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலைமை குறித்து அமைச்சரவைக் கூட்டத்தின்போது விரிவாக ஆராயப்பட்டிருக்கிறது.

இரத்தினபுரி மற்றும் பொகவந்தலாவை பகுதிகளில் உள்ள பெருந்தோட்டக் காணிகளில் இரத்தினக்கல் அகழ்வை மேற்கொள்வதற்கு அரசு தீர்மானித்திருந்தது. இதற்கான அமைச்சரவை அனுமதிகோரும் பிரேரேணை முன்னர் அமைச்சரவைக்கு வந்தபோது அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் இதற்கு ஆட்சேபனை தெரிவித்ததாகக் கூறப்படுகிறது

பெருந்தோட்டக் காணிகளில் இரத்தினக்கல் அகழ்வு நடைபெறுவதானது தோட்ட மக்களையும் அவர்களது எதிர்காலத்தையும் பாதிக்குமென அமைச்சர் தொண்டமான் அமைச்சரவைக் கூட்டத்தில் சுட்டிக்காட்டியிருந்தார். இந்த நிலையில், கடந்த புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக்கூட்டத்திலும் இதுபற்றி விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

பெருந்தோட்டங்களைத் தனியார் கம்பனிகள் நிர்வகித்தாலும் அவற்றின் காணிகள், காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவிற்கே சொந்தமானது என்பதால் அவற்றில் எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கான அதிகாரம் உள்ளதென அமைச்சரவையில் சில அமைச்சர்களால் விளக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து விரிவாக விவாதிக்கப்படவேண்டியிருப்பதால், பெருந்தோட்டக் காணிகளில் இரத்தினக்கல் அகழ்வது தொடர்பிலான தீர்மானத்தைத் தொடர்ந்து ஆராயுமாறு கடந்த அமைச்சரவைக் கூட்டத்தின்போது ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

(ஒ-சி)

# சுவர் இடிந்து வீழ்ந்து இரு சிறுமிகள் பலி!

கட்டடச் சுவர் இடிந்து வீழ்ந்ததில் சகோதரிகள் இருவர் உயிரிழந்த சம்பவம் தம்பகால, கல்பொக்கவில் இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை மேற்படி சகோதரிகள் இருவரும் தமது வீட்டில் படித்துக்கொண்டிருந்த போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

தம்பகால, கல்பொக்க பகுதியைச் சேர்ந்த 8 மற்றும் 10 வயதுடைய சகோதரிகளே இவ்வாறு பலியாகினர் எனப் பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

காணி விற்பனைக்கு

நெல்லியடிச் சந்தியில் இருந்து ½ கி.மீற்றர் தூரத்தில் நெல்லியடி, பருத்தித்துறை வீதிக்கு கிழக்குப் பக்கமாகவும், அவ்வீதியை மேற்கு எல்லையாகவும், வீதிப்பக்கம் 23 அடி அகலத்தையுமுடைய 2 பரப்பு நீள சதுரக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு:0714720177,0773140495

கணினி மலிவு விற்பனை

P iv கணினி மற்றும் LCD Monitor மற்றும் அதனுடன் கூடிய அனைத்துப் பொருள்களும் 23,750/= விலையில் விற்பனைக்கு உண்டு. Free 4 GB Pen/Web cam

SKY Computer

162, பிரதான வீதி, யாழ். / 737, K.K.S. Road,
021 222 1417 / யாழ். 222 4865, 0750698608
Skype, V/Call, Internet பாவிக்கலாம்
ஒரு வருட உத்தரவாதம் உண்டு.
மொத்தமாக DDR 1, DDR II, DDR III, Power S/Y.

மாபெரும் மலிவு விற்பனை

(இலுப்பையடிச் சந்திக்கும் ஆனைப்பந்திச் சந்திக்கும் இடையில்)

| | | |
|---|---|---|
| இரும்புக் கட்டில் | 6660 | 4250 |
| மரக் கட்டில் | 7260 | 6000 |
| ஸ்ரீல் அலுமாரி | 13500 | 11250 |

(மெத்தை(Arpico), கணினிமேசை, கணினிகதிரை, ரெசின்ரேபிள், சோக்கேஸ், அயன்ரேபிள், பிளாஸ்ரிக் கதிரைகள் மற்றும் அலுவலக, வீட்டுத்தளபாடங்கள்)





தொடர்புகளுக்கு– 0773583879, 0212227892

பணிநிலை வேண்டுகை

* இணைய உதவியாளர்
1.முழுநேரம்
2.பகுதிநேரம்
* விற்பனை உதவியாளர்:-
* ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.
* விண்ணப்ப முடிவு திகதி:- 24.11.2011
* கணினியில் அடிப்படை அறிவு அவசியம்
* நகர எல்லைக்குள் தங்கியிருக்க வேண்டும்.
* விண்ணப்பிக்க விரும்புவோர் சுய விபரத்துடன் கீழ்க்காணும் முகவரிக்கு நேரில் சமுகம் தரவும்.

பிரகாஷ் எலக்ரோனிக்ஸ்
பஸ்நிலையம், பருத்தித்துறை
T.P:0212263652

விற்பனைக்கு



செங்கல், கருங்கல், சீமெந்து கல், அத்திவார கற்கள், சல்லி கற்கள், நிலப்பதிப்புக் கற்கள், பூவடிவ கற்கள், கொங்கிறீட் கதிரை செட்
கருங்கல் தூள்

பிரணவன் என்ரபிறைசஸ்

பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(சங்கிலியன் சிலைக்கு முன்)
077 3818799

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.11.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.